DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Kailain Thillainathan Sales Representative
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1389
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 18, 2022

# CUPE பிரதிநிதிகளுடன் நாம் பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்தபோது நம்பிக்கைகளோடு தான் இருந்தோம். ஆனால் நல்ல முடிவு கிட்டவில்லை

## பல்லினப் பத்திரிகையாளர்களோடு நடத்திய ஊடகச் சந்திப்பில் மாகாண கல்வி அமைச்சர் விசனம் தெரிவிப்பு — (ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)



கடந்த திங்கட் கிழமை தொடக்கம் மீண்டும் பணிகளுக்கு திரும்புகின்றோம் என்று தெரிவித்து எம்முடன் பேச்சுவார்த்தைக்கு வந்தார்கள் ஒன்றாரியோ மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் CUPE தொழிற்சங்கப் பிரதிநிதிகள். மேற்படி தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மீண்டும் நாம் பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்தபோது நல்ல நம்பிக்கைகளோடு தான் இருந்தோம். ஆனால் அவர்கள் அதிக சம்பள உயர்வையே மீண்டும் வலியுறுத்தினார்கள். பாடசாலை மாணவர்கள் வகுப்பறைகளிலிருந்து கற்பதை அவர்கள் விரும்பவில்லை. மாணவர்களின் நலன்களிலும் பார்க்க அவர்கள் தங்கள் சொந்த நலனைத்தான் விரும்புகின்றார்கள் போலும். அதனால் எமது பேச்சுவார்த்தைகள் மூலம் நல்ல முடிவு கிட்டவில்லை" "

(தொடர்ச்சி 2ம் பக்கத்தில்)

# 48 வாத்திய இசைப் போட்டியாளர்களுக்கிடையில் பைரவி நுண்கலைக் கூடம் நடத்திய இறுதிச் சுற்று பார்வையாளர்களின் மனங்களைக் கவர்ந்தது





கனடாவில் வெற்றிகரமான ஒரு இசைப் பயிற்சிக் கூடமாகவும் இசைக்குழுவாகவும் புகழ்பெற்று விளங்கும் பைரவி நுண்கலைக் கூடம் 48 வாத்திய இசைப் போட்டியாளர்களுக்கிடையில் கடந்த 12-11-2022 சனிக்கிழமையன்று நடத்திய 3வது இறுதிச் சுற்றுப் போட்டியானது அங்கு சபையில் அமர்ந்திருந்த நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் மனங்கவர்ந்த ஒரு இசை நிகழ்வாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

(தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்டனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்

கனடிய செய்திகள்
Canadian News

# CUPE தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மீண்டும் நாம் பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்தபோது நல்ல நம்பிக்கைகளோடு தான் இருந்தோம். ஆனால் நல்ல முடிவு கிட்டவில்லை

## பல்லினப் பத்திரிகையாளர்களோடு நடத்திய ஊடகச் சந்திப்பில் மாகாண கல்வி அமைச்சர் விசனம் தெரிவிப்பு

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**

"கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் பணிகளுக்கு திரும்புகின்றோம் என்று தெரிவித்து எம்முடன் பேச்சுவார்த்தைக்கு வந்தார்கள் ஒன்றாரியோ மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் CUPE தொழிற்சங்கப் பிரதிநிதிகள். மேற்படி தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மீண்டும் நாம் பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்தபோது நல்ல நம்பிக்கைகளோடு தான் இருந்தோம். ஆனால் அவர்கள் அதிக சம்பள உயர்வையே மீண்டும் வலியுறுத்தினார்கள். பாடசாலை மாணவர்கள் வகுப்பறைகளிலிருந்து கற்பதை அவர்கள் விரும்பவில்லை. மாணவர்களின் நலன்களிலும் பார்க்க அவர்கள் தங்கள் சொந்த நலனைத்தான் விரும்புகின்றார்கள் போலும். அதனால் எமது பேச்சுவார்த்தைகள் மூலம் நல்ல முடிவு கிட்டவில்லை".

இவ்வாறு நேற்று பிற்பகல் ஒன்றாரியோவில் உள்ள பல்லினப் பத்திரிகையாளர்களோடு நடத்திய ஊடகச் சந்திப்பில் மாகாண கல்வி அமைச்சர் ஸ்டிபன் லெச்சே அவர்கள் விசனத்துடன் தெரிவித்தார். கனடா உதயன் ஆசிரியர் பீடத்தின் உறுப்பினர்கள் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட பல்லின பத்திரிகையாளர்கள் அங்கு இணையவழி மூலம் ஊடகச் ச்நதிப்பில் கலந்து கொண்டனர்.

கேள்வி நேரத்தில் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் மிகுந்த அவதானமாக பதிலளித்தார். அவருடன் ஒன்றாரியோ கல்வி அமைச்சின் பாராளுமன்றச் செயலாளர்களாக உள்ள Parliamentary Assistants to the Minister of Education, எம்பிபி Patrice Barnes மற்றும் எம்பிபி Matt Rae, ஆகியோரும் அந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். அவர்கள் இருவரும் கூட பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

எமது கேள்விகளுக்கு பதிலளித்த கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே, வேலைநிறுத்தம் செய்வது என்ற "தேவையற்ற" முடிவால் அரசாங்கம் "மிகவும் ஏமாற்றமடைந்துள்ளது" என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "நாங்கள் நல்ல நம்பிக்கையுடன் மேஜையில் இருந்தோம், மிகக் குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு அர்ப்பணிப்பு மற்றும் தங்கள் குழந்தைகளை பாடசாலைகளில் கல்வி கற்கும் வகையில் வைத்திருப்பதில் பெற்றோரின் அர்ப்பணிப்புகளை நாம் வெளிப் படுத்தினோம். ஆனால் அவர்கள் மீண்டும் மாகாணத்தில் வேலைநிறுத்தத்தில் குதிக்க ஐந்து நாள் அறிவிப்பை மீண்டும் வழங்க அவர்கள் முடிவு செய்துள்ளனர்," என்று கூறினார்.



எமது பேச்சுவார்த்தைகளின் போது மத்தியஸ்த்தம் வகித்தவரின் வேண்டுகோளின் பேரில் மூடிய கதவுகளுக்குப் பின்னால் நாம் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இரு தரப்பினரும் இறுக்கமாகப் பேசவில்லை, ஆனால் கல்வி அமைச்சு "பல மேம்பட்ட சலுகைகளை" வழங்கியுள்ளது, இந்த சலுகைள் மற்றும் சம்பள அதிகரிப்பு ஆகியவற்றால் எமது அரசிற்கு "இத்துறை முழுவதும் நூறு மில்லியன் டாலர்கள் அளவில் செலவு செய்ய வேண்டி ஏற்படும் என்று அமைச்சர் லெஸ்சே மெலும் கூறினார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாடுகையில் கடந்த திங்களன்று, எமது அரசாங்கத்தின் சார்பில் எமது முதல்வர் டக் போர்ட் அவர்கள் வேலை நிறுத்தத்திற்கு எதிரான சட்டம் 28-ஐ ரத்து செய்து உரையாற்றினார். அது கூட இந்த தொழிற்சங்கத்தின் தலைவர்களை பாதிக்கவில்லை. இத எமக்கு ஆச்சரியமாக உள்ளது - இது சர்ச்சைக்குரிய போதிலும், வேலை நடவடிக்கையை முடித்து பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்புவதற்கான ஒரு நல்ல நம்பிக்கையின் முயற்சியில் சட்டத்தை ரத்து செய்வதாகவே எமது அரசாங்கம் உறுதியளித்தது.

வேலை நிறுத்தத்தில் குதித்த கல்வித் தொழிலாளர்களுக்கான அரசாங்கத்தின் கடைசிப் பேச்சுவார்த்தை நேரத்தில் வழங்கப்பட்ட சலுகையில் $43,000க்கும் குறைவாக வருமானம் ஈட்டுபவர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு 2.5 சதவீதமும், மீதமுள்ள தொழிலாளர்களுக்கு 1.5 சதவீதமும் அடங்கும். என தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் 11 வீத சம்பள உயர்வு மற்றும் சலுகைகளை எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் எமது விருப்பம் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் ஆகியவைக்காக அதிக பணத்தை முதலிட வேண்டும் என்பதே" என்றார்.


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

**வீட்டு வேலைக்கு பெண் ஒருவர் தேவை**

சமையல் உதவி, வீட்டு வேலைக்கு பெண் ஒருவர் உடனடியாகத் தேவை. பகிரும் அறையொன்றில் தங்கியிருக்கலாம்.
வேலை செய்ய வேண்டிய இடம்: **Maple.** நகரத்தில் **Weston road and Major Mackenzie** சந்திப்புக்கு அருகில்..
அழைக்க வேண்டிய இலக்கம் - *416 428 2141*

**காணி விற்பனைக்கு உள்ளது**

யாழ் ராஜ வீதியில் அண்ணளவாக 100m தூரத்தில் 1 1/4 பரப்பு வீடு கட்டக் கூடிய காணி 70 Laks ற்கு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் கோயிலில் இருந்து 5 நிமிடங்களில் காரில் செல்லக்குடிய இடம்.
**விபரங்களுக்கு:**
BASGARAN (416) 335-9335
WhatsApp (cell): (011) 44 7960 460546
shelliah@indoeuro.net
1 1/4 பரப்பில் இருந்து 5 பரப்பு வரை விற்பனைக்கு உள்ள.

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, கனடாவில் பிறந்த எனது 29 வயது மகளுக்கு நன்கு படித்த, நற்குணம் கொண்ட மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: RAJ
(647) 293-2784
(phone or text)

**KITCHEN HELPER & LINE COOK WANTED**

Part-time kitchen helper, line cook's, dish washer, South Indian cook, Continental cook, ladies South Indian cook wanted.
Call AMAR:
(416) 988-9518
7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

**Help Wanted**

**Part-time (evenings and Saturdays) General helper needed for a furniture finishing shop.**
**Call: 416-636-3655**

**தையல் வேலைக்கு பெண்கள் தேவை**

**Scarborough** நகரத்தில் **Markham & Steels** சந்திப்புக்கு அருகில் உள்ள தொழிலகம் ஒன்றுக்கு தையல் வேலைக்கு பெண்கள் தேவை. சாறி பிளவுள் மற்றும் சிறுவர்களின் ஆடைகள் ஆகியவற்றை தைக்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.
**416 419 3078**
**Call after 6.00 P.M only**

**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024
Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# உதயன் கதிரோட்டம்

## மாங்கனித் தீவின் பொருளாதாரம் வளம்பெற தம்மை உரமாக்கிய மலையகத் தொழிலாளர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள்

இலங்கைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர் நாடு பிடிக்க வந்த வெள்ளைக்காரர்களுக்கு இந்த மாங்கனித் தீவு நன்கு பிடித்துக் கொண்டதால். அங்கு காணப்பட்ட வளமிக்க நிலங்களை செல்வத்தை ஈட்ட வல்ல விளை நிலங்களாக்கினர்.

மலை நாட்டு பிரதேசங்களில் தேயிலை. கோப்பி றப்பர். கறுவா மற்றும் ஏலக்காய் போன்ற திரவியங்களை பயிர் செய்யும் வகையில் அங்கு தோட்டங்களை அமைக்கத் தொடங்கினார்கள். தொடர்ந்து அந்த காலப்பகுதியில் முக்கியமாகத் தேவைப்பட்ட தொழிலாளிகளின் தேவை கருதி இந்தியாவின் தென்பகுதிகளிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்தார்.

இந்த வரலாறு என்பது இலட்சக் கணக்கான துன்பியல் அனுபவங்களைக் கொண்டது என்பதை இந்த தொழிலாளர்களின் இலங்கை நோக்கிய பயணம் தொடர்பான விபரங்களை வாசித்தவர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள். வழியில் தங்களோடு பயணம் செய்தவர்கள் ஆயிரக் கணக்கில் இறந்தபோதும் அவர்களின் இழப்புக்களையும் மனங்களில் தாங்கிக் கொண்டு இலங்கையின் மலை நாடு என்னும் புதிய தாயகத்தை நோக்கி அவர்கள் சவால்களுக்கு மத்தியில் பயணித்தார்கள்.

அவ்வாறு இலங்கையின் மலை நாட்டு மண்ணில் குடியமர்த்தப்பட்ட அவர்கள் இன்று வரை மாடுகள் போல தங்களை வருத்திய வண்ணம் உழைக்கின்றார்கள். இதனால் இலங்கையின் பொருளாதாரம் உச்சத்தைத் தொட்டது. ஆனால் அவர்களது வாழ்வு அடி மட்டத்தோடு தான் தொடர்கின்றது.

ஆனால் இவர்களால் உயர்ந்தவர்கள் தோட்ட முதலாளிகளும் அவர்களோடு இணைந்த வர்த்தகர்களும் என்பது வெள்ளைத் தாளில் எழுதப்பட்ட உண்மைகள். ஆனால் இன்னொரு பிரிவினரும் இந்த தொழிலாளர்களின் உழைப்பினால் உயர்ந்தவர்களாக மலையகப் பகுதிகளில் காணப்படுகின்றார்கள். அவர்கள் தான் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கத் தலைவர்கள். தொண்டமான் தொடக்கம் இராதாகிருஸ்ணன் வரை அனைவரும் சுகபோகங்களை அனுபவிக்கு அதிஸ்டம் நிறைந்தவர்களாக தங்கள் வாழ்க்கைய இனிக்க இனிக்க அனுபவிக்கின்றார்கள்.

இந்த மலையகத் தொழிற்சங்கத் தலைமைகள் பற்றி இவ்வார உதயன் பக்கம் ஒன்றில் இலங்கையின் சிரேஸ்ட பத்திரிகையாளர் வி. தேவராஜ் எழுதியுள்ளதை நாம் அனைவரும் ஊன்றிப் படிக்க வேண்டும்

"மலையகத் தலைமைகள் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்" என்று ஆரம்பிக்கும் தேவராஜ் அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்.

மலையக தொழிங்சங்க அரசியல் தலைமைகளின் ஒன்றிணைவினால் மலையகத்தில் மாற்றம் ஏற்படும் என எதிர் பார்ப்பார்களாயின் அது பகல் கனவாகவே இருக்கும். ஏனெனில் இவர்கள் அனைவரும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே. இவர்களுக்கும் இவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை மற்றும் பிரதேச சபை ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கான ஏணியே மலையக மக்கள். இதற்கும் அப்பால் தேசியக் கட்சிகளுக்கு மலையக வாக்குகளை வாரி வழங்கும் 'தரகர்கள்'. அதற்கு ஈடாக தமக்கு அமைச்சுப் பதவிகளையும் தாம் சார்ந்தவர்களுக்கு உயர் பதவிகளையும் பெற்றுக் கொடுப்பதே இவர்களின் அரசியல் பேரம். மலையகத் தலைமைகளின் இந்தப் பேரங்களில் வாக்களித்த மலையக மக்களுக்கு ஒரு நன்மையும் கிட்டவில்லை.

ஆட்சிப்பீடம் ஏறும் தேசியக் கட்சிகள் அமைக்கும் அரசாங்கத்தில் பங்காளிகளாவது அமைச்சுப் பதவிகளைப் பெறுவது சுகபோகங்களை அனுபவிப்பது இறுதியில் 'இவர்களால் மலையகத்திற்கு ஏதும் பிரயோசனமில்லை.இவர்களுடனான உறவை நாங்கள் அறுத்துக் கொள்கின்றோம்' என்று கூறி இன்னொரு கூட்டணிக்குத் தாவுதல். அடுத்த தேர்தல்வரை கூட்டு பிறகு அதே பல்லவி என மலையக தொழிற்சங்க அரசியல் சுழன்று கொண்டிருக்கின்றது. இந்த சுழற்சியில் சிக்கி மலையக மக்களே அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களே தவிர மலையகத் தொழிற்சங்கத் தலைவர்கள் தாங்கள் சம்பாதித்த சொத்துக்கள் மற்றும் பணம் ஆகியவற்றால் தினமும் திளைத்தபடி அடுத்த பதவிகளைப் பெறுவதற்காக காத்துக்கிடக்கின்றார்கள்.

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்


Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம்:- பொது மன்னிப்பில் பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா விடுதலை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 22 வருடங்கள் புதிய மெகசின் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்துவந்த பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி தலையீட்டில் எதுவித நிபந்தனைகளுமின்றி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



கடந்த 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 22 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த இவருக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி 300 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அன்றைய தினம் அவரது மனைவி சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டார்.

அத்துடன் 2015ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்ததன் மூலம் 13 வருடங்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்றது. சட்டத்தரணிகளான அனிருத் சில்வா, கணேசராஜா, நீலகண்டன் சரவணன் ஆகியோரினால் இவ்வழக்கு நெறிபடுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா தனது விடுதலை தொடர்பில் ஜனாதிபதிக்கு விண்ணப்பித்துள்ளார். இவரின் விண்ணப்பத்தை பரிசீலித்த ஜனாதிபதி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரின் கவனத்துக்கு கொண்டுவந்ததுடன் அம்மையாரின் அனுமதியுடனும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக் 'வின் சிபாரிசின் பேரில் எதுவித நிபந்தனைகளுமின்றி உடன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

சிறையிலிருந்து விடுதலையாகிய பின்னர் பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

எனது 22 வருட கால சிறைவாசத்திலிருந்து ஜனாதிபதி எதுவித நிபந்தனைகளுமின்றி என்னை விடுதலை செய்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.


அத்துடன் ஜனாதிபதியின் பரிசீலனைக்கு இணங்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரும் அனுமதி வழங்கியதுடன் நீதி அமைச்சரும் இதற்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

நான் சிறையில் இருந்தபோதும் எனது ஆன்மீக கடமைகளை செய்வதற்கு அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர், செயலாளர் மற்றும் பிரதித் தலைவர் தனபால் ஆகியோரும் எனக்கு பேருதவியாக இருந்துள்ளதுடன் எனது விடுதலைக்காக அனைத்துவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டு இன்றைய இந்த விடுதலையை உறுதிப்படுத்தினார்கள்.

முக்கியமாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகங்கள், உணர்வாளர்கள் அனைவரும் எனது விடுதலைக்கு தங்களால் இயன்ற ஆதரவை வழங்கியுள்ளனர்.

எனது இந்த விடுதலைக்கு முழுமையான காரணம் சிறைத்துறை அதிகாரிகளும் சிறை தலைமை செயலகமுமாகும். ஜனாதிபதிக்கு எனது ஆவணங்கள் முழுமையாக பரிசீலித்து எனது விடுதலைக்கான ஒழுங்குகளை செய்து தந்தார். எனக்காக. அவ்வப்போது பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் மனிதநேய அமைப்புகளுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா.

(முன்பக்கத் தொடர்ச்சி) **48 வாத்திய இசைப் போட்டியாளர்களுக்கிடையில் பைரவி நுண்கலைக் கூடம் ...**



அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமான இந்த போட்டி நிகழ்ச்சியில் 48 இளம் கீபோர்ட் வாத்தியக் கலைஞர்கள் வாத்திய இசைப் போட்டியில் மோதிக் கொண்டனர். அவர்கள் அங்கு கனடிய பாடகர்கள் பாடிய பாடல்களுக்கு ஏனைய வாத்திய இசைக் கலைஞர்களுடன் இணைந்து பின்னணி இசை வழங்கினர்.



இந்த போட்டி நிகழ்ச்சியை நடத்துவதில் பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபரும் நிறுவனருமான தியாகராஜா ஜெயச்சந்திரன் அவர்கள் தனது குழுவினருடன் தீவிரமாக உழைத்து ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் அன்றைய தினம் - பைரவி நுண்கலை நுண்கலைக் கூடம்" நடத்திய மாவீரர் நினைவு பாடல்கள் இசைத்தட்டு சமர்ப்பண நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது அன்று வெளியிடப்பெற்ற "உணர்வூற்றும் உயிரீகம்" பாடல் இசைத் தட்டு வெளியீட்டு நிகழ்வில் இசைத்தட்டின் முதற்பிரதியை வர்த்தகப் பிரமுகர் "கெம்சோனிக்ஸ் ரஜீவ் செபராசா அவர்கள் பெற்றுக்கொள்வதை இங்கே காணலாம். பாடல்களுக்கு இசை அமைத்தவர் புகழ்பெற்ற இசையமைப்பாளர் கனடா வாழ் சுதர்சன். பாடல்களை எழுதிய கவிஞர்கள் சுகுந்தவன். அகணி சுரேஸ்- லோகேந்திரலிங்கம்- சயந்தன் பசுபதி- தனுசா- கணபதி ரவீந்திரன்- சண்முகராஜா ஆகிய கனடா வாழ் கவிஞர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி வாத்திய இசைப் போட்டியில் பங்குபற்றி போட்டியாளர்கள் மற்றும் நடுவர்கள் ஆகியோரும் அங்கு கௌரவிக்கப்பெற்றனர். இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வறிய மாணவர்களுக்கு ஒரு நேர பால் வழங்கும் திட்டம் மடு வலயக்கல்வி பணிமனை பிரிவில் ஆரம்பம்



மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, வடமாகாண ஆளுநரின் நிதி உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒரு நேர பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மடு கல்வி வலயத்தில் திங்கட்கிழமை (14) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் நிதியின் கீழ் முன்னெடுக்கும் குறித்த செயல்திட்டத்தை மடு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் ம.வி பாடசாலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மடு கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 23 பாடசாலைகளைச் சேர்ந்த 1338 மாணவர்கள் குறித்த திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த நிகழ்வில் மடு வலயக்கல்வி பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள், ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# மன்னார் பொது வைத்தியசாலைக்கு தீவிர சிகிச்சை, உயிர்காப்பு வசதிகளைக் கொண்ட குழசன நோயாளர் காவுவண்டி



மத்திய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட தீவிர சிகிச்சை, உயிர்காப்பு வசதிகளைக் கொண்ட குழசன நோயாளர் காவுவண்டி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நோயாளர் காவு வண்டியை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் பெற்று கொண்டு, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர தேவைகளுக்காக செவ்வாய்க்கிழமை (15) வைபவ ரீதியாக வழங்கி வைத்தார்.

குறித்த நிகழ்வில் மத தலைவர்கள்,மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பணியாளர்கள், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.




# மன்னார் மத்திய பேருந்து நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட பரிசோதனை



மன்னார் மத்திய பேருந்து நிலையத்தில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு திங்கட்கிழமை(14) காலை நீரிழிவு உள்ளிட்ட தொற்றா நோய்களை கண்டறிவதற்கான பரிசோதனை இடம் பெற்றது.

மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பிராந்திய தொற்றா நோய்கள் தடுப்பு பிரிவினர் இணைந்து குறித்த பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதன் போது பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தமக்கு தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதனின் பணிப்புரைக்கு அமைவாக வைத்தியர்கள் சுகாதார பிரிவினர் இணைந்து கொண்டு குறித்த பரிசோதனைகள் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மல்லாவி வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு நிலையம்

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் கனடா செந்தில்குமரன் நிவாரண நிதியத்தினால் 14-11-2022 அன்று வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் நன்மை கருதி விடுக்கபட்ட கோரிக்கைக்கு அமைவாக சுமார் ஒரு கோடி 30 லட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு கனடா செந்தில்குமரன் நிவாரண நிதியத்தினால் இன்று வழங்கிவைக்கப்பட்டுள்ளன.







முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 500ற்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளிகள் பயனடையகூடிய வகையில் இவ்விரு இயந்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டுளளன.

குறிப்பாக மாந்தை கிழக்கு துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் உள்ள சிறுநீரக நோயாளர்கள் வாரத்தில் இரண்டு தடவைகள் இரத்த சுத்திகரிப்புக்காக பெரும் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் கிளிநொச்சி பொது வைத்தியசாலை வவுனியா பொது வைத்தியசாலை மற்றும் மன்னர் பொது வைத்தியசாலை ஆகியவற்றுக்கு சென்று சிகிச்சை பெற்று வருகின்ற நிலைமை காணப்படுகிறது.

குறித்த சிறுநீரக சிகிச்சைப்பிரிவானது முன்னாள் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனாவினால் திறந்து வைக்கப்பட்ட போதும் அதன் செயல்பாடுகளுக்கு போதிய மருத்துவ உபகரணங்கள் இல்லாத நிலையில் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டு இவ்வாறு இன்றைய தினம் இந்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன இதனை பயன்படுத்தி சிறுநீரக நோயாளர்கள் சிகிச்சை பெற இலகுவாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



இலங்கையின் பல பாகங்களிலும் இருதய நோய் உள்ள நோயாளர்களுக்கும் ஏனைய நோயால் வாடும் நோயாளிகளுக்கு பலவிதமான மருத்து உதவிகள் மற்றும் வாழ்வதார திட்டங்கள் ஆகியன தொடர்ச்சியாக செந்தில்க் குமரன் நிவாரண நிதியத்தினால் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மல்லாவி பிரதேச வைத்தியசாலையினுடைய பொறுப்பு வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் ஸ்தாபகர் மற்றும் பாராள மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முன்னாள் பா.ம. உறுப்பினர் சாந்தி சிறிஸ் கந்தராஜா வைத்திய அதிகாரிகள் வைத்தியசாலை பதவி நிலை உத்தியோகத்தர்கள் மாவட்ட செயலக அதிகாரிகள் பிரதேச செயலாளர் எனப்பலர் கலந்து கொண்டனர்.







கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் முக்கிய துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு 16 தொழில் துறைகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம்

கடுகதி குடிவரவு நுழைவு முறையின் கீழ் கனடாவில் முக்கிய துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு 16 புதிய தொழில் தறைகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம் என கனடிய குடிவரவு மற்றும் அகதிகள் விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது. கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு கிடைக்கப்பெற்ற இந்த அறிக்கையில் வெளிநாடுகளில் வாழும் தகுதியான விண்ணப்பதாரிகள் நேரடியாக விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் சுகாதாரப் பாதுகாப்பு, கட்டுமானம் மற்றும் போக்குவரத்து போன்ற முக்கிய துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்ப்பது: 16 புதிய தொழில்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் நிரந்தர வதிவிடத்திற்கு இப்போது தகுதியுடையவர்களாக கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒட்டாவாவில் இந்த விடயம் தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்த அமைச்சர் அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்.

"கனடாவிற்கு குடியேற்றவாசிகளை வரவேற்பது என்பது நமது சமூகங்களுக்கும் நமது பொருளாதாரத்திற்கும் மட்டும் நல்லதல்ல. இது அவசியமானதும் ஆகும் அதனால்தான், தற்பொழுது கனடா முழுவதும் உள்ள கடுமையான தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உதவும் வகையில் நமது பொருளாதாரத்திற்குத் தேவையான திறன்களைக் கொண்டு வரும் புதியவர்களை வரவேற்க கனடிய மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சரான மாண்புமிகு சீன் ஃப்ரேசர், கடுகதி குடிவரவு நுழைவு முறையின் கீழ் நிர்வகிக்கப்படும் குடியேற்றத் திட்டங்களுக்கு தேசிய தொழில் வகைப்பாடு (NOC) 2021ஐ செயல்படுத்துவதாக புதன்கிழமை (16) அறிவித்தார். புதிய NOC வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம், சுகாதாரப் பாதுகாப்பு, கட்டுமானம் மற்றும் போக்குவரத்து போன்ற உயர்-தேவைத் துறைகளில் உலகளாவிய திறமைகளைக் கொண்டுவர கனடாவை அனுமதிக்கும்.

மருத்துவ தாதியர்கள் உதவியாளர்கள், நீண்ட கால பராமரிப்பு உதவியாளர்கள், மருத்துவமனை உதவியாளர்கள், தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் உதவியாளர்கள் மற்றும் போக்குவரத்து டிரக் ஓட்டுநர்கள் இப்போது கடுகதி விண்ணப்ப முறையில் சேர்க்கப்பட்டுள்ள 16 தொழில்களில் சிலவற்றின் உதாரணங்களாகும்.

கனேடிய தொழிலாளர் சந்தையில் அனைத்து வேலைகளையும் கண்காணிக்கவும் வகைப்படுத்தவும் NOC அமைப்பு பயன்படுத்தப்படுகிறது மற்றும் பொருளாதாரம் மற்றும் வேலையின் தன்மையில் ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் புதுப்பிக்கப்படுகிறது. என்ஓசி அமைப்பில் மாற்றங்கள் தற்காலிக தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்களுக்கான நிரந்தர வதிவிடத்திற்கான பாதைகளை விரிவுபடுத்துவதற்கான அமைச்சரின் உறுதிப்பாட்டை ஆதரிக்கின்றன, ஏனெனில் கடுகதி குடியேற்ற திட்டத்தின் கீழ் அடங்கும் தொழில் துறைகளுக்கு அதிக வேலைகள் தகுதி பெறும். இந்தப் புதுப்பிப்பின் மூலம், முன்னர் தகுதி பெறாத 16 தொழில் துறைகளில் அனுபவம் கொண்டவர்கள் இப்போது நிரந்தர வதிவிடத்தைப் பெறுவதற்கான திட்டத்தினால் பயனடையலாம்.

இது தொடர்பாக கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர்கௌரவ சீன் பிரேசர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "தொழிலாளர் பற்றாக்குறையைச் சமாளிக்க எங்களிடம் உள்ள அனைத்து கருவிகளையும் பயன்படுத்துகிறோம், குறிப்பாக சுகாதாரப் பாதுகாப்பு, கட்டுமானம் மற்றும் போக்குவரத்து போன்ற முக்கிய துறைகளில். இந்த மாற்றங்கள் இந்தச் சேவைகள் தேவைப்படும் கனேடியர்களுக்கு ஆதரவளிக்கும், மேலும் நமது பொருளாதாரத்தை வளமான எதிர்காலத்திற்கு முன்னோக்கி கொண்டு செல்ல நாம் சார்ந்து இருக்கக்கூடிய மிகவும் வலுவான பணியாளர்களை வழங்குவதன் மூலம் அவர்கள் முதலாளிகளுக்கு ஆதரவளிப்பார்கள். இந்த தேவையுடைய தொழிலாளர்களுக்கு கனடாவில் நிரந்தர குடியிருப்புக்கான விரிவாக்கப்பட்ட பாதைகளை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள தொழில் துறைகளாக பின்வருவன கனடிய அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. இந்த விண்ணப்பங்களை அனுப்பவதற்கு கனடிய அரசாங்கத்தின் இணையத்தளத்திற்கு சென்று விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யலாம்.

Canada

National Occupational Classification 2021
An Immigration Plan to Grow the Economy

- Payroll administrators
- Dental assistants and dental laboratory assistants
- Nurse aides, orderlies and patient service associates
- Pharmacy technical assistants and pharmacy assistants
- Elementary and secondary school teacher assistants
- Sheriffs and bailiffs
- Correctional service officers
- By-law enforcement and other regulatory officers
- Estheticians, electrologists and related occupations
- Residential and commercial installers and servicers
- Pest controllers and fumigators
- Other repairers and servicers
- Transport truck drivers
- Bus drivers, subway operators and other transit operators
- Heavy equipment operators
- Aircraft assemblers and aircraft assembly inspectors

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "ரணில் ஒரு குள்ளநரி" என துணிந்து கூறி வரும் தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவர் ராஜ்குமார்



"கடந்த காலங்களைப் போல அல்லாது தமிழ்த் தலைவர்கள் அல்லது தமிழர் தரப்புக்கள் தவறுகளைச் செய்யக் கூடாது. அத்துடன் தமிழ் அரசியல் தலைவர்கள் தற்போதைய ஜனாதிபதியான "குள்ளநரி" ரணிலுடன் பேசும் போது அமெரிக்காவை மத்தியஸ்தம் செய்ய அழைக்க வேண்டும். இதைச் செய்யாவிட்டால் மீண்டும் அந்த "குள்ளநரி எம்மை குதறித்தள்ளி விடும்" என தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் தலைவர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கூடாரத்தின் கீழ் கடந்த 14.11.2022 அன்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

ராஜ்குமார் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் ரணிலுடன் தமிழர்களின் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதற்கு முன், ரணிலின் அரசியல் வரலாற்றில் தமிழர்களுக்கு எதிரான துரோகச் செயல்களை அனைவரும் நினைவு கொள்ள வேண்டும்.

சிங்கள மக்கள் அவரையும் அவரது கட்சியையும் நிராகரித்த போது, அவர் சதித்திட்டத்தை உருவாக்கி இலங்கையின் ஜனாதிபதியாக ஆனார். பின்னர் இலங்கை இராணுவத்தைப் பயன்படுத்தி காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வலுக்கட்டாயமாக அகற்றினார்.

இலங்கை வரலாற்றில் இது போன்ற நயவஞ்சக வேலைகள் எவராலும் செய்யப்படவில்லை. போர் நிறுத்தம் என்ற பெயரில் ரணில் பிரதமராக இருந்த போது, கருணாவுக்கு லஞ்சம் கொடுத்து நமது சுதந்திரப் போராட்டத்தை நாசப்படுத்தினார்.

இறுதியில் நமது சுதந்திரப் போராட்டம் சிதைந்தது. அது 146,000 அப்பாவித் தமிழர்களை இழந்ததும், தமிழர்களுக்கு அதிக துன்பத்தை ஏற்படுத்தியும் அதிக சேதத்தை ஏற்படுத்தியது. கடந்த அரசாங்கத்தில் அவரது நல்லாட்சி மற்றும் நல்லிணக்கக் கொள்கையை நினைவுகூருங்கள்.

தமிழர் தாயகத்தில் 1000 சிங்கள பௌத்த கோவில்களை கட்டுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உதவியுடன் ரணில் பட்ஜெட்டை நிறைவேற்றினார். இது தமிழர் தாயகத்தில் பல இடங்களிலும் சிங்கள பௌத்த கோவில்களை கட்ட இடமளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குருந்தூர் மலை. நாடாளுமன்றத்தில் பௌத்தத்தை முதன்மையான மதமாக ஏற்றுக்கொள்ளுமாறு சுமந்திரனை ரணில் கட்டாயப்படுத்தினார். வவுனியா நெடுங்கேணியில் 4000 சிங்களவர்களிடம் தமிழர்களின் காணி உறுதிகளை கையளிப்பதை ரணில், செல்வத்தையும் சுமந்திரனையும் மேற்பார்வையிட வைத்தார்.

தமிழர்களின் தாயகத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களாக பிரித்து அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ளுமாறு ரணில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கட்டளையிட்டுள்ளார். சுமந்திரன் ரணிலின் கோரிக்கையை ஏற்று இலங்கையின் அனைத்து இடங்களுக்கும் சென்று பிரச்சாரம் செய்தார்.

ஹம்பாந்தோட்டை துறைமுக குத்தகைக்கு கையொப்பமிட்டு சீனர்களை சட்டரீதியாக அழைத்த ரணில், பின்னர் சீனர்களால் "கடல் அட்டை பண்ணை" என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் மெல்ல இடம் பெயர்ந்தனர்.



இது ரணிலின் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் எதிரான மற்றுமொரு சதி.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான பல கையெழுத்திட்ட உடன்படிக்கைகள் குப்பையில் வீசப்பட்டன அல்லது துண்டாக்கப்பட்டதை நமது வரலாறு காட்டுகிறது.

தமிழர்கள் சிங்களவர்களுடன் தனியாகப் பேச முடியாது. இறுதியில் எங்களை ஏமாற்றுவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ரணில் ஜே.ஆர். ஜெயவர்தனவின் மருமகன் என்பதும், தமிழர்களை ஏமாற்றும் இனவாதமும் சதியும் கொண்ட டி.என்.ஏ மரபணு அவரிடம் உள்ளது என்பது எங்களுக்குத் தெரியும். பணக்கார நாடுகளிடம் இருந்து பணத்தைப் பெறுவதற்காக ரணில் தனது நாடகத்தை தமிழர்களுடன் உலகுக்குக் காட்ட வேண்டும்.

தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்கு இலங்கை ஒருபோதும் இடமளிக்காது என்பதை நாம் அறிவோம்.

ஆனால், அமெரிக்காவை மத்தியஸ்தராக வைத்துக்கொண்டு, தமிழர்களை சுதந்திரமான மக்களாக வாழ விடுவதற்கு ரணிலும் சிங்கள புத்திஜீவிகளும் என்றைக்கும் தயாராக இல்லை என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட முடியும்.

எனவே, தமிழ் அரசியல் தலைவர்கள் என்று அழைக்கப்படும் சம்பந்தன், பொன்னம்பலம், விக்னேஸ்வரன் ஆகிய மூவரும் ரணிலிடம் அமெரிக்கா அல்லது அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் இணைந்த அணிகளை மத்தியஸ்தர்களாக இடம் பெறச் சொல்ல வேண்டும். இது இறுதியில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை ஐ.நா கண்காணிக்கும் வாக்கெடுப்பு நடத்த கட்டாயப்படுத்தும்.

எந்த ஒரு தீர்வும் எதிர்காலத்தில் சிங்களவர்களால் தமிழர்கள் படுகொலைகள், தமிழர்கள் எதிர்கால இனப்படுகொலை, இனக்கலவரம், நில அபகரிப்பு, தமிழ் கலாச்சார அழிவு, தமிழ் பெண்களை கற்பழித்தல், இலங்கை இராணுவம் போதைப்பொருள் வழங்கி தமிழ் இளைஞர்களை அழித்தல் போன்றவற்றில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

எனவே, சிங்கள பௌத்தர்கள் எமது அரசியல் சுதந்திரத்தில் தலையிட முடியாத வகையில், தமிழர்களுக்கு பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட தமிழர் தாயகம் தேவை. இந்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள் சம்பந்தன், பொன்னபலம், விக்கினேஸ்வரன் அமெரிக்காவை மத்தியஸ்தம் செய்ய அழைக்கத் தவறினால், தமிழர்கள் இவர்களின் இந்த முட்டாள்தனமான முடிவை வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்திருப்பார்கள் என்பது உறுதி என தெரிவித்துள்ளனர்.

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் சிறப்பாக இடம்பெற்ற மலர் வெளியீடும், கலைஞர் கௌரவிப்பும்



மன்னார் மாவட்ட செயலகமும், மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் "மன்னெழில்-11" மலர் வெளியீடு, 2022ம் ஆண்டுக்கான கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் புதன்கிழமை (16) காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான திருமதி. ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர். இ.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. ராஜ மல்லிகை சிவசுந்தரம் சர்மா மற்றும் கௌரவ விருந்தினராக வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. லிங்கேஸ்வரி துணைவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் நிகழ்வானது மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளர் அமரர் பி.ஏ.அந்தோனி மார்க் அரங்கில் இடம் பெற்றது.

இதன் போது மலர் வெளியீடு செய்யப்பட்டதோடு, சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, கலைஞர்கள் கௌர விப்பும் இடம் பெற்றது.

இதன் போது "மன்கலைச்சுரபி", "மன்கலைத்தென்றல்" மற்றும் "மன் இளம் கலைச்சுரபி" ஆகிய விருதுகள் வழங்கும் நிகழ்வுகள் இவ் அரங்கில் இடம் பெற்றது.

மேலும் மன்னார் மாவட்டத்தின் கலை, பண்பாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு ஊடகத்துறை மூலமாக தமது அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பை வழங்கி வரும் மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் 6 பேருக்கு "செய்திச் செம்மல்" என்னும் கௌரவ விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவர்களுள் ஊடகவியலாளர் றொசாரியன்லம்பேர்ட் அவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



குறித்த மலர் வெளியீடு மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு ஆகியவற்றை மன்னார் சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் மற்றும் கலைஞர் எஸ். சதீஷ் ஆகியோர் தொகுத்து வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**









# மன்னார் கொமர்ஷல் வங்கி ஏற்பாட்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



மன்னார் மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவ மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு மன்னார் கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை (17ம் திகதி) மன்னார் கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் தலைமையில் மன்னார் பிரதான கிளையில் இடம் பெற்றது.

2021 ஆண்டு இடம்பெற்ற புலமை பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியாக அதி உயர் சிறந்த பெறுபேறுகளை பெற்ற 13 மாணவ, மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சவிர்தாசம் செல்டன், சிறப்பு விருந்தினர்களாக மடு வலயக் கல்வி பணிமனையின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஜூடிற், மன்/சித்திவிநாயகர் இந்து கல்லூரி அதிபர் பாலபவன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்.போதனா வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சை பிரிவு மீள திறப்பு!



யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிர இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு புனரமைக்கப்பட்டு புதன்கிழமை (09) திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி. சத்தியமூர்த்தி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்.பரிசுத்த யோவான் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட அமைப்பொன்றின் நிதி உதவியின் கீழ் இந்த அலகு புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலை சமூகத்தினர் பலர் கலந்து கொண்டிருந்தனர்.





# பொலிஸ் அதிகாரி தொடர்பாக அறிக்கை கோரும் மனித உரிமைகள் ஆணைக்குழு



பொலிஸ் அதிகாரி ஒருவர் 2 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை துன்புறுத்தியது தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் அறிக்கை கோரியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இன்றைய நாளுக்குள் அந்த அறிக்கை கிடைக்கும் என எதிர்ப்பார்ப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க தெரிவித்தார்.

அறிக்கை கிடைத்த உடன் சம்பவம் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் அதிகாரி ஒருவர் 2 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் துன்புறுத்தப்பட்டமை தொடர்பில் விசேட விசாரணைகள் நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் அது குறித்து தனியான விசாரணை மேற்கொள்ளப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றம் உறுதி செய்யப்படும் பட்சத்தில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அவர் கூறினார்.

குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்படும் போது தண்டனை விதிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி சேவையிலிருந்து நீக்கப்படுவார் என தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டரின் செயற்பாடுகள் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் விசேட விசாரணை பிரிவின் பணிப்பாளருக்கு பொலிஸ் மாஅதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொலிஸ் விசேட விசாரணை பிரிவின் பணிப்பாளரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாணந்துறை கொரகாபொல பகுதியில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்பு பதாகையுடன் நடந்துவந்த 2 பெண்களை கைது செய்யுமாறு அழுத்தம் விடுத்த குறித்த பொலிஸ் அதிகாரி பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கழுத்தை நசுக்கி பிடித்து நாகரிகமற்ற முறையில் செயற்பட்டிருந்தார்.



உலக செய்திகள் World News

# இந்தோனேசியாவிலிருந்து ஒன்றாக உக்ரேன் அதிபருடன் உரையாடிய கனடிய மற்றும் இங்கிலாந்து பிரதமர்கள்

இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் பிரச்சனைகளுக்குரியவராக தோற்றம் பெற்றுள்ள ரஷ்ய ஜனாதிபதியைத் தவிர்த்து ஏனைய உலக நாடுகளின் முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்என்பது குறிப்பிடத்தக்கதாகும் அப்பொழுது.

இந்தோனேசியாவிலிருந்து ஒன்றாக உக்ரேன் அதிபருடன் இணைந்து உரையாடிய கனடிய மற்றும் இங்கிலாந்து பிரதமர்கள் தங்கள் வாழ்த்துக்களை அவருக்கு தெரிவித்ததுடன் தங்கள் நாடுகளின் ஆதரவு தொடர்ந்து உக்ரேன் நாட்டுக்கு இருக்கும் என்றும் உறுதியளித்தனர்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கை (Rishi Sunakai) சந்தித்த கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ (Justin Trudeau), உக்ரேன்ன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியிடம் "நாங்கள் உக்ரைன் மக்களுக்காக உறுதியாக துணை நிற்கிறோம்" எனக் கூறினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரூடோ, "பிரித்தானியாவில் ரஷ்யாவுக்கு எதிராக போராடும் உக்ரேனிய வீரர்களுக்கான எங்களின் பயிற்சிப் பணியை, கனடா அடுத்த ஆண்டு இறுதிவரை நீட்டிக்கிறது" கூறினார்.

இது தொடர்பான வீடியோ ஒன்றை அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில், ரிஷி சுனக்குடன் அமர்ந்திருக்கும் ட்ரூடொ உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை செல்போனில் அழைத்து "ஹலோ வோலோடிமிர்.. ரிஷி மற்றும் ஜஸ்டின் நாங்கள் இணைந்து உங்களோடு பேசுகிறோம்" என்றார். இந்த சம்பவம் உக்ரேன் ஜனாதிபதிக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்திருப்பதாக அறியப்படுகின்றது.



# "ஏற்கெனவே எம்மால் சமர்ப்பிக்கப்பெற்ற 10 அம்சக் கோரிக்கைகளின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும்"

## இலங்கை அரசை மீண்டும் வலியுறுத்தும் கனடிய தமிழர் பேரவை

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

2022 ஆகஸ்ட் மாதத்தில் கனடிய தமிழர் பேரவை உட்படப் பல புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியதைத் தொடர்ந்து காத்திரமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென கனடிய தமிழர் பேரவை இலங்கை அரசைக் கேட்டிருந்தது. இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் எதுவும் காணப்படாமையால் இலங்கை அரச தலைவர்கள், அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் கனடிய தமிழர் பேரவை மீண்டுமொரு தடவை தனது கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறது.

**இலங்கை அரசிடம் முன்வைத்த 10 அம்சக் கோரிக்கை கீழே:**

1. அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்
2. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்
3. இலங்கை இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் அனைத்து தனியார் காணிகளையும் விடுவிப்பதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் சட்டவிரோத நில ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்த வேண்டும்
4. இலங்கை அரச நிர்வாகத்தின் கெடுபிடிகளின்றி அனைத்து தமிழர்களும் உயிர் மாய்த்த தமது உறவினரை நினைவுகூர அனுமதிக்க வேண்டும்
5. பலாலி விமான நிலையத்தைப் பாவனைக்கு திறந்து விடுவதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை அனுமதித்து வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கு இடமளிக்க வேண்டும்
6. இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண கலாச்சார மையத்தை யாழ். மாநகரசபையிடம் கையளிக்க வேண்டும்
7. 2021 இல் நிறைவேற்றப்பபட்ட ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானம் 46/1ஐ நடைமுறைப்படுத்த வேண்டும்
8. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதுடன் மாகாணசபைத் தேர்தல்களையம் விரைவில் நடத்த வேண்டும்
9. நாட்டின் இதர பாகங்களிலும் நடைமுறையில் உள்ள அதே தரத்தில் அமையும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் பாதுகாப்பு நிர்வாகம் சீர்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் தேவைக்குமதிக்கமான படையினரைக் குவிக்காமல் இதர மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் படையினரின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் படைப் பரம்பல் இருக்க வேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வியாபார நடவடிக்கைகளை (பண்ணைகள், உணவகங்கள், வெதுப்பகங்கள்), நிறுத்த வேண்டும். இவ்வியாபாரப் போட்டிகளினால் உள்ளூர் விவசாயிகளும் வியாபாரிகளும் கடும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்
10. மன்னார் மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களிலிருந்து இந்தியாவுக்குப் பயணங்களை மேற்கொள்ளும் வகையில் கப்பல் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

அத்தோடு இலங்கையில் நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவரவேண்டும் என கனடிய தமிழர் பேரவை இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

மேலதிக ஊடகத் தொடர்புகளுக்கு கனடிய தமிழர் பேரவை (416) 240-0078, (647) 300-1973 info@canadiantamilcongress.ca

# வடமாகாண மரநடுகை மாதம் – 2022 கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சி தொடக்க விழா

வடக்கு மாகாணசபை கார்த்திகை மாதத்தை வடமாகாண மரநடுகை மாதமாக 2014 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியது. அதன் அடிப்படையில், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் கார்த்திகையில் மரநடுகை மாதத்தைச் சிறப்பாக கொண்டாடி வருவதோடு, மலர்க்கண்காட்சி ஒன்றையும் நடத்தி வருகின்றது.

இவ்வருடமும் மரநடுகை மாதத்தைக் கொண்டாடும் வகையில் இம்மாதம் 18ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நல்லூர் சங்கிலியன் பூங்காவில் அமைந்துள்ள மலர்முற்றம் காட்சித்திடலில் பிற்பகல் 3.00 மணிக்கு கார்த்திகை வாசம் மலர்க்கண்காட்சி திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா. சண்முகலிங்கன் அவர்கள் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாகச் சமூகச் செயற்பாட்டாளர். ம. செல்வின் இரேனியஸ் அவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர். ச.ரவி அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கண்காட்சி 27.11.2022 வரை தினமும் காலை 8.30 மணிதொடக்கம் இரவு 7.30 மணிவரை நடைபெறும்.

**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**



உலக செய்திகள் World News

# "இன்று 800 கோடியில் நாமும் ஒருவர்"

இன்று (நவ 15) உலக மக்கள்தொகை 800 கோடியை எட்டுவதாக ஐ.நா.வின் புதிய மக்கள்தொகை மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமியின் மக்கள்தொகை எகிறிக்கொண்டே செல்கிறது. செவ்வாய்க்கிழமை உலக மக்கள்தொகை 800 கோடி ஆகப்போகிறது. ஐ.நா.வின் புதிய மக்கள்தொகை மதிப்பீட்டில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக இனி, 800 கோடியில் ஒருவர் நாமும் ஒருவர்.

பூமியில் மனிதர்களின் எண்ணிக்கை 800 கோடி ஆகப்போகும் தகவல், கடந்த ஜூலை 11-ந் தேதி, ஐ.நா.வால் வெளியிடப்பட்டது. உலக மக்கள்தொகை தினமான அன்றைய நாளில் வெளியான ஐ.நா. உலக மக்கள்தொகை வாய்ப்பு 2022 அறிக்கையில் அந்த தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த இலக்கை இன்று எட்டப் போகிறோம்.

பூமிப்பந்து, மக்கள்தொகையால் பிதுங்கி வழிவது கொஞ்சம் பீதி ஏற்படுத்தினாலும், ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் நம்பிக்கையோடு பேசுகிறார். "நமது பன்முகத்தன்மையை கொண்டாடுவதற்கான, பொது மனிதநேயத்தை அங்கீகரிப்பதற்கான, வாழ்நாளை நீட்டித்து, மகப்பேறுகால மற்றும் குழந்தை இறப்பு விகிதத்தை வெகுவாக குறைத்துள்ள மருத்துவத்துறையின் மகத்துவத்தை போற்றுவதற்கான நேரம் இது" என்கிறார்.

அதேநேரம் ஐ.நா. பொதுச் செயலாளர் கூறும் முக்கியமான எச்சரிக்கை இது.



"உலக மக்கள்தொகை 800 கோடியை எட்டுவது, நமது பூமியைக் காக்கும் நமது கூட்டுப் பொறுப்பை நினைவூட்டும் விஷயமும் ஆகும். நமது பொறுப்புகளில் எங்கே பின்தங்கியிருக்கிறோம் என்று சிந்திப்பதற்கான நேரமும் இது" என்கிறார்.

2050-ம் ஆண்டளவில், உலக மக்கள்தொகையில் பாதிக்கு மேல், இந்தியா, பாகிஸ்தான், காங்கோ, எகிப்து, எத்தியோப்பியா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், தான்சானியா ஆகிய 8 நாடுகளிலேயே அடங்கியிருக்கும் என்றும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக மக்கள்தொகை 700 கோடியில் இருந்து 800 கோடி ஆவதற்கு 12 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், இதிலிருந்து 900 கோடி தொடுவதற்கு 15 ஆண்டுகள் ஆகுமாம். ஆக 2037-ல் அந்த "மைல்கல்"லை எட்டுவோம். ஒட்டுமொத்த உலக மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் குறைந்து வருவதை இது காட்டுகிறது என்கிறார்கள் நிபுணர்கள்.

# இந்தோனேசியாவில் நடைபெறும் ஜி20 மாநாட்டில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் காட்டுமிராண்டித்தனத்தை பெரும்பாலான நாடுகள் கண்டித்துள்ளன



இந்தோனேசியாவில் நடைபெறும் ஜி20 தலைவர்களின் உச்சி மாநாட்டில், ரஷ்யாவுக்கு எதிராக ஒரே மனதாக தீர்மானம் ஒன்றை முன்னெடுக்க இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் காட்டுமிராண்டித்தனத்தையும் அப்பாவிப் பொதுமக்களையும் மக்கள் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு பாரிய சேதங்களை விளைவித்து அழகிய ஒரு தேசத்தை அழித்து சின்னாப்பின்னமாக்கியதற்கும் பெரும்பாலான நாடுகளின் உறுப்பினர்களும் தலைவர்களும் தமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளதோடு, ரஷ்யாவின் கடும் போக்கினால் உலகப் பொருளாதாரம் மிகவும் மோசமான நெருக்கடியை சந்தித்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மொத்தம் 16 பக்கங்கள் கொண்ட அந்த தீர்மானத்தில், ரஷ்யாவுக்கு எதிரான தடைகள் மற்றும் தற்போதைய சூழ்நிலை தொடர்பில் கடுமையான திருத்தங்கள் முன்னெடுக்கப்படலாம் எனவும் இந்த தீர்மானங்களுக்கு கனடா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தலைவர்கள் தங்கள் வெறுப்பை சுட்டிக்காட்டியுள்ளனர் என அறியப்படுகின்றது.

ஜி20 அமைப்பானது பாதுகாப்புச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான மன்றம் அல்ல என்பதை அங்கீகரித்துள்ளதுடன், பாதுகாப்புச் சிக்கல்கள் உலகப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என அந்த தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

ஜி20 தலைவர்களின் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் உக்ரைன் போரை எவ்வாறு அடையாளப்படுத்துவது என்ற குழப்பத்தில் ஒன்றிணைந்த கண்டனத்தை தெரிவிப்பதில் தோல்வி கண்டது.

ஆனால் தற்போது இந்தோனிசியாவின் பாலி நகரில் நடைபெற்றுவரும் இந்த ஜி20 மாநாட்டில், ரஷ்யாவின் படையெடுப்பால் உலகளாவிய பணவீக்கம், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு உள்ளிட்டவை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதை விரிவாக விவாதித்துள்ளனர்.

அத்துடன் இது மட்டுமின்றி, காணொளி ஊடாக மநாட்டில் கலந்துகொண்ட உக்ரைன் ஜனாதிபதி அவர்களும், ரஷ்யா முன்னெடுத்திருக்கும் போரினை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தருணம் இதுவென தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவும் ஜி20 மாநாட்டில் கலந்துள்ள அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், சில மேற்கத்திய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், மாநாட்டை புறக்கணிக்க இருப்பதாகவும் மிரட்டியிருந்தன.

ஆனால், இந்தோனேசிய அரசாங்கம் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளதுடன், ரஷ்யாவும் கலந்துகொள்ள வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக நின்றது. இதனையடுத்து ரஷ்ய தரப்பில் வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கலந்துகொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜி20 உச்சி மாநாட்டில் தற்பொழுத கலந்துகொண்டுள்ள கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, உக்ரைனுக்கு ஆதரவாக தொடர்ச்சியாக கனடா நிற்கும் எனவும் தற்பொழுது வழங்கிவரும் ஆதரவை இன்னும் அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டில் உலக தலைவர்கள் கலந்துகொண்டுள்ளனர். இதில் கலந்துகொண்ட கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, "ரஷ்யாவின் மிருகத்தனமான போர் உக்ரைனில் உணவு மற்றும் எரிசக்தி நெருக்கடிகளை உருவாக்குகிறது. இது விநியோக சங்கிலிகளை சீர்குலைக்கிறது மற்றும் வாழ்வுக்கான செலவை உயர்த்துகிறது" என அங்கு உலக வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் பொழுது கூறினார்.

அதனைத் தொடர்ந்து கனடிய பிரதமர் ட்ரூடோ தனது ட்விட்டர் பக்கத்தில், "ஜி20 தலைவர்கள் உச்சி மாநாட்டின் ஒரு நாள் இது. அடுத்த இரண்டு நாட்களில், உக்ரைனுக்கு ஆதரவாக கனடா நிற்கும், ஒற்றுமையை விரிவுபடுத்துவதன் மூலம் நமது பொருளாதாரத்தை உயர்த்த முடியும் மற்றும் கனேடியர்கள் சவால்களையும் எதிர்கொள்ள முடியும். இந்த விடயத்தில் மேலும் பல நன்மைகள் நிறைய வர விருக்கின்றன" எனவும் பதிவிட்டுள்ளார்.

ரஷ்யா மீதான கனடாவின் நிலைப்பாடு சில ஜி20 நாடுகளுடன் முரண்படுகிறது. சமீபத்திய மாதங்களில் ரஷ்யாவைக் கண்டிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களில் இருந்து சீனா, இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் விலகியிருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. முக்கியமாக இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் மிகவும் முட்டாள்த் தனமாக தனது கருத்துக்களை பகிர்ந்து வருவதாகவும் பிரிட்டினைச் சேர்ந்த தேசியப் பத்திரிகையாளர் ஒருவர் தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

இது இவ்வாறிக்க. இந்தோனேசியாவில் நடைபெறும் G20 உச்சி மாநாட்டில் பங்கேற்று பேசிய பிரித்தானியாவின் புதிய பிரதமர் ரிஷி சுனக், ரஷ்ய வெளிவிவகார அமைச்சரை உக்ரைன் காரணமாக கடுமையாகத் தாக்கிப் தனது உரையில் கண்டித்திருந்தார்.

அத்தடன் அவர் "உக்ரைனை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என கடுமையான தொனியில் ரிஷி சுனக், இந்த காட்டுமிராண்டித்தனமான போருக்கு முடிவு கட்டுங்கள் எனவும் ஆவேசத்துடன் தெரிவித்தார்.

விளாடிமிர் புடின் நிர்வாகம் ரஷ்யாவை ஒரு புறந்தள்ளப்பட்ட நாடாக மாற்றியுள்ளது என்று தனது உரையை ஆரம்பித்த ரிஷி சுனக், எந்தவொரு நாடும் அண்டை நாடுகளை ஆக்கிரமிப்பதும், பொதுமக்களைக் கொல்வதும் மற்றும் அணுசக்தி யுத்தத்தை அச்சுறுத்துவதும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என வன்மையாக் கண்டித்து சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், உக்ரைன் விவகாரத்தில், பிரித்தானியா தொடர்ந்து தனது ஆதரவளிக்கும் என்பதையும் ரிஷி சுனக் தெளிவுப்படுத்தியுள்ளார். ஆனால், ரிஷி சுனக் பேச்சுக்கு பதிலளிக்கும் வகையில் அங்கு உரையாற்றிய ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், உக்ரைனில் மேற்கத்திய நாடுகளே ரஷ்யாவுக்கு எதிராக போரிடுவதாக பொய்யான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.







மட்டுமின்றி, உக்ரைனின் ஏற்க முடியாத நிபந்தனைகளே முதன்மை காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், உலக மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதால் தானியங்கள் மற்றும் எரிசக்தி தொடர்பில் ரஷ்யா முக்கிய முடிவெடுக்க தொடர்ந்து போராடி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஸ்யாவின் வெளிநாட்டு அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்" மேற்கத்திய நாடுகளின் தலைவர்கள் பேச்சை கேட்டிருந்தால், போர் முடிவுக்கு வந்திருக்கும் எனவும் செர்ஜி லாவ்ரோவ் குற்றஞ்சாட்டியுள்ளார். உக்ரைன் நிர்வாகம் தங்களிடம் பேச மறுப்பதாகவும், ஒரு பொதுவான ஒப்பந்தத்திற்கு அவர்கள் வர மறுப்பதாகவும் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜெலென்ஸ்கி தெரிவிக்கையில், உக்ரைன் ஒருபோதும் அமைதிக்கு ஈடாக அதன் இறையாண்மை, பிரதேசம் அல்லது சுதந்திரத்தை சமரசம் செய்துகொள்ளாது என்றார்.

பேரழிவை ஏற்படுத்தும் இந்த போரை ரஷ்யா உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தருணம் இது எனவும் ஜெலென்ஸ்கி வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.



# ரணிலை எதிர் கொள்வது?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை ஒரு பொதுக் கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என்ற கருத்து இந்தியா உட்பட எல்லா மேற்கு நாடுகளிடமும் உண்டு. குடிமக்கள் சமூகங்களை சந்திக்கும் தூதுவர்கள் அதை வலியுறுத்திக் கூறுவது உண்டு. தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை ஒரே குரலில் முன்வைப்பது பலமானது என்று அவர்கள் எப்பொழுதும் கூறுவார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஆண்டுக்குள் ஒரு தீர்வை கொண்டு வரப்போவதாகக் கூறிய பின் அவருடைய அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வாவும் அவ்வாறான ஒரு கருத்தை தெரிவித்து இருந்தார். தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு இடையே முதலில் ஒற்றுமைப்பட வேண்டும் என்று.

தமிழ்க் கட்சிகளுக்கு இடையே ஒற்றுமை இல்லை. அது உண்மை. தமிழ் கட்சிகளை ஐக்கியப்படுத்தவும் முடியாது. அதுவும் உண்மை. ஒன்றாக இருக்க முடியாத காரணத்தால்தான் கட்சிகள் தங்களுக்கு இடையே பிரிந்து நிற்கின்றன. அவர்கள் கூறுவதுபோல கொள்கை வேறுபாடு அல்லது செய்முறை வேறுபாடு என்பதெல்லாம் உண்மை அல்ல. கொள்கை பொறுத்துத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் அனைத்தும் ஏறக்குறைய ஒரே விதமான தீர்வைத்தான் முன்வைக்கின்றன. செயல்வழி பொறுத்தும் அவர்களுக்கு இடையே வேறுபாடு கிடையாது. எல்லாருமே தேர்தல்மைய அரசியல்வாதிகள்தான். இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னை வித்தியாசமாகக் காட்ட முற்படுகிறது.

தன்னை ஏனைய கட்சிகளிடமிருந்து பிரித்துக் காட்டும் அந்தக் கட்சியானது தன்னை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தொடர்ச்சி போலவும் காட்டிக் கொள்கிறது. ஆனால் செயல் வழியில் அந்தக் கட்சியும் கூட்டமைப்பைப் போலதான் செயல்படுகிறது. அவர்கள் ஒரு கட்சிதான். மக்கள் இயக்கம் அல்ல. தங்களுடைய தீர்வு எது என்பதை முன்வைத்து அதை நோக்கி அவர்கள் இன்றுவரை தொடர்ச்சியாகப் போராடவில்லை. மாறாக கூட்டமைப்பும் ஏனைய கட்சிகளும் முன்வைக்கும் தீர்வுக்கு எதிராகத்தான் அவர்கள் போராடி வருகிறார்கள். நாடாளுமன்றத்தில் அக்கட்சி கூர்மையான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றது. ஆனால் அது ஒரு கட்சி தான் போராட்ட இயக்கமல்ல. எனவே,மூன்று கட்சிகளும் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றுதான். அது மட்டுமல்ல, இம்மூன்று கட்சிகளும் இதுவரை காலமும் சமர்ப்பித்த தீர்வு முன்மொழிவுகளும் ஏறக்குறைய ஒரே விதமானவைதான்.

இதைச் சற்று விரிவாகப் பார்க்கலாம். இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை வரலாற்றில் தமிழ்த் தரப்பு மிகக்குறுகிய காலத்துக்குள் அதிகளவு தீர்வு முன்மொழிவுகளை வழங்கிய ஒரு காலகட்டம் எதுவென்று பார்த்தால், அது 2016 ஆம் ஆண்டில் இருந்து தொடங்கி இன்றுவரையிலுமான ஒரு காலகட்டம்தான். 2016ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தை சாசனப் பேரவையாக மாற்றி இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகளை தொடங்கினார். அதிலிருந்து தொடங்கி இன்றுவரையிலும் தமிழ்க் கட்சிகள் தங்களுடைய தீர்வு முன்மொழிவுகளை அரசாங்கத்திடமும் நிபுணர் குழுக்களிடமும் சமர்ப்பித்து வருகின்றன. தமிழ்க் கட்சிகள் மட்டுமல்லதமிழ் மக்கள் பேரவை, குடிமக்கள் சமூகங்கள், புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் என்று பல்வேறு வகைப்பட்ட தமிழ்த் தரப்புகளும் தீர்வு முன்மொழிவுகளை முன்வைத்திருக்கின்றன. குறிப்பாக தமிழ் மக்கள் பேரவை ஒரு தீர்வு முன்மொழிவை முன்வைத்தது. அது ஒரு சமஸ்டி முன்மொழிவு. வடமாகாண சபையும் ஒரு தீர்வு முன்மொழிவை முன்வைத்தது. அதுவும் சமஸ்ரிதான். அதன் பின் விக்னேஸ்வரனின் கட்சி ஒரு முன்மொழிவை முன்வைத்தது. அது மிக உயர்வான ஒரு சமஸ்டி. அதே சமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஒரு முன்மொழிவை முன்வைத்தது. ஒரு நாடு இரு தேசம் என்று கூறிய அக்கட்சி இப்பொழுது இரண்டுக்கும் மேற்பட்ட தேசங்கள் என்ற பொருளில் பல தேசிய இனங்களுக்குரிய ஒரு கூட்டாட்சி பற்றிக் கதைக்கிறது. அவர்களும் கூறவருவது ஓர் உயர்ந்த பட்ச சமஸ்டியைத்தான்.

அதாவது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதன் அடிப்படையில் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அந்த உரிமையின் பிரகாரம் அவர்கள் ஒரு உயர்ந்த தீர்வை பெற முடியும் என்று மூன்று கட்சிகளும் கூறி வருகின்றன. எனவே கடந்த பல தசாப்த கால தீர்வு முன்மொழிவுகளை தொகுத்துப் பார்த்தால் தமிழ் மக்கள் ஏதோ ஒரு விதத்தில் சமஷ்டிப்பண்புடைய தீர்வைதான் முன்வைத்து வருகிறார்கள்.

இதில் ரணில் விக்ரமசிங்கவுடன் கூட்டமைப்பு இணைந்து உருவாக்கிய ஒரு புதிய யாப்புருவாக்க முயற்சிகள் குறித்த சர்ச்சைகள் உண்டு. அதுவும் ஒரு சமஸ்ரித் தீர்வு என்று கூட்டமைப்பு கூறியது. ஆனால் அதற்கு சமஷ்டி என்ற லேபல் கிடையாது. லேபலைப் போட்டால் அது சிங்கள மக்களைக் குழப்பிவிடும் என்று கூறி அத்தீர்வை ஒருமித்த நாடு என்ற பொருள்பட "எக்கிய ராஜ்ய" என்று அவர்கள் அழைத்தார்கள். எனினும் கூட்டமைப்பை விமர்சித்தவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சிங்கள மக்களுக்கு அதை ஒருமித்த ராட்சியம் என்று கூறிக்கொண்டு தமிழ்மக்களுக்கு அதை சமஸ்டிப் பண்புடையது என்று கூறுவதன்மூலம், இரண்டு இனங்களையும் ரணிலும் கூட்டமைப்பும் சேர்த்து ஏமாற்றுகின்றனர் என்ற ஒரு குற்றச்சாட்டை அவர்கள் முன் வைத்தார்கள். அக் குற்றச்சாட்டில் உண்மை உண்டு.

அத்தீர்வு முயற்சியை மைத்திரிபால சிறிசேன 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் குழப்பிவிட்டார். அதன்பின் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ ஒரு நிபுணர் குழுவை உருவாக்கினார். அந்த நிபுணர் குழுவின் முன் தமிழ்த்தரப்பு தனது முன்மொழிவுகளை வைத்தது.

இப்பொழுது மறுபடியும் ரணில் வந்துவிட்டார். அவர் 2018இல் தான் விட்ட இடத்தில் இருந்து தொடங்கப் போகிறாரா? அல்லது அதே தீர்வை வேறு ஒரு லேபலோடு கொண்டு வரப்போகிறாரா? அல்லது முழுமையான சம்'டிப் பண்புடைய, வெளிப்படையான ஒரு தீர்வை முன்வைக்கப் போகிறாரா ?என்ற கேள்வி இங்கு முக்கியம்.

ரணில் விக்ரமசிங்க விசுவாசமாக ஒரு தீர்வைக் காண முயற்சிக்கிறாரா என்ற சந்தேகம் உண்டு. ஏனெனில் பன்னாட்டு நாணய நிதியம், ஐநா போன்றவற்றை சமாளிப்பதற்கு ஒரு தீர்வை காண முயல்வதான ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய நிர்பந்தம் அவருக்கு உண்டு. முன்னாள் சமாதானத் தூதுவர் சூல் ஹெய்ம் களத்தில் இறங்கியிருப்பதும் அந்த நோக்கத்தோடுதான் என்று கருதப்படுகிறது. எனவே ரணில் ஏதோ ஒரு தீர்வை நோக்கி, ஏதோ ஒரு நகர்வை முன்னெடுக்கப் போகிறார் என்று மட்டும் தெரிகிறது.

அந்த நகர்வை எதிர்கொள்வதற்காக எனைய கட்சிகளோடு இணைந்து செயல்படத் தயார் என்று கூறி, கூட்டமைப்பின் பேச்சாளர் ஏனைய கட்சித் தலைவர்களுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். தமிழ்மக்கள் கேட்பது சமஸ்ரித் தீர்வைத்தான் என்பதை தமிழ்க்கட்சிகள் ஒருமித்த குரலில் கூறவேண்டும் என்ற நோக்கம் அந்த அழைப்பில் இருந்தது. அதன்படி கடந்த செவ்வாய்க்கிழமை கட்சித் தலைவர்களை சமபந்தரின் கொழும்பு இல்லத்தில் கூடுமாறும் அவர் கேட்டிருந்தார். ஆனால் அந்த நகர்வை அவர் உரிய பொறுப்புணர்ச்சியோடு பக்குவமாக முன்னெடுக்கவில்லை. குறிப்பாகத் தனது தமிழரசுகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக்கூட அவர் அது பற்றி எதுவும் தெரிவித்திருக்கவில்லையாம். இந்நிலையில் ஏனைய கட்சிகள் அந்த அழைப்பு சம்பந்தரிடம் இருந்து வரவேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிகிறது. எனவே சுமந்திரனின் முயற்சி கடந்த செவ்வாய்க்கிழமை வெற்றியளிக்கவில்லை. அந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்க்கட்சிகள் இந்த விடயத்தில் ஒன்றாகக் கோரிக்கைகளை முன்வைப்பதுதான் ரணில் விக்ரமசிங்கவை அம்பலப்படுத்தும். அது மட்டுமல்ல, பன்னாட்டு நாணய நிதியம், ஐநா போன்றவை அரசாங்கத்தை பிணை எடுக்கும்போது இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு முக்கிய முன்நிபந்தனையாக வைக்குமாறு தமிழ் கட்சிகள் நிர்பந்திப்பதற்கும் அது உதவும்.

இலங்கைத் தீவின் பொருளாதார நெருக்கடி என்பது இனப்பிரச்சினையின் நேரடி விளைவு. சிறிய இலங்கத்தீவு அதன் அளவுப்பிரமாணத்தை விட மிகப்பெரிய ராணுவத்தை வைத்திருக்கின்றது. அதில் மூன்றில் இரண்டு பகுதி தமிழ் பகுதிகளில்தான் நிலை கொண்டிருக்கிறது. உலகில் பாதுகாப்புச் செலவினம் என்று பார்த்தால் குட்டி இலங்கைத்தீவு இஸ்ரேலுக்கு அடுத்ததாக காணப்படுகிறது. 100 பிரஜைகளுக்கு எத்தனை படை வீரர் என்ற கணிப்பில் இலங்கைத்தீவு பத்தாவது இடத்தில் காணப்படுகிறது. கடந்த திங்கட்கிழமை ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்திலும் பாதுகாப்பு செலவினங்களுக்கே அதிகளவு நிதி (410 பில்லியன் ரூபாய்) ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு காண முடியாது என்றபடியால், இனப் பிரச்சினையை தீர்ப்பது என்பது பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்குரிய ஒரு முக்கிய முன் நிபந்தனையாக முன் வைக்கப்பட வேண்டும். அதைத் தமிழ்த் தரப்பு ஒரே குரலில் முன்வைக்க வேண்டும். அவ்வாறு ஒரு நிபந்தனையை முன் வைக்கும்பொழுது உலகசமூகம் தமிழ்த்தரப்பிடம் உங்களுடைய முன்மொழிவைக் காட்டுங்கள் என்று கேட்கும். அந்த நேரம் எங்களுடைய எல்லா முன் மொழிவுகளும் சமஷ்டிப் பண்புடையவை என்று தமிழ்க் கட்சிகள் ஒரே குரலில் கூறலாம்.

தமிழ்க்கட்சிகள் இதுவரை வைத்த தீர்வுகள் பெருமளவுக்கு சமஷ்டிப் பண்புடையவைதான். ஆனால் அதை அவர்கள் தனித்தனியாகத்தான் முன்வைத்திருக்கிறார்கள். எல்லாரும் ஒரு மேசையில் கூடி, ஒரே குரலில் இதுதான் எங்களுடைய தீர்வு முன்மொழிவு என்று இதுவரை முன்வைக்கவில்லை. அப்படி வைக்க வேண்டிய ஒரு தேவை உண்டு.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய கட்சிகளோடு ஒத்துழைக்காமல் விடக்கூடும். அதுவும் நல்லதே. அத்தீர்வு முன்மொழிவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டுவது போல சமஸ்டி பண்பு குறைவாக இருந்தால் அக்கட்சி அதை எதிர்க்க வேண்டும். அப்படி எதிர்க்க ஒரு கட்சி இருந்தால்தான் கூட்டமைப்பு தனியோட்டம் ஓட முடியாது.

எனவே, தமிழ்த்தரப்பு தமது தீவு முன்மொழிவுகள் அனைத்தும் சமஷ்ரிப் பண்புடையவை என்பதனை தெளிவாகவும் தீர்க்கமாகவும் அனைத்துலக சமூகத்தின் முன் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் இலங்கைத்தீவை பிணை எடுக்க முயற்சிக்கும் மேற்கத்திய தரப்புகளோடு தமிழ்த்தரப்பு உறுதியான ஒரு இடத்தில் இருந்தபடி பேச முடியும். ரணில் ஒரு நரி, சூழ்ச்சிகள் செய்கிறார் என்று தங்களுக்குள் புறுபுறுத்துக் கொண்டிருக்காமல், தமிழர்களும் தந்திரம் பழக வேண்டும்.



# ஆஸ்கார் போட்டிக்கு தேர்வான "ஜாய்லேண்ட்" திரைப்படத்துக்கு பாகிஸ்தான் தடை



ஆஸ்கார் விருது போட்டிக்குத் தேர்வான "ஜாய்லேண்ட்" என்ற பாகிஸ்தான் திரைப்படத்துக்கு அந்நாட்டில் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

ஆஸ்கார் விருது போட்டியில் கலந்து கொள்ள பாகிஸ்தான் சார்பில் "ஜாய்லேண்ட்" என்ற படம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. "ஜாய்லேண்ட்" படத்திற்கு ஆகஸ்ட் 17 அன்று பாகிஸ்தான் அரசால் சான்றிதழ் வழங்கப்பட்டது. இருப்பினும் இந்த் திரைப்படம் குறித்து பாகிஸ்தானில் சர்ச்சைகள் கிளம்பின. சமீபத்தில் அதன் கதை குறித்து ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன.

இந்த திரைப்படத்தை தடை செய்ய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்துக்கு கோரிக்கைகள் குவிந்தன. இதையொட்டி நவம்பர் 11 அன்று வெளியிட்ட அறிவிப்பில், நாட்டின் "சமூக விழுமியங்கள் மற்றும் தார்மீக தரங்களுடன்" இந்த திரைப்படம் ஒத்துப்போகவில்லை என்று அமைச்சகம் கூறியது. கண்ணியம் மற்றும் ஒழுக்க கேடுகளை விளைவிக்கும் மிகவும் ஆட்சேபனைக்குரிய விஷயங்கள் படத்தில் இருப்பதாக எழுத்துப்பூர்வ புகார்கள் பெறப்பட்டன. அதனால் இந்த திரைப்படம் தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (நவம்பர் 18 ஆம் தேதி பாகிஸ்தானில் இத திரைப்படம் திரையரங்குகளில் வெளியிட திட்டமிடப்பட்டு இருந்தது).

"ஜாய்லேண்ட்" ஒரு ஆணாதிக்க குடும்ப கதைபற்றியது. குடும்ப பாரம்பரியத்தை தொடர ஒரு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஏங்குகிறது. அதே நேரத்தில் அவர்களின் இளைய மகன் ரகசியமாக ஒரு சிற்றின்ப நடன அரங்கில் சேர்ந்து ஒரு திருநங்கையிடம் மயங்குகிறான். இது தான் கதை.

"ஜாய்லேண்ட்" புகழ்பெற்ற கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட முதல் பாகிஸ்தான் திரைப்படமாகும். அங்கு அது "அன் செர்டெய்ன் ரிகார்ட் ஜூரி" பரிசு மற்றும் குயர் பாம் விருதை வென்றது. இப்படம் டொராண்டோ சர்வதேச திரைப்பட விழா மற்றும் பூசன் சர்வதேச திரைப்பட விழாவிலும் திரையிடப்பட்டது.

அத்துடன், ஆசியா பசிபிக் திரை விருதுகளின் இளம் சினிமா விருதையும் வென்றுள்ளது.



# தன்னுடன் நடிக்க சில நடிகர்கள் பயப்படுவதாக கூறுகிறார் பிரகாஷ் ராஜ்

பிரகாஷ் ராஜ், அரசியல் பிரச்சினைகளை வெளிப்படையாக விமர்சிக்கும் நடிகர்களில் ஒருவர். மத்திய அரசுக்கு எதிராக சமூக வலைதளப் பக்கத்தில் தனது கருத்துகளை அடிக்கடி பதிவிட்டு வருகிறார். இதனால் தன்னுடன் நடிக்க, சில நடிகர்கள் பயப்படுகிறார்கள் என்றும் தனது தொழில் வாழ்க்கை பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறும்போது, "என் அரசியல் கருத்துகளால், என்னுடன் சேர்ந்து பணியாற்றியவர்கள், இப்போது நடிக்க ஆர்வம் காட்டுவதில்லை. அவரோடு நடிக்க வேண்டாம் என யாரும் சொல்லவில்லை. ஆனால், என் அரசியல் விஷயங்கள் அவர்களுக்குப் பயத்தை ஏற்படுத்துகின்றன. அதனால் விலகுகிறார்கள். அதில் வருத்தம் இல்லை. எந்த விளைவுகளையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். பல நடிகர்கள் அமைதி காக்கிறார்கள். அவர்களைக் குறை சொல்ல விரும்பவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

இந்தியா செய்திகள் India News

# "என் கிட்னிகளைத் திருடிய டாக்டரின் கிட்னிகள் எனக்கு வேண்டும்!" என்கிறார் பீகாரில் பாதிக்கப்பட்ட பெண்



பீகாரின் முசா.்.பர்பூர் நகரில் வசிப்பவர் சுனிதா (38). இவருக்கு கடந்த செப்டம்பர் மாதம் வயிற்றுவலி ஏற்பட்டிருக்கிறது. அதனால், அருகில் இருந்த ஆர்.கே.சிங் என்ற மருத்துவருக்குச் சொந்தமான தனியார் நர்சிங் ஹோமில் சிகிச்சைக்காகச் சென்றிருக்கிறார். அவரைப் பரிசோதித்த மருத்துவர் ஆர்.கே.சிங், சுனிதாவுக்கு கர்ப்பப்பை தொற்று இருப்பதாகவும், அதற்காக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனவும் கூறியிருக்கிறார். அதைத் தொடர்ந்து, செப்டம்பர் 3-ம் தேதி அறுவை சிகிச்சையும் செய்திருக்கிறார். அதன் பிறகும் சுனிதாவின் உடல்நிலை மோசமடைந்திருக்கிறது. அதையடுத்து, உறவினர்கள் அவரை மற்றொரு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதித்ததில், அவரின் இரண்டு சிறுநீரகங்களையும் காணவில்லை என மருத்துவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அதிர்ச்சித் தகவலைத் தொடர்ந்து, உடனடியாக அவர் பாட்னாவிலுள்ள இந்திரா காந்தி மருத்துவ அறிவியல் கழகத்துக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருக்கிறார். இதற்கிடையில் சுனிதா காவல்துறையிடம் ஆர்.கே.சிங் குறித்து புகார் அளித்திருக்கிறார். ஆனால், குற்றம்சாட்டப்பட்ட டாக்டர் ஆர்.கே.சிங், செப்டம்பர் மாதம் முதல் தலைமறைவாகி விட்டார். மேலும் அவர் எங்கிருக்கிறார் என்பது குறித்து எந்தத் தகவலும் காவல்துறைக்குக் கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் செய்தியாளர்களிடம் பேசிய சுனிதா, "என்னுடைய இரண்டு கிட்னிகளையும் திருடிய மருத்துவரை உடனடியாகக் கைது செய்யுமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். அவரின் கிட்னி, மாற்று அறுவை சிகிச்சைக்காக எனக்கு வேண்டும். ஏனென்றால் எனக்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்காக நான் உயிர் பிழைக்க வேண்டும். மேலும், இது போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டால், பணத்துக்காக ஏழைகளின் உயிருடன் விளையாடும் பேராசை பிடித்த மருத்துவர்கள் அனைவருக்கும் ஒரு பாடமாக இருக்கும்" எனத் தெரிவித்திருக்கிறார்.

இதைத் தொடர்ந்து, சுனிதா குறித்துப் பேசிய மருத்துவர்கள், "சுனிதாவுடைய உடல்நிலையைக் கருத்தில்கொண்டு ஒவ்வொரு நாளும் நாங்கள் அவருக்கு டயாலிசிஸ் செய்து வருகிறோம். அவருடைய நிலைமையை நாங்கள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். அந்தப் பெண்ணுக்கான மாற்றுச் சிறுநீரகத்துக்கு ஐ.ஜி.ஐ.எம்.எஸ்-ஸில் பதிவு செய்திருக்கிறோம். சிறுநீரகங்கள் கிடைத்தவுடன், அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்படும். இருப்பினும் சுனிதாவுக்கு உடனடியாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்" எனத் தெரிவித்திருக்கிறார்கள்.

# தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 15 பேர் மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலை

இலங்கை செய்திகள் Sri Lanka News



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கடற்படையினரால் கடந்த 6 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களில் 14 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட தோடு 14 வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க மன்னார் நீதவான் கடந்த 7ஆம் திகதி உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த 15 பேரும் வியாழக்கிழமை (17) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட 14 இந்திய மீனவர்களும், சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளின் கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்ட 14 வயது சிறுவனும், இவ்வாறு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை தலா ஒரு வருட சிறைத்தண்டனையை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்து குறித்த மீனவர்களை விடுதலை செய்தார்.



இந்த நிலையில் குறித்த 15 பேரும் மிகிரியாகம முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து அவர்கள் நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய உயர்ஸ்தானிக அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் படகு ஒன்றின் உரிமையாளர் வியாழக்கிழமை (17) சட்டத்தரணி ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாகி தனது படகை விடுவிக்க கோரி சட்டத்தரணி ஊடாக மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த படகின் உரிமையாளரை மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரியிடம் வாக்குமூலம் வழங்குமாறு உத்தரவிட்டதோடு, குறித்த விசாரணை யை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் மறைமாவட்ட ஆயர் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தனர்



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை உள்ளிட்டகுழுவினர் புதன்கிழமை (16) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தனர்.

மன்னார் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் விளக்கமளிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# If it Fails Now, it Will Fail Forever:

## *The recent resolution on Sri Lanka and a few genuine concerns of an Eelam Tamil*

Nimal Vinayagamoorthy - Toronto, Canada



In the recently concluded UNHRC, another resolution on Sri Lanka A/HRC/51/5 was passed in October. Over the last 10 years, since 2012, five resolutions have been passed but none have brought respite to the sufferings of the Tamils in the North and East of Sri Lanka.

The different governments in Sri Lanka over the past ten years have categorically stated that they would never act against the armed forces; this makes the any number of resolutions passed useless and impotent. The need to fulfill the political aspiration of the aggrieved Tamils in Sri Lanka is nowhere to be seen in the recent resolutions. Democratic elections to the provincial councils are due since a long time.

There is no urgency or urge to conduct them and the UNHRC and the International community has failed in its task to hold the government responsible despite them making appeals to bail out Sri Lanka from the economic crisis. India, which has pumped in billions of dollars recently has also been silent on the demand to conduct free and fair elections to the provincial councils.



For over 2,000 days, the relatives of the disappeared Tamils are demanding justice in scorching sun and tropical rains. They have been shamed, tortured, belittled and hounded by the armed forces with the complete backing of the successive governments.

Though the UN has time and again condemned the high-handed approach of the government of Sri Lanka in dealing with the peaceful protesters, nothing substantial at the ground level has happened. Whereas, the anti-government protestors in the South were able to compel the President, the Prime Minister and the other ministers to resign and topple a government in the form of a democratic protest; the same peaceful protest to seek justice is denied to the Tamils.

Right to freedom of expression and right to peaceful assembly are two key rights in any civilized democracy. The North and the East did not witness any anti-government protests, whereas in the South of Sri Lanka, the government forces have terrorized the civilians to such an extent that they are unable to openly protest for their justice.

In the report of the UN High Commissioner for Human Rights, the outgoing High Commissioner has very clearly pointed out the lacunae in the system and the impunity enjoyed by various departments which are meant to enforce human rights.

Among them, the important governmental authorities pointed out includes, the Human Rights Commission of Sri Lanka, the Office on Missing Persons, the Office on Reparations, and the National Authority for the protection of Victims of a Crime and Witnesses.

Sri Lanka, popularly known as the island of impunity has never respected any of its international obligations including the Indo-Sri Lankan accord of 1987 to implement the 13th amendment. In this context it is highly impossible that these government offices would respond to the calls of the UNHRC. While the 13th amendment is not a solution to the genocide endured by Eelam Tamils, the constitutionally embedded notion will help Eelam Tamils decrease the political disparities prevalent in Sri Lanka.

The bane of Sri Lanka's problem leading to the economic crisis is the unwanted spending on the armed forces. Despite the war ending in May 2009 and the government declaring that it does not face any internal threat from any section of the society in the North or East, the ratio of soldiers to civilians in the Tamil heartland is one of the highest in the world. "The new government should immediately reverse the drift towards militarisation, end the reliance on draconian security laws and crackdowns on peaceful protest," the UN Office of the High Commissioner for Human Rights (OHCHR) said in its latest report, adding further, "deepening militarization and lack of transparency and accountability in governance, which have embedded impunity for serious human rights violations and created an environment for corruption and the abuse of power." There was also a clarion call to, "show renewed commitment to security sector reform and ending impunity".

The High Commissioner for Human Rights in her previous reports, had demanded thorough investigations and prosecutions under universal jurisdiction and a hybrid mechanism. It is a well-known fact that Sri Lanka will never set up a Truth and Reconciliation commission and bring the perpetrators of the gruesome genocide for prosecution. Hence, the only way left is to refer the cases to the International Criminal Court.

"Fundamental changes will be required to address the current challenges and to avoid repetition of the human rights violations of the past," said the OHCHR report.

One of the most important fundamental changes expected from the South is the change of the Sinhala mindset as well as respect the Tamils as human beings with wants and emotions. On the path of search for justice and freedom, Eelam Tamils lost several brave souls who sacrificed their lives in this fight. One of the most revered days for the Eelam Tamils is the 'Maveerar Naal' or Martyr's Day, observed on the 27th of November every year, commemorating the memories of those Tamils who died fighting the Eelam wars. Since 2009, the Government has not allowed this emotional memorialization of the Tamils to pay respect to the Maveerar.

In this atmosphere of change in the South, if the Sri Lankan government remains as a government for everyone and allows the Tamils as a right and goodwill gesture to observe the Maveerar Naal, or only allow the southern protestors their right to protest is to be keenly observed.

Implementing the UN resolutions is extremely essential for Sri Lanka as this would create a conducive atmosphere for the Tamils in Eelam and in the diaspora to open doors towards conducting a meaningful dialogue towards achieving lasting peace which would save all Tamils and Sinhalese people from a disaster in the future. This would also open the minds of the Tamil Diaspora to step in with their investments to rebuild the Northern and Eastern provinces economically. This is the most opportune time for Sri Lanka to set its history right, if it fails now, it will fail forever.

This author is a member of the TGTE and seeks a peaceful political solution to the Tamil Right to Self Determination.

## அம்மா

## (நிலைமண்டில ஆசிரியப்பா)



-------------------------------

*அம்மா என்றால் அன்பெனும் அர்த்தமாம்*
*சும்மா சொல்வாரா சொர்க்கம் அவளென*
*பத்து மாதம் பாரம் தாங்கியே*
*சொத்தென என்னைச் சொந்தமாய்க் கொண்டாய்*
*எறும்புஈ நெருங்கிடா இரவெலாம் காத்தே*
*பொறுப்புடன் பொழுதெலாம் பத்தியம் இருந்தாய்*
*உதிரமே பாலாய் உணவாய் ஊட்டியே!*
*மதியுடன் வாழ மழலையில் பொழிந்தாய்*
*தடுக்கிலே ஊர்ந்தும் தவழ்ந்தும் செல்கையில்*
*இடுக்கண் வராமல் இமைபோற் காத்தாய்*
*பல்லு முளைக்கப் பரவசம் கொண்டே*
*பல்லுக் கொழுக்கட்டை பதமாய்ச் செய்தாய்.*
*எட்டு அடியை எட்டியே வைக்கையில்*
*கட்டியோர் முத்தம் கனிவாய்த் தந்தாய்*
*ஐந்து வயதில் அணைத்துச் சென்றுமே*
*புந்தி புகட்டப் பள்ளியிற் சேர்த்தாய்*
*வாலிப வயதில் வாழ்க்கைத் துணைக்கு*
*தாலியைத் தரிக்கவைத்து தம்பணி முடித்தாய்*
*பிள்ளை எனக்குப் பிறந்த போதிலே!*
*கொள்ளை இன்பம் கொண்டு களித்தாய்*
*சோதனை பலவும் சோதித்த போதுமே!*
*சாதனை பலவற்றைச் சாதிக்கச் சொன்னாய்*
*விண்ணை நோக்கநீ விரைந்த போதுமே!*
*மண்ணில் மறவேன் மரிக்கும் வரைக்குமே!*

-------------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# இலங்கை வரலாறு மற்றும் சமூகத்தில் வேடர்கள் பற்றிய மறுவாய்வு

- பேராசிரியர் ஆர் எஸ் பேரின்பநாயகம்

வேடர்களின் உருவாக்கம் – கணநாத் ஓபயசேகரா எழுதிய **Colombo: Sailfish Publications:2022** என்ற நூலில் முந்தைய நூல்களில் மேற்கத்திய அறிஞர்கள் மற்றும் அய்ரோப்பிய குடியேற்றக்காரர்களின் கூற்றுக்களை இடித்துத் தள்ளினார். அய்ரோப்பியர் ஆளவும் சுரண்டவும் முயன்ற சில நாடுகளின் பழங்குடி மக்கள் நரமாமிசம் உண்பவர்கள் என்ற ஒரு பொதுவான பார்வை இருந்தது. அவர்கள் தங்களது பணியின் மூலம் கப்டன் குக் மற்றும் சில மேற்கத்தியர்களை புனிதப்படுத்தினார்கள். இதன் பின்னணியில் கணநாத் ஓபயசேகரா இலங்கை பற்றிய வரலாற்றில் மீண்டும் ஈடுபட்டார். பத்தினி வழிபாடு மற்றும் கதிர்காமத்தில் உள்ள கோவிலில் உள்ள நடைமுறைகள் பற்றிய அவரது புத்தகத்தின் மூலம், அவர் சிங்கள சமூகம் மற்றும் அதன் இன அமைப்பு மற்றும் மத நடைமுறைகள் பற்றிய சில கட்டுமானங்களை சவாலுக்கு உட்படுத்தினார். நவீன இலங்கையில் பவுத்தம் பற்றிய தனது படைப்பில், வங்காளத்தில் இருந்ததைப் போலவே, பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவத்தால் அது எவ்வாறு தாக்கம் செலுத்தப்பட்டது என்பதை பிரம்ம சமாஜத்தின் வடிவத்தில் காட்டினார். மற்றும் பல.

**Now, in another of his learned works Gananath Obeyesekere comes this time to challenge another thesis developed by many authors about the Väddas of Sri Lanka and to provide an alternative, strictly evidence based, interpretation.**

இப்போது, அவரது கற்றறிந்த மற்றொரு படைப்பில், கணநாத் ஓபயசேகர இலங்கையின் வேடர்கள் பற்றி பல ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட மற்றொரு ஆய்வறிக்கையை சவால் செய்வதற்கும் மாற்று, கண்டிப்பான ஆதார அடிப்படையிலான விளக்கத்தை வழங்குவதற்கும் இந்த முறை வருகிறார்.
இந்த மனதைக் கவரும் விதமான விரிவான ஆய்வில் அவர் தனது அணுகுமுறையை பின்வருமாறு விவரிக்கிறார்:

**He describes his approach in this mind-bogglingly detailed study of the Väddas as follows:**

**The historical methodology I adopt is as follows. It is impossible to deal with the long historical run of the Vädda presence in Sri Lanka without understanding their presence in more recent times. Thus, I will focus on the Kandy period literature, particularly between the late 16th and the early 19th centurie a period for which we have reasonable historical records. Once we have this historical understanding, followed by the colonial intrusions, especially the disruptive British conquest of the Kandyan kingdom, and also our current fieldwork, we might be able to reach back to earlier times, albeit with extreme caution and tentativeness owing to the paucity of records. The texts that I examine are not classical historical and literary works in Pali and Sinhala written by highly sophisticated literati, mostly monks, but rather those written by a village intelligentsia on palm leaf manuscripts (pus-kola pot) found nowadays in public and private collections.**

இந்த மனதைக் கவரும் விதமான விரிவான ஆய்வில் அவர் தனது அணுகுமுறையை பின்வருமாறு விவரிக்கிறார்:
நான் பின்பற்றும் வரலாற்று வழிமுறை பின்வருமாறுடு: அண்மைக் காலத்தில் இலங்கையில் வேடர்களின் பிரசன்னத்தைப் புரிந்து கொள்ளாமல் நீண்டகால வரலாற்று ஓட்டத்தை கையாள்வது சாத்தியமற்றது. எனவே, கண்டி இராச்சிய கால இலக்கியங்கள் மீது கவனம் செலுத்துவேன், குறிப்பாக 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்,
நியாயமான வரலாற்றுப் பதிவுகள் எங்களிடம் உள்ளன. கொலனித்துவ ஊடுருவல்கள், குறிப்பாக கண்டி இராச்சியத்தை சீர்குலைக்கும் ஆங்கிலேயர் வெற்றி, மற்றும் நமது தற்போதைய களப்பணிகள் போன்ற வரலாற்றுப் புரிதலை நாம் பெற்றவுடன், பற்றாக்குறையின் காரணமாக மிகுந்த எச்சரிக்கையுடனும் தற்காலிகத்துடனும் நாம் முந்தைய காலத்தை அடைய முடியும். பதிவுகளின். நான் ஆய்வு செய்யும் நூல்கள் பாலி மற்றும் சிங்கள மொழிகளில் மிகவும் நுட்பமான இலக்கியவாதிகள், பெரும்பாலும் துறவிகள் எழுதிய பாரம்பரிய வரலாற்று மற்றும் இலக்கியப் படைப்புகள் அல்ல, மாறாக தற்போது பொது மற்றும் தனியார் சேகரிப்புகளில் காணப்படும் பனை ஓலை கையெழுத்துப் பிரதிகளில் (புஸ்-கொல பானை) கிராம அறிவாளிகளால் எழுதப்பட்டவை. .

This methodological approach consists of using folk documents as sources of data. These documents are: bandaravalia, and vamsa katha(stories about given families), kadaim pot( boundary records of given provinces). And vitti pots(records of various events and episodes).This approach is indeed a revolutionary one with which to study Sri Lankan historiography, It is certainly a departure from the standard ones. These documents are just simple records of given families and events a well as descriptions of territorial boundaries. It was not composed for the serene joy of the pious.

இந்த முறையான அணுகுமுறையானது நாட்டுப்புற ஆவணங்களில் காணப்படும் தரவுகளின் ஆதாரங்களாகப் பயன்படுத்துவதைக் கொண்டுள்ளது. இந்த ஆவணங்கள்: பண்டாரவாலியா, மற்றும் வம்ச கதை (கொடுக்கப்பட்ட குடும்பங்களைப் பற்றிய கதைகள்), கடைம் பொட் (கொடுக்கப்பட்ட மாகாணங்களின் எல்லைப் பதிவுகள்). மற்றும் விட்டி பானைகள் (பல்வேறு நிகழ்வுகள் மற்றும் அத்தியாயங்களின் பதிவுகள்).இலங்கையின் வரலாற்றை ஆராய்வதற்கான இந்த அணுகுமுறை உண்மையில் ஒரு புரட்சிகரமான ஒன்றாகும். இது நிச்சயமாக நியாயமானவற்றிலிருந்து ஒரு புறப்பாடு. இந்த ஆவணங்கள் கொடுக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நிகழ்வுகள் மற்றும் பிராந்திய எல்லைகளின் விளக்கங்கள் ஆகியவற்றின் எளிய பதிவுகள் மட்டுமே. இது (மகாவம்சம் போல்) பக்திமான்களின் அமைதியான மகிழ்ச்சிக்காக இயற்றப்படவில்லை.

**(அடுத்த வாதம் தொடரும்)**



இந்தியா செய்திகள்
India News

# அறுவை சிகிச்சையால் சென்னை கால்பந்து வீராங்கனை உயிரிழப்பு: டாக்டர்கள் பணியிடை நீக்கம்



கால்பந்தாட்ட வீராங்கனையான மாணவி பிரியாவுக்கு கவனக்குறைவாக சிகிச்சை அளித்த மருத்துவர் சோமசுந்தரம், பால் ராம் சங்கர் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை வியாசர்பாடி சேர்ந்தவர் 17 வயது மாணவி பிரியா. இவர் கால்பந்து விளையாட்டில் கொண்ட ஈடுபாடு காரணமாக தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு பல சாதனைகள் படைந்துவந்தார். சென்னை ராணிமேரி கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துவந்த இவர், அங்கு கால்பந்து விளையாட்டில் பயிற்ச்சியும் பெற்று வந்தார்.

சமீபத்தில் பயிற்சியின் போது மாணவிக்கு காலில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. இதனால் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் பரிசோதனை செய்துள்ளார். அப்போது அவருக்கு காலில் தசைப்பிடிப்பால் சவ்வு விலகி இருப்பது எக்ஸ்ரே மூலம் தெரியவந்து.

இதனை தொடர்ந்து மருத்துவர்களின் பரிந்துரைப்படி தனது வீட்டின் அருகே உள்ள கொளத்தூர் அரசு புறநகர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். அவருக்கு மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வந்த நிலையில், தசைப்பிடிப்புக்கு அறுவை சிகிச்சையும் செய்துள்ளனர். ஆனால் பிரியாவுக்கு காலில் வலி குறையவில்லை. இதனால் சிகிச்சைக்காக மீண்டும் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அங்கு மாணவிக்கு மருத்துவ குழுவினர் செய்த பரிசேதனையில், காலில் தசைகள் அனைத்தும் அழுகக்கூடிய நிலையில் இருப்பது தெரியவந்துள்ளது. இதனால் அறுவை சிகிச்சை மூலம் காலை அகற்ற வேண்டும். இல்லை என்றால் உயிருக்கு ஆபத்து என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் கண்ணீர் விட்டு கதறி அழுதனர். பின்னர், மகளை காப்பாற்ற வேறு வழியில்லாமல் காலை அகற்ற அவர்கள் சம்மதித்தனர். இதைத்தொடர்ந்து கால்பந்து வீராங்கனையின் கால்களை மருத்துவர்கள் அகற்றினர்.

மருத்துவர்களின் அலட்சியப் போக்கு மற்றும் தவறான சிகிச்சை முறையே தங்கள் மகள் காலை இழக்க காரணம். அந்த மருத்துவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தங்களின் மகளின் வாழ்வாதாரம் கருதி அரசு வேலை அமைத்து தரவேண்டும் என்று பெற்றோர் கண்ணீர் மல்க அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தற்போது மாணவிக்கு உள்ள காயம் சரியான உடன், பெங்களூருவில் இருந்து செயற்கை கால் வாங்கி பொருத்தப்படும் என்றும், அந்த மாணவிக்கு அரசு வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மருத்துவக்குழு அளித்துள்ள விளக்கத்தின் அடிப்படையில் மாணவிக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.



இந்நிலையில், ராஜீவ் காந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கால்பந்து வீரங்கனை பிரியா சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இந்த நிலையில் அந்த மாணவிக்குக் தவறான சிகிச்சை அளித்த மருத்துவர்களை பணியிடை நீக்கம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் அந்த மருத்துவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், உயிரிழந்த மாணவியின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிவாரணமும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், உயிரிழந்த மாணவியின் உடலை பிரேத பரிசோதனை செய்து அவரது உடலை மாணவியின் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

அப்போது அங்கிருந்து வீராங்கனை பிரியாவின் நண்பர்கள் அவரது உடலை கொண்டு செல்லும் வாகனத்தின் முன் போராட்டத்தில் ஈடுபட்டனர். மருத்துவரை கைது செய்ய வேண்டும் என முழக்கங்கள் எழுப்பினர். போலீசார் குவிக்கப்பட்டு, போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடையே பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். முடிவில் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில் கால்பந்து வீரங்கனை பிரியா உயிரிழப்பு குறித்து விளக்கம் அளித்த மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

"மாணவிக்கு சிகிச்சை அளிக்கும்போது கவனக்குறைவாக செயல்பட்ட மருத்துவர்கள் பணியிடை நீக்கம் செய்யப்படுவார்கள். அதன்படி, பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் பணியாற்றி வந்த 2 மருத்துவர்களை பணியிடை நீக்கம் செய்து மருத்துவ கல்வி இயக்குநர் சாந்திமலர் உத்தரவிட்டுள்ளார். விருதுநகர் மருத்துவக் கல்லூரிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்ட சோம சுந்தரம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரிக்கு பணி மாற்றம் செய்யப்பட்ட பால் ராம் சங்கர் ஆகியோரை பணியிடை நீக்கம் செய்து மருத்துவக் கல்வி இயக்குநர் சாந்தி மலர் உத்தரவிட்டுள்ளார்.

மாணவி பிரியா மரணம் அடைந்தது மிக மிக துயரமான சம்பவம். இதை அரசியல் ஆக்கக் கூடாது. மாணவி பிரியாவுக்கு ஏற்கெனவே ஓராண்டுக்கு முன்பு காலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது 2 வாரத்திற்கு முன்பு அதேபோன்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 7-ம் தேதி பெரியார் நகரில் புறநகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவர் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று வரை அந்தக் குழந்தை நன்றாகத்தான் பேசிக் கொண்டு இருந்தாக அவருடைய பெற்றோர் என்னிடம் தெரிவித்தனர். குழந்தையின் இறப்பை யாரும் அரசியலாக பார்க்கக் கூடாது. தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது சரியான வி'யம் அல்ல. அரசியல் நோக்கத்தோடு எதையாவது கிளறி விடுவது என்பது அரசியல் தலைவர்களுக்கு சரியாக இருக்காது என்று நான் கருதுகிறேன்".

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**பிரியாவின் தந்தை உருக்கம்**

பிரியாவின் தந்தை கூறியதாவது: "சின்ன அறுவை சிகிச்சை என்பதால்தான், பெரியார் நகர் மருத்துவமனைக்கு முதலில் சென்றோம். அப்போது என் மகள் நடந்துதான் வந்தாள், இப்போது எனது பிள்ளையே போய்விட்டது".

இவ்வாறு பிரியாவின் தந்தை உருக்கமாக கூறினார்.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# நீர் வளம், நில வளம் உள்ள முல்லை மண்ணில் நிம்மதி ஏன் இல்லை?

(கனடா உதயனின் சிறப்புக் கட்டுரைத் தொடர் பாகம்-04)

யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்




**பொ**ருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை அதிலிருந்து ஓரளவேனும் மீண்டு வருவதற்கு சுற்றுலாத்துறையை பெரிதும் நம்பியுள்ளது. அவர்கள் மூலம் டொலர்கள் வரவு அதிகரிக்கும் என்று இலங்கை அரசு நம்புகிறது.

அவ்வகையில் சுற்றுலா வருபவர்கள் பெரும்பாலும் தலைநகர் கொழும்பு அதை அண்மித்த மாவட்டங்கள், தென்னிலங்கை மற்றும் மத்திய மலைநாட்டுப் பகுதிக்கே அதிகம் வருகின்றனர். கடற்கரை அழகைக் கண்டு களிப்பதற்கு கிழக்கு மாகாணத்தின் பாசிக்குடா கடற்பகுதிக்கும் அவர்கள் வருவதுண்டு.

ஆனால், போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தை மையப்படுத்தி, புலம்பெயர்ந்த தமிழர்களைத் தவிர இதர மக்கள் யாரும் சுற்றுலாவிற்கு என்று வன்னிப் பகுதிக்கு வருவதாக தெரியவில்லை.

எனினும், வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா வருபவர்களும் உள்நாட்டிலேயே சுற்றுலா செல்பவர்களும் கண்டிப்பாக முல்லைத்தீவில் உள்ள அதிசயத்தையும் கண்டு களிக்க வேண்டும். ஆசியாவின் அதிசயம் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் இலங்கையில் மட்டுமல்லாமல் வேறு எங்கும் இருப்பதாக நானறியவில்லை.

அந்த அதிசயம்தான் வீதிக்குப் படிக்கட்டு கட்டியுள்ள அதிசயமாகும். அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் சந்தியில் இருந்து துணுக்காய் செல்லும் பிரதான சாலையானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. இந்த வீதி புனரமைப்புச் செய்யப்பட்டபோது மல்லாவி நகரின் மத்தியில் வீதி ஏற்கனவே உயரமாகவும் அனிஞ்சியன்குளம் பாடசாலை முன்பாக மிகவும் இறக்கமாகவும் உள்ளதனால் வீதியின் உயரத்தில் ஏறுவது சிரமமாகவுள்ளதோடு மழைக்காலத்தில் பாடசாலையை நோக்கி அதிக வெள்ளம் வருவதனால் சிரமத்தைப் போக்க பாடசாலை முன்பாகவிருந்து சரிவாக வீதியை உயர்த்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.



இதன்போது இப்பணிக்கு வீதி வேலைக்கு மேலதிகமாக 15 கோடி ரூபா நிதி வேண்டும் எனக் கணக்கிடப்பட்ட சமயம் அந்த நிதியைப் பெறவும் அப்பகுதி மக்கள் அலைந்து திரிந்து ஒப்புதல் பெற்றுக் கொடுத்தனர்.

இந்த வீதி அமைப்பின்போது அனிஞ்சியன்குளம் பாடசாலை முன்பாக பள்ளமாக இருந்த இடத்தில் 3 அடி உயர்த்தி சமன் செய்ய வேண்டிய வீதியில் மெத்தப்படித்த பொறியியலாளர்கள் ஏற்கனவே உயரமாக இருந்த அதே இடத்தில் மேலும் 3 அடி உயர்த்தி மல்லாவி நகரில் இருந்த அத்தனை வர்த்தக நிலையத்தையும் புறமொதிக்கு போக்குவரத்திற்கும் சீர் அற்ற ஒரு வீதியை அமைத்தனர். இதன்போது 15 கோடி ரூபாவினையும் விரயம் செய்து தரம் அற்ற அபிவிருத்தி ஒன்றை மேற்கொண்டபோது மல்லாவி மக்களும் வர்த்தக சங்கமும் சந்திக்காத அதிகாரிகளும் இல்லை கோரிக்கை விடாத அமைச்சர்களும் இல்லை.

இதனையடுத்து அந்த அதிசய கட்டுமானம் செய்யப்பட்ட இடத்திற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் வரை நேரில் சென்று பார்த்தபோது உயர்த்திய அளவை உடைத்துத் தருமாறு மக்களும் வர்த்தகர்களும் கெஞ்சினர்.

ஆனால், அந்த வீதியை உடைத்தால் கட்டுமான வேலை செய்தவர்களே செலவு செய்த பணம் முழுவதையும் பொறுப்பேற்க வேண்டி வரும் என்பதனாலும் அதற்குப் பொறுப்பானவர்களின் வேலைக்கே ஆபத்து நேரிடும் என்பதனாலும் அதிகாரிகள் அது தொடர்பில் சிந்திக்கவே மறுத்து விட்டனர். இதன் பின்னரே வீதியின் நடுவே இருந்து கரைக்குச் செல்ல வீதியில் இரு இடங்களில் படிகட்டும் கேலிக்கூத்து இடம்பெற்றது. இந்த வீதியை உடைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் இன்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

வீதிப்பணிக்கு அநியாயமாக 15 கோடி ரூபா செலவு செய்தபோதும் அவலங்கள் மட்டுமே அதிகம் நிறைந்த மாவட்டமான முல்லைத்தீவில் சகல தரத்திலான 2 ஆயிரத்து 95 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் காணப்படும் நிலையில் போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை 414 கிலோ மீற்றர் வீதிகளே தார் வீதிகளாகவும், தார்ப் படுக்கை (காப்பெற்) வீதிகளாக மாற்றப்பட்டு 1,681 கிலோ மீற்றர் வீதிகள் கிடங்கும், கிரவலும், மண்ணுமாகவே காட்சி தருகின்றன.

அதாவது வீதிகள் அனைத்துமே வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி சபைகளிற்கு சொந்தமானவை. இவை தவிர விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான போக்குவரத்து பாதைகளும் உண்டு.



இவற்றிலே "ஏ" தர வீதியில் 99.92 கிலோ மீற்றர் வீதியும் "பி" தரத்தில் 103.13 கிலோ மீற்றர் வீதியுமாக 203 கிலோ மீற்றர் நீள வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆளுகையின் கீழும், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ்த்தர வீதியில் 399.95 கிலோ மீற்றர் வீதியும் டீ தர வீதியில் 17.5 கிலோ மீற்றரும் உள்ளது.

இதேபோன்று உள்ளூராட்சி சபைகளிற்குச் சொந்தமான வீதிகளில் 1,475 கிலோ மீற்றர் வீதிகள் உள்ளன. இவற்றிலே "சீ" மற்றும் "டீ" தர வீதிகளில் போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும் 80 கிலோ மீற்றர் வீதி மட்டுமே முழுமையான தார் வீதியாக செப்பனிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளிற்கு சொந்தமான 1,475 கிலோ மீற்றர் வீதியில் கொங்கிறீட் வீதிகளாக 35 கி.மீற்றரும் தார் வீதிகளாக 99 கிலோ மீற்றரும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதே நேரம் மேலும் 711 கி.மீ வீதியானது கிரவல் கொண்டு சீர் செய்யப்பட்டுள்ள அதே நேரம் மேலும் 626 கி.மீற்றர் வீதி வெறும் மணல் வீதிகளாகவே உள்ளன.

இந்த ஒரு விபரமே இந்த மாவட்டத்தின் அவலத்தின் தன்மையை எடுத்தியம்பும் என நம்புகின்றேன்.

இன்று உலகம் முழுக்க வருமானத்தின் பெரும்பகுதி இரு விடயங்களிற்கே செலவிடப்படுகின்றது. அது இலங்கைக்கும் பொருந்தும். அது முல்லைத்தீவிற்கு மட்டும் விதி விலக்கு அல்ல. அதாவது உலகம் இன்று கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய இரு துறைகளிற்கே அதிக பணம் அல்லது வருமானத்தின் பெரும்பகுதி செலவிடப்படுகின்றது. அது அரச வைத்தியசாலை, அரச பாடசாலைகளிற்கு அப்பால் தற்போது இலங்கையில் தனியார் வைத்தியசாலை மற்றும் தனியர் கல்விக் கூடங்களிலேயே அதிகம் நாடுவதன் மூலமே பெருந்தொகை நிதி வெளிச் செல்கின்றது.

வடக்கு மாகாணத்தில் அதிக வைத்தியசாலையோ அல்லது அதிக கல்வி நிலையங்களோ யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில்தான் உள்ளன. அதனால் கல்வி மற்றும் சுகாதாரங்களிற்காக முல்லைத்தீவில் செலவு செய்யும் நிதியும் பிற மாவட்டத்திற்கே செல்கின்றது. இதனைப் போக்க தனியார் வைத்தியசாலைகள்



முல்லைத்தீவில் முதலிடவும் அதிகம் நாட்டம்கொள்ளமாட்டார்கள். ஏனெனில் இதிலும் இரு முக்கிய விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன. ஒன்று வைத்தியர்கள் இரண்டாவது அதிக



எண்ணிக்கையானோர். இது இரண்டையும் முல்லைத்தீவில் எதிர்பார்ப்பது மட்டுமல்ல அங்கே கிடையாது என்பதே யதார்த்தம். அதனை எக்காலத்திலும் இங்கே நிவர்த்தி செய்ய முடியாது என்பதும் தெரிகின்றது. ஏனெனில், மாவட்டத்திற்கு 95 வைத்தியர்கள் தேவையாகவுள்ள நிலையில் இன்றுவரை 61 வைத்தியர்களே பணியில் உள்ளனர். இதே நேரம் இவர்களிலும் 20ற்கும் மேற்பட்டவர்கள் சிங்களவர்கள். அவ்வாறானால் ஏன் மருத்துவர்கள் இந்த இடங்களில் பணியாற்ற முன்வருவது இல.லை எனக் கேள்வி எழுந்துள்ளது. இந்தக் கேள்வியை மருத்துவர்களிடம் எழுப்பும் போது மருத்துவர்கள் எழுப்பும் பதில் கேள்வியிலும் நியாயம் இருப்பதாகவே தெரிகின்றது. அதாவது இந்த மாவட்டத்தில் இருந்து ஆண்டிற்கு 4 அல்லது 5 பேர் மருத்துவத்துறைக்குத் தேர்வாகின்றனர். அதன்படி 2010ஆம் ஆண்டிற்கு பின்பு தேர்வானவர்களிலேயே 35 முதல் 40 பேர் வரை மருத்துவர்களாக வெளிவந்துள்ளனர். ஆனால் அந்த மாவட்ட வைத்தியர்களே 20 பேர்தானே பணியில் உள்ளனர். அதாவது அந்த மாவட்ட மக்கள் தொகையின் பிரகாரம் மாவட்ட கோட்டாவில் தேர்வாகி பல்கலைக்கழகம் வந்த மருத்துவர்களே யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி மற்றும் வெளிநாடு எனப் பணியாற்றும்போது நாம் ஏன் அவர்கள் தொடர்பில் மட்டும் சிந்திக்க வேண்டும் என எழுப்பும் பதில் கேள்வியால் அந்த விடயத்திற்கு அத்தோடு முற்றுப்புள்ளி இடப்பட்டது.

இதேநேரம் வைத்தியசாலைகளின் தேவை தினமும் வேறுபட்டதாக இருப்பினும் 2016ஆம் ஆண்டுவரை உயிரிழந்தவர்களின் உடல்களை பிணவறையில் கைத்தொலைபேசியின் வெளிச்சத்தில் தேடும் அவலத்துடனேயே இங்கே காணப்பட்டதன் சான்று இன்றும் உள்ளது.



இவை இவ்வாறெனில் மாவட்டத்தில் 3,389 குடும்பங்கள் இருப்பிடத்திற்கு காணி இன்றியும் 9 ஆயிரம் குடும்பங்கள் இருப்பிடம் இன்றியும் உள்ளதாகக் கணக்கிடப்பட்டாலும் 922 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டும் உரிமையாளர்களை காணவில்லை என்னும் நிலையில் அனாதரவாகக் காணப்படுகின்றன. அதாவது இவை அனைத்தும் வீட்டுத் திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்ட வீடுகள் என்பதுதான் மிகப்பெரும் ஆச்சரியம்.

பாமர மக்களிற்கு வழங்கிய வீடுகளில்தான் மக்கள் இல்லை என்றால், சில முஸ்லீம் மக்கள் புத்தளத்திலும் வீடுகளை வைத்திருக்கும் நிலையில் இங்கும் வீட்டுத் திட்டம் வழங்கியதனால் அவை இன்று கட்டப்பட்ட காலம் முதல் பாழடைகின்றன எனக் கூறப்பட்டாலும் மாங்குளம் பகுதியிலே 50 அரச உத்தியோகத்தர்களிற்கு அரச வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. அந்த திட்டத்தில் இன்று 8 வீடுகளில் கூட மக்கள் இன்றி அவை பாழடைந்து காணப்படுவதுடன் சமூக விரோத செயல்களின் கூடாரமாகவும் காணப்படுவதாகக் குற்றம் சாட்டுவதோடு இதுதான் இந்த மாவட்டத்தின் அபிவிருத்தியின் அடையாளமாகவும் காட்சி தருகின்றது என்கின்றனர் அயல் கிராம மக்கள்.

(அவலப் பட்டியல் தொடரும்)

amazon workforce staffing

**In Person**

**Over 200 vacancies**

# Multi-Employer Job Fair

## Wednesday, Nov 23, 2022

10 am – 3 pm

**Companies and Positions:**

- **Optima Communications** - Customer Sales and Service Rep, Inbound Customer Service Rep
- **Freshii** – Crew Member
- **Steer** – Driver, Customer Service Rep
- **Canda Six Fortune** - Inventory Planner, Warehouse Assembler, Truck Driver G License
- **Sienna Senior Living** – PSW
- **Mampster** - Packaging, Dough Maker, Production Lead Hand
- **Elite Residential** – Security Guard, Concierge
- **A&T Human Resources** - General Labour, Forklift Driver, CNC Operator, receiving Clerk, Sewing Operator
- **Leap Recruitment Partners** – Insurance Role, Admin/Customer Service, Forklift Driver
- **Securiguard** – Security Guard
- **Indraprastha Indian Cuisine Restaurant** - Chef, Kitchen Helper, Dishwasher, Front Server
- **OSL** - Territory Representative, Account Consultant, Wireless Associate
- **Durabond Janitorial Services Ltd.** - Outside Sales Rep, Operations Coordinator, Cleaner
- **NPower Canada** - Jr. IT Analyst, Jr. Data Analyst
- **CareFirst** - PSW, Personal Care Aide, Home Helper/Cleaner, Facility Aide, RN, Nurse Practitioner, Social Worker, Admin Asst.
- **Paramed** - PSW, HSW, Assignment Coordinator, RN, RPN, Occupational Therapist
- **Single Point** - Call Centre Agent
- **Good Shepherd Ministries** - Kitchen Assistant, Executive Assistant, Case Worker
- **WIS International** - Data Collection Associate, Retail Representative
- **Connect6** - Call Center Rep, Event Sales Rep
- **Express Pros** - Admin Asst, Welder, Forklift Opr, General Labour, Inside and Outside Sales, Millwright, Accounting Clerk, Bookkeeper, Accounting Mgr, Office Mgr, Woodworker
- **Pickering Toyota** - Receptionist, Service Advisor, Lube Technician, Automotive Mechanic, Automotive Mechanic Apprentice
- **Saving Plumbing** - Plumber, Helper
- **Amazon** – Warehouse Associate

Please bring your **Resume and SIN Card!**

TO REGISTER IN ADVANCE USE THIS LINK OR QR CODE: bit.ly/3E7o1OH

OPTIMA freshii STEER CANDA SIX FORTUNE Sienna Senior Living ParaMed

SINGLEPoint A&T Human Resources WIS International LEAP Recruitment Partners CONNECT6 Express Employment Professionals Securiguard

Indraprastha OSL PICKERING TOYOTA DuraBond Janitorial Services SAVING PLUMBING npower canada amazon workforce staffing

**Markham Convention Centre**
2901 Markham Road, Scarborough, ON M1X 0B6
(Markham Road and McNicoll Ave.)


**Free Parking**
More info: 416-335-5490 or 416-609-9622

Shine On Y Greater Toronto

Canada EMPLOYMENT ONTARIO Ontario

# 20ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 16 - 02 - 1984



ஆண்டவன் அணைப்பில் 23 - 11 - 2002

## செல்வன் சந்திரபோஸ் நிர்மலன் (Shan)

மாறாத நினைவுகள்





அன்பிற்கு இலக்கணமாய் அவணியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
அனைவருக்கும் நல்லவராய் நாணயத்தை காத்தீர்
இடை நடுவில் வந்த இறைவனவன் ஏனோ
எம்மிடமிருந்து உமை நிரந்தரமாய் பறித்தான்?

துன்புற்றோர் துயர் துடைத்து துணைக்கரமாகி நின்று
அடைக்கலமும் தந்து நின்றீர் ஆண்டவன் ஏன் அழைத்தான?
காலனவன் தன் கணக்கை சாலவே செய்திட்டான்
மண்விட்டு நீரும் வானுலகம் சென்றீரோ?
விண்ணுலகம் சென்ற உம்மை நினைத்த வண்ணம்
கண்ணீர் சொரிந்து கரைகின்றோம் ஆற்றுவாரில்லை
ஆறுதல் சொல்லி சொற்களும் வரண்டே போயின

நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே
அன்பானவரே உம் பெயரும் அதுபோல நிலைக்கும்
கல்மனம் படைத்த காலனவன் கவர்ந்தானோ
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்

**என்றும் உன் நீங்காத நினைவுகளுடன் உனது குடும்பம்**

**(905) 554-2433**

# இலங்கை பட்ஜெட்: தீர்வுகளைத் தராத தீர்வுத் திட்டம்

- கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி & சிவா பரமேஸ்வரன்



*இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு*

*திருக்குறள் - பொருட்பால் - அரசியல் - இறைமாட்சி - குறள் எண் 385*

*பொருள் வருவாய்க்கான வழிகளை உண்டாக்கலும், வரும் பொருளைச் சேமித்தலும், பாதுகாத்தலும், நாட்டின் நலத்திற்கு தக்கபடி செலவிடுவதுமே வல்லமை வாய்ந்த நல்லரசு.*

தாவிவரும் குதிரையைப்போல நூற்றுக்கு 68 சதவீதத்திற்கும் அதிகமான பணவீக்கம் (galloping Inflation) காரணமாக உணவு உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாமல் நாட்டின் அரைப்பங்கிற்கும் மேற்பட்டோர் வறுமையில் உழலுகின்றனர்.

அதேவேளை மத்தியதரவகுப்பு என்று இதுவரையில் சொல்லப்பட்ட அரச துறை மற்றும் தனியார்த் துறை ஊழியர்கள் மற்றும் சிறுதொழில் முனைவோரை உள்ளடக்கிய குழு திடீரெனக்கவிழ்ந்து விழுந்து தொழில் புரியும் வறிய வகுப்பினராக (working poor) அவதாரம் எடுத்துள்ள நிலையில், தொழில் இழப்புகளால் வருவாயை இழந்து பட்டினியால் வாடும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாக உள்நாட்டு விமர்சகர்களும் சர்வதேச நிறுவனங்களும் எச்சரிக்கை விடுத்துள்ள பின்புலத்தில் 2023 ஆண்டுக்கான இலங்கையின் பட்ஜெட் அண்மையில் வாசிக்கப்பட்டது.

இப்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் இருந்து மக்களை பாதுகாக்கும் ஒரு பட்ஜெட் வரவேண்டும் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்த நிலையில் "ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த மகிழ்ந்த நீரோ மன்னனைப்போன்று" தமது கற்பனை உலக இலக்குகளை எல்லாம் கட்டவிழ்த்துவிட்டு எட்டாத ஒரு பட்ஜெட்டை மக்களின் எதிர்பார்ப்புகளை ஒட்டாத ஒரு பட்ஜெட்டை வாசித்திருக்கிறார் விக்கிரமசிங்க பூபதி.



நாட்டில் தற்போது நிலவும் பிரச்சனைக்கு உடனடித் தீர்வையே இந்த பட்ஜெட்டில் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் கனவுலகிலேயே காலம் முழுவதும் சஞ்சரிக்கும் ஆட்சியாளர்களும் அவர்களுக்குத் தலைமையேற்றுள்ள "பின்வாசல்" ஜனாதிபதி ரணிலும் தனக்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளைப் போலவே நடைமுறைக்கு ஒவ்வாத விஷயங்களை கூறி முட்டைக்கு வெள்ளையடித்துள்ளனர். நிகழ்கால யதார்த்தங்களை விளங்கிக்கொண்டு அதற்கு தீர்வுகளை அளிக்காமல் எதிர்காலத்தில் தேனும் பாலும் ஓடும் என்று ஆகாயத்தில் கோட்டை கட்டி மக்களை வாழ வைப்பதாகப் போலி வாக்குறுதி அளிக்கிறார்.

*2048 இல்* இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுகிறதா இல்லையா என்பதைச் சிந்திக்க இப்போது நேரமில்லை. ஒரு பட்ஜெட் ஒரு வருடத்திற்குரிய நிதி அறிக்கையே தவிர ஒரு அரசாங்கத்தின் நீண்ட கால கொள்கை அறிக்கையல்ல. பிரித்தானியாவின் புகழ்பூத்த பொருளியல் வல்லுநரும் *1928 இல்* ஏற்பட்ட உலகப்பெருமந்தத்தின் பாதிப்பிலிருந்து மீட்சி பெற உதவிய கொள்கைகளை வகுத்தவருமான ஜோன் மேனார்ட் கெயின்ஸ் என்பவர் குறுங்காலப் பிரச்சினைகளுக்கு நீண்ட காலத் தீர்வுகளை முன்வைக்க முயலுபவர்களை நோக்கி "நீண்டகாலத்தில் நாம் அனைவரும் இறந்துவிடுவோம்" (in the long run we are all dead) என்றார். அதே வாசகத்தையே விக்கிரமசிங்க பூபதிக்கும் இப்போது சொல்ல வேண்டியுள்ளது.

இப்போதுள்ள பிரச்சினைக்கு உடனடித்தீர்வு என்ன? ஒரு வருடத்திற்குள் நிலைமையை வழமைக்கு கொண்டுவர என்ன திட்டம் உள்ளது? அதைச் சொல்லுங்கள். அதைவிடுத்து மக்கள் நிகழ்காலத்தில் அனுபவிக்கும் துயர நிலை பற்றி கிஞ்சித்தும் சொரணை இல்லாமல் பொருளாதார வளர்ச்சியை 8 சதவீதமாக அதிகரிக்கப்போகிறேன் வெளிநாட்டு வர்த்தகத்தை 100 வீதத்திற்கு மேல் அதிகரிக்கப்போகிறேன் அடுத்தவரும் பத்துவருடத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை வருடாந்தம் 3 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பேன் என்றெல்லாம் அடைய முடியாத இலக்குகளை அடுக்கிக் கொண்டு போவது வேடிக்கையாக உள்ளது.

கடந்த 75 வருடங்களாக இதைத்தானே ஐயா சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் உருப்படியாக ஒரு ஆணியையாவது உங்களால் பிடுங்க முடிந்ததா? சிங்கப்பூரும் வியட்நாமும் பொருளாதார வளர்ச்சியில் கொடிகட்டிப்பறக்க இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடாகத் தலைகவிழ்ந்து நிற்பதற்கு மக்களா காரணம்? அரசாங்கம் மக்களுக்கு நிவாரணங்களைக் கொட்டிக்கொடுத்ததா காரணம்?




மக்களுக்கு நிவாரணம் வழங்கியமையால் நாடு இந்த நிலைக்கு வந்துள்ளதாக மறைமுகமாகக் கூறுகிறார். எனவே இம்முறை நிவாரணங்கள் இல்லை என்கிறார். உலகில் முதலாளித்துவத்தின் தாயகமாகக் கருதப்படும் அமெரிக்கா தமது மக்கள் பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்தித்த போது மக்களின் வாழ்வாதாரத்தை தக்கவைக்க ஊக்குவிப்புப் பொதிகளை வழங்கியது. வர்த்தக சமூகத்தினருக்கு சலுகைகளை வழங்கி பின்னடைவில் குறுகிய காலத்தில் மீட்சி பெற உதவியது. இலங்கை இப்போது செய்வதைப்போல பல்முனை வரிகளை அதிகரித்து மக்களின் வாழ்க்கையோடு விளையாடவில்லை.

ஒரு பொருளாதாரத்தில் எப்போது வரிகளை அதிகரிக்க வேண்டும் எப்போது நிவாரணங்களை வழங்கவேண்டும் என்பதற்கெல்லாம் கோட்பாட்டு விளக்கங்களும் நடைமுறை உதாரணங்களும் உள்ளன. இப்போது இந்த பட்ஜெட்டில் இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி தொடர்ந்த நீடித்திருக்கும் அபாயத்தை உருவாக்கியிருக்கிறது. இந்த பட்ஜெட்டில் அரசாங்கத்தின் ஒரே நோக்கம் எந்தெந்த வரிகளெல்லாம் உள்ளனவோ அவற்றையெல்லாம் அதிகரித்து கஜானாவை நிரப்புவதாகும். எவன் எக்கேடுகெட்டாலென்ன இது மட்டுமே ஒரே குறிக்கோளாகக் காணப்படுகிறது.

இலங்கையின் இன்றைய இழிநிலைக்கு மக்கள் காரணமல்ல மாறாக அதற்கு நேரடிப்பொறுப்புக் கூறவேண்டிய நான்கு பேரை அடையாளப்படுத்துவது இலகுவான காரியம். எங்கு பிழைவிட்டோம் இனித்தான் தேடப்போகிறாராம் நிதியமைச்சர். அந்த பொருளாதாரக் கொலையாளிகளையும் பிடியுங்கள் பொறுப்புக் கூறவையுங்கள். பொறுப்புக் கூறமுடியாத ஒரு மக்கள் பிரதிநிதியோ அதிகாரியோ ஒரு நாட்டின் சாபக் கேடாகும்.

இலங்கை சிலாகித்துக் கூறும் சிங்கப்பூரிலும், வியட்நாமிலும் இந்தப் பொறுப்புக் கூறல் எந்த மட்டத்தில் இருக்கிறது என்பதை விக்கிரமசிங்க பூபதி படித்துத் தெரிந்த கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்







விட்ட பிழைகளினால் நாடு சீரழிந்து கிடக்கிறது. கொள்ளை அடித்த பணம் எங்கோ கொட்டிக்கிடக்கிறது? இப்போது யாரோ செய்த பாவத்திற்கான வேறு யாரோ தண்டனை அனுபவிப்பது போல இலங்கையின் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் திருடிய பணத்தைப் பொதுமக்கள் வரிகளாகத் திருப்பிச் செலுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இந்த பட்ஜெட் தள்ளிவிட்டுள்ளது.

குற்றவாளிகள் சுதந்திரமான இறுமாப்புடன் - முடிந்தால் பிடியுங்கள் பார்க்கலாம் - என்று சவால் விடுக்கின்றனர். மறுபுறம் இந்த கொடிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பாதுகாப்பு செலவினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு மற்றும் தேசிய பாதுகாப்புக்காக 539.2 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலிருந்தோ எவ்வித பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லாத நிலையிலும் கேள்விக்கு உட்படுத்த முடியாத (holy cow) அதனை நியாயப்படுத்த இலங்கை சர்வதேச வர்த்தகத்தில் ஒரு கேந்திர முக்கியத்துவமிக்க நாடாக மாறுவதால் அதற்கு பாதுகாப்பு வழங்க இச்செலவுகள் அவசியம் என்கின்றனர்.

அதேவேளை இலங்கையிலேயே பொருளாதார ரீதியில் மிகவும் நலிவுற்ற மக்கள் வாழ்வதாக அரசாங்கமே அத்தாட்சிப்படுத்தும் மலையக மக்களின் துயர் துடைக்கவோ அல்லது முப்பதாண்டு கால யுத்தத்தால் பாழ்பட்டுப்போன வடக்கு கிழக்கு வாழ் மக்களின் வாழ்வாதார மேம்பாடு குறித்தோ அல்லது நகர்ப்புறங்களில் மிகவறிய நிலையில் உள்ள மக்கள் பற்றியோ எந்தவித கரிசனையும் காட்டப்படவில்லை. மாறாக ஜனரஞ்சகமான இலக்குகளைக் கூறி கவனத்தை திசை திருப்பம் முயற்சிக்கே பட்ஜெட்டின் பெரும்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொதுமக்கள் எதிர்பார்ப்பதெல்லாம் தாம் சிரமப்பட்டு உழைக்கும் பணத்தில் கௌரவத்துடன் உயிர்வாழக்கூடிய சூழலை உடனடியாக உருவாக்குமாறு கேட்பதைத்தவிர மக்கள் வரிப்பணத்தில் தமது கழிவறைக்கு டிஷ்யூ காகிதத்தை கூட அரசாங்கத்தின் செலவில் அனுபவிக்கும் அரசியல் வாதிகளைப்போல எவரும் அரசாங்கத்திடம் பிச்சை கேட்டு நிற்கவில்லை.



வருமானம் மாறாமல் அல்லது வருமானம் குறைந்து போயுள்ள நிலையில் நாளாந்தம் எகிறிச் செல்லும் விலைகளைச் சமாளிக்க முடியாமல் வாழ்க்கைத்தரத்தை இழந்து வாடுவோர் அதற்கொரு முடிவைத்தான் கேட்கின்றனர். வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் திணறும் மக்களுக்கு நிவாரணங்களுக்குப் பதில் உடனடிப் லொத்தர் பரிசாக பல்குழல் ஏவுகணைகள் போல எல்லா முனைகளில் இருந்தும் வரி அதிகரிப்புகளை இந்த பட்ஜெட் பரிசாகத் தந்திருக்கிறது.

குறைந்த வருமானம் உள்ளவர்கள் வற் (VAT) வரிபோன்ற நேரடி வரிகளின் அதிகரிப்பால் மோசமாகப் பாதிக்கப்படும் அதே வேளை தமது கல்வி மற்றும் வாண்மைத்திறன்கள் காரணமாக ஒரு இலட்சம் ரூபாவக்கு அதிகமாக வருமானம் பெறும் ஒவ்வொருவரும் 36 சதவீதம் வரையிலான வரியைச்செலுத்துவதோடு இறக்குமதிவரி வற் (VAT) வரி உள்ளிட்ட சகல வரிகளையும் செலுத்தவேண்டும். இந்நிலையில் இந்த மத்தியதரவகுப்பினர் நடைமுறையில் தமது வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் மேல் வரிசெலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

(தொடர்ச்சி 21_ பக்கம்)



# "மாற்றத்தை நோக்கிய பயணம்" மலையகத்திற்கும் அவசியம்!

வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• மலையகத் தெழிற்சங்க அரசியல் "சொந்த பந்தங்களின் கூடாரம்".

மலையக மக்கள் நுவரெலியா, புதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களை உள்ளடக்கிய மத்திய மலைநாட்டில் மாத்திரமல்ல வடக்குக் கிழக்கிலும் தெற்கிலும் பரந்து வாழ்கின்றனர்.

இதற்கும் அப்பால் புலம் பெயர்ந்த நிலையில் பல்வேறு நாடுகளில் பெருமளவில் இல்லாவிட்டாலும் கணிசமானோர் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழும் மலையக மக்களிடையே தாம் ஓரணியில் அணி திரட்டப்பட வேண்டும். என்ற போக்கு அண்மைக்காலமாக மேலோங்கிக் காணப்படுகின்றது. இதற்கென தமக்கான திட்டவட்டமான அடையாளம் தேவை என்ற வேட்கையுடன் இன்றைய தலைமுறை காணப்படுகின்றது. ஏனெனில் தேசிய ரீதியில் நாம் புறக்கணிக்கப்படுகின்றோம் என்பதை மலையகம் ஆழமாக உணர்வதன் வெளிப்பாடாகும்.

• மலையகத் தமிழரா?
• இந்தியத் தமிழரா?
• இந்தியா வம்சாவளித் தமிழரா?

ஏன்ற சொற்பதங்களுக்குள் தமது அடையாளத்தைத் இன்றைய தலைமுறை தேடிக் கொண்டிருக்கின்றது.

தமிழகத்தில் இருந்து குடிபெயர்ந்து 200 வருட வரலாற்றைத் தொட்டு நிற்கும் இவ் வேளையில் இலங்கையில் வாழ்கின்ற சுமார் 15 இலட்சம் மக்களின் அடையாளம் குறித்த தேடதலில் மலையகம் இறங்கியுள்ளது.

இந்த ஒட்டு மொத்த மக்களின் இன அடையாளத்தை பிரிட்டிஷ் ஆட்சியாளர் "இந்தியத் தமிழர்" என்றே வரையறுத்துள்ளனர். குடித் தெகை மதிப்பீட்டில் மாத்திரமல்ல பல்வேறு அரச ஆவணங்களிலும் "இந்தியத் தமிழர்" என்ற சொற்பதமே உத்தியோகபூர்வ இன அடையாளமாக இன்றுவரை உள்ளது.

இதற்கெதிராக "மலையகத் தமிழர்" என்று அழைக்கப்பட வேண்டும் என்ற கோஷம் 1965க்குப் பிறகு முன் வைக்கப்பட்டதன் விளைவு காலப் போக்கில் எழுத்து வடிவில் "மலையகத் தமிழர்" என்ற சொற்பதம் வழக்கத்தில் வந்தது. இன்று "மலையகத் தமிழர்" சொற்பதத்தையே பேச்சு மற்றும் எழுத்து வழக்கில் பெரும்பாலும் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால் "மலையகத் தமிழர்" என்பது அரச அங்கீகாரம் பெற்ற அடையாளமாக பிரகடனப்படுத்தப்படவில்லை.

மலையக மக்களில் கணிசமானவர்கள் குடித் தொகை கணக்கெடுப்பின் போதும் வாக்காளர் இடாப்புகளில் பெயர்களைப் பதிவு செய்யும் போதும் மற்றும் பல்வேறு ஆவணங்களிலும் தம்மை இலங்கைத் தமிழர் என்றே பதிவு செய்யத் தொடங்கினர். இதனால் இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கை தேசியரீதியில் குறையத் தெடங்கியது.

இது ஒருபுறம் இருக்க மலையகம் தனது இன அடையாளத்திற்கான சொற்பதத்தைத் தேடத் தொடங்கவே மலையகத்திற்கு வெளியில் வாழும் மலையக மக்களும் தமக்கான அடையாளம்குறித்த தேடுதலில் இறங்கியுள்ளனர்.

குறிப்பாக வடக்குக் கிழக்கில் வாழும் மலையக மக்கள் கடந்த காலங்களில் மலையக அடையாளத்தைப் புதுப்பித்துக் கொண்டபோதும் அரசியலில் தமிழ்த்தேசியத்தின் பிரிக்க முடியாத அங்கமாகவே தம்மை இணைத்துக் கொண்டிருந்தனர். அது மாத்திரமல்ல விடுதலைப்போராட்டத்தின் பங்காளராகவும் இருந்து அளப்பரிய தியாகங்களை செய்துள்ளனர்.

ஆனால் அண்மைக் காலமாக குறிப்பாக போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ்த்தேசியத்திற்குள் இருந்து ஓரங்கட்டப்பட்ட நிலையில் அதாவது தமிழ்த் தேசியம் மலையக மக்களை உள்வாங்க மறுத்ததன் விளைவு வடக்கு கிழக்கு வாழ் மலையக மக்கள் தமக்கான அடையாளம்குறித்து சிந்திக்க தலைப்பட்டுள்ளனர். தற்போது "வடக்கு மலையக மக்கள்" என்ற அமைப்பைத் தோற்றுவிக்கத் தலைப்பட்டுள்ளனர். இது தமிழ்த் தேசியம் மலையக மக்களை அரவணைத்துச் செல்ல தவறியதின் எதிர் விளைவாகும். வடக்கில் வாழ்கின்ற மலையக மக்களைப் போன்று கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்திற்கு அப்பால் செல்லத் தொடங்கிவிட்டனர். ஒற்றுமைப்பட வேண்டிய காலத்தில் தமிழ்த் தேசியத்தை சிதறடிக்க தமிழ்த் தலைமைகளே வழிசமைத்துவிட்டமை துரதிஷ்டமே.

• இணையவழிக் கலந்துரையாடல் உருவாக்கிய அதிர்வலை

மலையக அடையாளம் குறித்த இணைய வழிக் கருத்தாடல்கள் மலையக நலன் விரும்பிகளால் அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த இணைய வழிக் கலந்துரையாடல்கள் மலையக அரசியலில் பல்வேறு அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளை தற்காலிகமாகவேணும் ஒன்றிணைப்பதில் இந்தியத் தூதரகம் வெற்றி கண்டுள்ளது. இந்தியத் தூதரகத்தின் அனுசரனை இன்றி மலையக தொழிற்சங்க அரசியலில் இந்த ஒன்றிணைவு சாத்தியமாகி இருக்காது.

• மலையகத் தலைமைகள் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்

மலையக தொழிங்சங்க அரசியல் தலைமைகளின் ஒன்றிணைவினால் மலையகத்தில் மாற்றம் ஏற்படும் என எதிர் பார்ப்பார்களாயின் அது பகல் கனவாகவே இருக்கும். ஏனெனில் இவர்கள் அணைவரும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே. இவர்களுக்கும் இவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் பிரதேச சபை ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கான ஏணியே மலையக மக்கள். இதற்கும் அப்பால் தேசியக் கட்சிகளுக்கு மலையக வாக்குகளை வாரி வழங்கும் "தரகர்கள்". அதற்கு ஈடாக தமக்கு அமைச்சுப் பதவிகளையும் தாம் சார்ந்தவர்களுக்கு உயர் பதவிகளையும் பெற்றுக் கொடுப்பதே இவர்களின் அரசியல் பேரம். மலையகத் தலைமைகளின் இந்தப் பேரங்களில் வாக்களித்த மலையக மக்களுக்கு ஒன்றுமில்லை.

ஆட்சிபீடம் ஏறும் தேசியக் கட்சிகள் அமைக்கும் அரசாங்கத்தில் பங்காளிகளாவது அமைச்சுப் பதவிகளைப் பெறுவது சுகபோகங்களை அனுபவிப்பது இறுதியில் "இவர்களால் மலையகத்திற்கு ஏதும் பிரயோசனமில்லை. இவர்களுடனான உறவை நாங்கள் அறுத்துக் கொள்கின்றோம்" என்று கூறி இன்னொரு கூட்டணிக்குத் தாவுதல். அடுத்த தேர்தல்வரை கூட்டு பிறகு அதே பல்லவி என மலையக தொழிற்சங்க அரசியல் சுழன்று கொண்டிருக்கின்றது.

• மலையகம்குறித்த தூர நோக்கோ சிந்தனையோ திட்டங்களோ இல்லை

மலையகத் தலைமைகளிடம் மலையகம்குறித்த தூர நோக்கோ சிந்தனையோ திட்டங்களோ இல்லை. இவர்கள் இன்றும் தெழிற்சங்க பாணியிலேயே அரசியல் நடத்துகின்றனர்.

• தேசியக் கட்சிகளின் ஊது குழல்

மொத்தத்தில் ஆட்சிபீடம் ஏறும் தேசியக் கட்சிகளின் ஊது குழலாகவே மலையகத் தலைமைகள் செயற்படுகின்றன. இதுவே இவர்களது இணக்க அரசியல்.

அதேவேளையில் மலையகத் தெழிற்சங்க அரசியல் "சொந்த பந்தங்களின் கூடாரம்". அங்கு மாற்றானுக்கு இடமில்லை. நேர்மை நாணயத்திற்கு கிஞ்சித்தும் இடம் இல்லை. மலையகத் தொழிற் சங்க அரசியல் கட்டமைப்பே ஊழலுக்குள் மூழ்கிக் கிடக்கின்றது.

• எனவே "மலையக தெழிற் சங்க அரசியலில் ஒட்டு மொத்தமாக மாற்றம் அவசியம்".
• மலையக தெழிற்சங்க அரசியலில் புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும்.
• மலையகம் புதிய பாதையில் பயணிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.
• மலையகம் ஊழல் அற்ற அரசியல் பயணத்தில் பயணிக்க வேண்டும்.
• மலையக மக்களின் இருப்பு, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
• மலையக தொழிங்சங்க அரசியல் சொந்த பந்தங்களுக்கு அப்பால் ஜனநாயக மயமாகுதல் வேண்டும்.
• மலையக இளைஞர் சமூகத்தின் எதிர்கால திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மலையகத்தில் மாற்றம் நோக்கிய பயணத்தில் மலையகத்தின் அணைத்து தரப்பினரும் இணைந்து கொள்ள வேண்டும். தென்னிலங்கையின் மாற்றத்திற்குள் மலையகத் தலைமைகள் பயணிக்கட்டும். மலையகத்தின் மாற்றத்தை நோக்கி மக்கள் அணி திரள வேண்டும்.

Email : vathevaraj@gmail.com



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# போகாத ஊருக்கு வழிகாட்டும் யாழ் சர்வதேச விமான நிலையம்

- யாழிலிருந்து நடராசா லோகதயாளன்




தமிழர்களின் இனப்பிரச்சனைகான தீர்ப்பும், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத் திறப்புக்கும் இடையே ஒரு ஒற்றுமை உள்ளது போலுள்ளது. இரண்டுமே இதே-அதோ என்று கூறப்படுகிறதே தவிர செயல்வடிவம் பெற்று முழுமையாக நடைமுறைக்கு வருமா் அந்த அதிசயம் நடைபெற்றாலும் எப்போது நடைபெறும் என்பதெல்லான் அந்த கந்தனுக்கும் புத்தனுக்கும் மட்டுமே வெளிச்சம்.

இப்போது யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தொடர்பிலும் யாழ்ப்பாணம் சர்வதேச விளையாட்டு மைதானம் போன்றே அறிக்கை விளையாட்டே இடம்பெறுகின்றது. வேண்டும்-வரும்-வராது-உண்டு ஆனால் தற்போதில்லை இப்படி வார்த்தை விளையாட்டுக்கள்.

இந்த விமான நிலையம் 2019ஆம் ஆண்டு திறக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு பூட்டப்பட்டபோதே நான் பகிரங்கமாக எழுதினேன் இங்கே மீண்டும் "விமானம் வரும் ஆனால் வராது ஏன்று". அப்போது பலருக்கு அதன் அர்த்தம் புரியவில்லை ஆனால் இப்போது புரிகின்றது. இந்த நிலையில் பலரும் பல முயற்சிகளை மேற்கொள்வதாக வாய்ப்பேச்சு மட்டும் இடம்பெறுகின்றது.

இதற்கு ஒரு படி மேலேபோய் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தை இறக்க இந்தியா விரும்பவில்லை என இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 05 ஆம் திகதி ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.

அந்த ஊடகச் சந்திப்பின் போது யாழ்ப்பாணம் விமான நிலையம் திறக்கப்பட்டு, மூன்று வருடங்கள் கடந்தும் அது இயங்காமல் உள்ளமை குறித்து கேள்வியெழுப்பியபோது பதிலளித்த அமைச்சர், "யாழ்ப்பாணம் விமான நிலையம் இயங்குவதற்கு தயாரான நிலையிலையே உள்ளது. ஆனாலும் அங்கு விமானங்கள் வரத்தயாரில்லை, குறிப்பாக இந்திய விமானங்கள் அங்கு தரையிறங்க தயார் இல்லை. அதனாலேயே விமான நிலையம் இயங்காத நிலையில் உள்ளது" என்றார்.

இந்திய விமான நிறுவனங்கள் தமது விமானங்களை யாழ்ப்பாணத்தில் தரை இறக்க தயார் எனில் ஒரு இரவில் விமான நிலையத்தை இயங்க வைக்க என்னால் முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.



யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இயங்க முடியாதமைக்கு இந்தியாதான் தடையாகவுள்ளதா என இந்தியத் தரப்பிடம் வினாவினோம். அவர்கள் ஆச்சரியம் மற்றும் அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்றார்கள். "என்னாது" அவர்களின பதில் தூக்கிவாரிப்போட்டது. அதாவது பலாலியில் இருந்த கண்காணிப்பு இயந்திரம், பணியாளர்கள் எல்லாம் எங்கே என அமைச்சரிடமே கேளுங்கள எனப் பதிலளிக்கின்றனர்.

சரி - அப்படியென்றால் அவற்றை இனியும் கொண்டு வரமுடியுமென்றால் விமானம் வந்து செல்ல என்ன தடை உள்ளது என்றோம்.

"இலங்கையில் விமானத்தை இறக்குவதற்கான அனுமதிகள், ஏற்பாடுகளை தற்போதும் எம்மால் பெறமுடியும் ஆனால் இலங்கை அரசு விமான சேவை நடாத்த முன்வரும் நிறுவனத்திடம் இருந்து விமான நிலையத்திற்கான வரியாக விமானச் சிட்டை விற்பனையின்போது பெறப்படும பணத்தை இலங்கை அரசிற்கு டொலரில் செலுத்த வேண்டும் என பெரும் முட்டுக்கட்டையான கோரிக்கையை முன் வைக்கின்றது".

இந்தியாவில் விற்பனை செய்யும் விமான சிட்டைகள் இந்திய நாணயத்தில் விறகும்போது அதற்கான பணத்தைக்கூட டொலரில் மாற்றிக்கொள்ள முடியும். அதற்கான வங்கி வசதிகள் மற்றும் உள்நாட்டு-வெளிநாட்டு நாணய நிறுவனங்கள் ஏராளம் உள்ளன. எனவே அங்கு டொலரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் இருக்காது. இந்தியப் பொருளாதரமும் காத்திரமாக உள்ளது.

ஆனால் இலங்கையில் விற்பனை செய்யும் விமான சிட்டையை இலங்கை நாணயத்தில் விற்றுவிட்டு இலங்கை அரசிற்கு செலுத்தும் வரிப்பணத்தை டொலரில் செலுத்துவதானால் இலங்கை நாணயத்தை எங்கே கொடுத்து டொலரை பெறுவது? அரசே அந்நியச் செலாவணிக்கு சிரமப்படுகிறது. கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் மோசமான நிர்வாகச் செயல்பாடுகள் காரணமாக நாட்டின் கையிலிருப்பில் இருந்த அந்நியச் செலாவணி வங்குரோத்து நிலைக்குச் சென்றது. நாட்டில் டொலர்கள் கையிருப்பு இல்லாததால்தான் இறக்குமதிகளைச் செய்ய முடியவில்லை. அதன் காரணமாக விலைவாசிகள் விண்ணைத்தொடும் அளவிற்கு ஏறின. இந்த ஆண்டு தொடக்கம் முதல் ஒன்பது மாதங்களிற்கு எரிபொருள் தட்டுப்பாடு நிலவியது. மக்கள் மணி கணக்கில் வரிசையில் நிற்கும் அவலம் அரங்கேறியது.

உள்ளூரின் விமான சிட்டைகளை விற்பனை செய்பவர்கள் உள்ளூர் ரூபாவை டொலராக மாற்றலாம் என்றால் இலங்கை முதலீட்டு சபையோ அல்ல விமானப் போக்குவரத்து அதிகார சபை குறைந்த பட்சம் இலங்கையின் எந்த வங்கியோ இதற்கு உடன்பட மறுக்கின்றனர். அப்படியான நிலையில் டொலரை எங்கிருந்து எப்படி?



இந்த விடயத்தை அதாவது இலங்கையில் - இலங்கை நாணயத்தில் விற்ற விமானச் சிட்டைகளிற்கு - இலங்கை அரசிறகான வரியை - விமான சேவை நடாத்தும் நிறுவனம் - இலங்கை நாணத்திலேயே செலுத்துவதற்கான அனுமதியை - எந்தவொரு அமைச்சராவது பெற்றுத்தர முன் வந்தால் உடன் விமான சேவை நடாத்த முடியும். அதற்கும் விமான நிலையத்தில் இருந்து எடுத்துச் சென்ற உபகரணங்களை மீளக் கொண்டு வர வேண்டும எனப் பதிலளித்தார்.

இலங்கையின் 5வது சர்வதேச விமான நிலையமாக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் அறிவிக்கப்பட்டபோதும் தற்போது இழுத்து மூடப்பட்ட நிலையில் காணப்படுவது தொடர்பில் கடற்றொழில அமைச்சரிற்கு அப்பால் இந்தியாதான் காரணம் என இலங்கையின் சிவில் விமான போக்கு வரத்துதுறை அமைச்சர் நிமால் சிறிபாலடீ சில்வாவும் நாடாளுமன்றில் பகிரங்கமாக அறிவித்துள்ளார். அவ்வாறானால் இலங்கையில் விமான சேவை நடாத்த வந்த எயார் அலியன்ஸ் பொய் உரைக்கின்றதா என்ற கேள்வி எழுந்ததை அடுத்து அதை ஆராய முற்பட்டேன்.

அப்போதுதான் பூதம் கிளம்பியது. இந்தியாவில் மட்டும் அல்ல இலங்கையில் விற்கும் விமானச் சிட்டைக்குமான வரியை முதன் மாதம் தொடக்கமே இலங்கை அரசிற்கு டொலரில் அளிக்க வேண்டும் என்று இலங்கை அரசு கோருகின்றது என்பதை அறிய முடிந்தது. அவ்வாறானால் இலங்கை நாணயத்தை எங்கே செலுத்தி எவ்வாறு டொலரை பெறுவது? அதாவது இலங்கை அரசே இலங்கை நாணயம் வேண்டாம் எனக்கூறும்போது அதனை பெற எவர் முன் வருவார் என்பதே விமான சேவையை நடாத்த முன் வந்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட முட்டுக்கட்டை. இதை கமுக்கமாக இலங்கை அரசு மூடிமறைத்து, விமானத்தை இயக்கும் நிறுவனங்கள் மீது பழியைப்போட முற்படுவது தெரியவந்தது. நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு விடயத்தை முன்வைத்து, தமது பொருளாதார குளறுபடிகளை வெளியுலகிற்கு தெரியப்படுத்தாமல் பொறுப்பற்ற மழுப்பலான ஒரு காரணத்தை முன்வைப்பது தெரிய வருகிறது.






அரசின் இந்த யதார்த்தமற்ற நிலைப்பாட்டிற்கு பிறகும் இந்த விடயத்திற்கும் ஓர் மாற்று யோசணையை விமான சேவை நிறுவனங்கள் முன் வைத்தன. அதாவது "முதல் ஆறு மாதங்களிற்கு மட்டும் வரிப் பணத்தை இலங்கை நாணயத்திலேயே ஏற்றுக்கொள்ளுங்கள் அதன பின்பு விமான சேவையின் தேவை அதிகரிக்கும்போது டொலரில் செலுத்தி விமான சிட்டையை பெறுவதற்கு ஊக்குவித்து அந்த டொலரில் இருந்து இலங்கை அரசிறகான வரிப்பணத்தை டொலரில் செலுத்துகின்றோம் என விடுத்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளாதமையே தற்போதுள்ள முட்டுக்கட்டை" என தெரிவிக்கின்றனர்.

உணமையில் யாழ்ப்பாணம் விமான நிலைய சேவை இலங்கை அரசிற்கா இந்திய நிறுவனத்திற்கா தேவை என்ற கேள்விக்கு எழுவதை தவிர்க்க முடியவில்லை. அடிப்படையில் இந்தியாவிலிருந்து பலாலிக்கான விமான சேவை இந்த விமான சேவை வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களிற்கே மிகவும் முக்கியமானது என்பதை இலங்கை அரசு உளப்பூர்வமாக உணர்ந்து அதை ஏற்றுக்கொள்கிறதா என்ற சந்தேகம் வலுத்து வருகிறது. யாழ்ப்பாணம் விமான நிலையம் முழுமையான செயற்பாட்டிற்கு வந்தால், ஆண்டுதோறும் இலங்கை வரும் லட்சக்கணக்கான புலம்பெயர்ந்த தமிழர்கள் கொழும்பைவிட இந்த விமான நிலையத்தையே பயன்படுத்த முன்வருவார்கள் என்பதே யதார்த்தம்.

அப்படியென்றால் கொழும்பு விமான நிலையத்தின் வருமானம் பாதிக்கப்படும் என்ற எண்ணமும் இலங்கை அரசிற்கு இருக்கக் கூடும். தெற்கு வாழ வேண்டும்-வடக்கு தேய வேண்டும் என்பது தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசியல்வாதிகளின் நிலைப்பாடாக உள்ளது என்று சிவில் சமூகத்தினர் சுட்டிக்காட்டி வருந்துகின்றனர்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ழுமையான செயற்பாட்டிற்கு வந்தால், மேற்குலக நாடுகள் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு அதை ஒரு வாயிலாக பயன்படுத்தும். பன்னாட்டு வருகை அங்கு அதிகரிக்கும். சுற்றுலா மேம்படும்.




இதேநேரம் நாட்டின் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடான போக்குவரத்திற்கு தற்போது விமான நிலைய வரியாக 60 டொலர் செலுத்தப்படும் நிலையில் "உலகில் விமானமே வராத விமான நிலையம்" என்று விமர்சிக்கப்படும் மத்தள ராஜபக்ச விமான நிலையத்திற்கான வரி இரண்டு ஆண்டுகளிற்கு முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அதே போன்று ஏன் யாழ்ப்பாணம் விமான நிலையத்திறகும் வரியை தள்ளுபடிம் சலுகையை வழங்கக் கூடாது என்று வடக்கு வாழ் பொதுமக்களின் கேள்விக்கு அரசிடமிருந்து மௌனமே அரசிடமிருந்து பதிலாக வருகிறது.

மக்கள் கோரும் அந்த வரிச்சலுமையை முழுமையாக இரத்து செய்ய மறுத்த மத்திய அரசு தற்போது 50 வீத சலுகையை வழங்க முன் வந்துள்ளது. அதாவது 60 டொலர் என்னும் வரியை 30 டொலராக குறைக்க இணக்கம் தெரிவித்திருக்கின்றது. இதனால் இந்திய நிறுவனங்கள் ஆர்வம் காட்ட கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இந்த வரிச் சலுகை இல்லாத ஊருக்கு பாதை காட்டியதாக அமையக்கூடாது (பூட்டிய விமான நிலையத்திற்கு) எனபதே பலரின் விருப்பம்.

# ஸ்ரீதர் திரையரங்கம்: மின் கட்டணம் செலுத்தாததால் இணைப்பு துண்டிப்பு

**- எமது யாழ் செய்தியாளர்**



ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலகமான ஸ்ரீதர் திரையரங்கிற்கு கடந்த 1998ஆம் ஆண்டு முதல் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதனால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் உள்ள ஸ்ரீதர் சினிமா தற்போது ஆஸ்திரேலியாவின் வசித்துவரும் மஹேந்திரரவிராஜிற்கு சொந்தமானது.

உள்நாட்டுப் போர் 1990களின் தொடக்கப் பகுதியில் உச்சகட்டத்தை எட்டியிருந்த நிலையில் 1991 ஆம் ஆண்டு ஸ்ரீதர் சினிமாவை இழுத்து மூடும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து தனியார் நிறுவனம் ஒன்று அதை தமது கிடங்காகப் பயன்படுத்தி வந்தது. அந்த தனியார் நிறுவனம் அங்கிருந்து வெளியேறிய பிறகு தனிப்பட்ட பாதுகாப்பு நபர்களை தான் நிறுத்தியிருந்ததாகவும், அவர்களை துப்பாகி முனையில் மிரட்டி வெளியேற்றி 1996 ஆம் ஆண்டு தமது பூர்வீகச் சொத்தான அந்த இடத்தை ஈ.பி.டி.பி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா வலிந்து ஆக்கிரமித்ததாக அதன் உரிமையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதை காலி செய்யுமாறு 25 கடிதங்கள் மற்றும் 1000 தொலைபேசி அழைப்புகளுக்கு மேலாகச் செய்தும் அமைச்சர் அதை மீண்டும் தம்மிடம் கையளிக்கவில்லை என்று மஹேந்திரரவிராஜ் ஆதங்கப்படுகிறார்.

ஈ.பி.டி.பி தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அந்த இடத்தை தனது அலுவலகமாகத் தொடர்ந்து பயன்படுத்திவரும் நிலையில் ஸ்ரீதர் திரையரங்கிற்கான மின்சாரக் கட்டணத்தை 1998ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில் செலுத்தவில்லை என்று இலங்கை மின்சார சபை கூறுகிறது.

அவ்வகையில் 1698170408 என்ற மின் இணைப்பு எண் கொண்ட அந்த திரையரங்கிற்கான மின்சாரக் கட்டணம் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 75 சதம் என்று காணப்பட்டதாகவும் 2014ஆம் ஆண்டிற்கு பின்பு தற்போது 2022 ஆம் ஆண்டுவரையில் மாத சிட்டைக்கான கொடுப்பனவு மட்டுமே செலுத்தப்படும் நிலையில் நிலுவைப் பணம் செலுத்தவில்லை என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.



CEYLON ELECTRICITY BOARD

Telephone | Fax | email
THE SECRETARY
E.P.D.P OFFICE
STANLEY ROAD
JAFFNA

Dear Sir / Madam

Statement of account Number : 1698170408
This refers to your Dated 28/11/2014 A detail breakup statement of your account
1998 October To 2014 October is given below as requested please

| Date | Description | Debits | Credits | Balance |
|---|---|---|---|---|
| 1998 Oct | B/F Balance | | | [illegible] |
| | Normal bill | [illegible] | | [illegible] |
| [illegible] | GS Tax | [illegible] | | [illegible] |
| 1998 Nov | | | | |
| | Minimum bill | [illegible] | | [illegible] |
| [illegible] | GS Tax | [illegible] | | [illegible] |
| 1998 Dec | | | | |
| | Normal bill | [illegible] | | [illegible] |
| [illegible] | GS Tax | [illegible] | | [illegible] |
| 1999 Jan | | | | |
| | Minimum bill | [illegible] | | [illegible] |
| [illegible] | GS Tax | [illegible] | | [illegible] |
| 1999 Feb | | | | |
| | Normal bill | [illegible] | | [illegible] |


Summary

| Year | Full Amount | Interest | Credits | Balance |
|---|---|---|---|---|
| 1998 | 12,004.01 | | | |
| 1999 | 34,935.45 | | 13,154.07 | |
| 2000 | 145,201.07 | | 17,000.00 | |
| 2001 | 440,343.91 | | | |
| 2002 | 292,604.54 | | | |
| 2003 | 74,062.53 | | | |
| 2004 | 40,872.50 | | | |
| 2005 | 14,064.63 | | | |
| 2006 | 111,106.09 | | | |
| 2007 | 196,737.43 | | | |
| 2008 | 243,131.82 | | | |
| 2009 | 408,363.00 | | | |
| 2010 | 309,420.00 | 253,736.81 | | |
| 2011 | 249,340.50 | 262,381.31 | | |
| 2012 | 185,663.26 | 794,250.54 | | |
| 2013 | 413,920.00 | 1,005,790.88 | | |
| 2014 | 523,882.52 | 2,952,953.34 | 383,629.32 | |
| Total | 3,695,653.26 | 5,269,112.88 | 413,783.39 | 8,550,98 |

| | |
|---|---|
| Bill | 3,695,653.26 |
| Interest | 5,269,112.88 |
| Total Bill | 8,964,766.14 |
| Credits | 413,783.39 |
| Balance | 8,550,982.75 |

இவ்வாறு செலுத்தாத 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 75 சதத்திற்கும் தற்போது 8 ஆண்டுக்கால வட்டிப் பணத்துடன் ஒரு கோடி ரூபாவினை தாண்டியதன் அடிப்படையிலேயே தற்போது மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தைச் செலுத்துமாறு கோரி 2014ஆம் ஆண்டு முதல் மின்சார சபை கடிதம் அனுப்பியபோதும் அதற்கான பணம் இதுவரை செலுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்த இடத்தில் யாரும் இல்லை என்பதால் அதை கட்சி அலுவலகமாக தான் பயன்படுத்துவதாகவும், வலிந்த ஆக்கிரமிப்பு ஏதும் இடம்பெறவில்லை, அதை உரிமையாளரிடம் மீண்டும் கையளிப்பதில் தங்களுக்குத் தயக்கம் ஏதுமில்லை இல்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மேற்கோள் காட்டி ஈ.பி.டி.பி கட்சி தெரிவித்துள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் - கனடா
நடாத்தும்
21வது நத்தார் இன்னிசை ஆராதனை
DRIEBERG COLLEGE ALUMNI ASSOCIATION
CHAVAKACHCHERI – CANADA
Presents the
21st ANNUAL CHRISTMAS CAROL SERVICE
திகதி: சனிக்கிழமை நவம்பர் 26, 2022
Saturday November 26, 2022
நேரம்: மாலை 6:00 6:00 p.m.
இடம்: Milliken Wesleyan Methodist Church
3 Clayton Drive, Markham, Ontario L3R 8N3
(Kennedy Rd and North of Steeles Ave. E.)
பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 21வது நத்தார் இன்னிசை ஆராதனையில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.
Contacts:
Gunam Hunt 905-472-0379 Rajagopal Mathialagan 905-294-5419
Mohan Devabalan 905-831-5736 Reginald Thevaranjan 416-446-2965
Ebenezar Thevasagayam 647-895-8001 Ajitha Sri-Thambirajah 416-750-8809

(18 பக்கத் தொடர்ச்சி)

## இலங்கை பட்ஜெட்: தீர்வுகளைத் தராத தீர்வுத் திட்டம்

**- கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி & சிவா பரமேஸ்வரன்**

அந்த துர்ப்பாக்கிய நிலை நாட்டின் பணவீக்கம் 70 சதவீதத்தை எட்டிய நிலையில் ஏற்பட்டுள்ளது. இதனால் மாதாந்தம் ஐந்து இலட்சம் ரூபா வருமானம் கொண்ட ஒருவர் சுமார் ஒன்றரை இலட்ச ரூபாவை வரியாகச் செலுத்த வேண்டும். அதே வேளை அந்த ஐந்து இலட்சம் ரூபாவின் பொருள் கொள்வனவு ஆற்றல் வெறும் ஒன்றரை இலட்ச ரூபா மாத்திரமே. இந்நிலையில் மத்தியதரக் குடும்பங்கள் பல தொழில் புரியும் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவர். ஒரு நாட்டின் பட்ஜெட் மக்களை வறுமையிலிருந்து மீட்பதாக இருக்கவேண்டும். ஆனால் 2023 ஆண்டிற்கான இலங்கையின் பட்ஜெட் வறுமையை அதிகரிப்பதற்கான பட்ஜெட்டாகவும் ஊழல் அரசியல்வாதிகளுக்கு செலவு செய்ய தேவையான பணத்தைக் கறக்கும் பட்ஜெட்டாகவும் அமைந்துள்ளது.

"அரகலய" என்பது ஏதோ ஒருமுறை நிகழ்ந்து - ஒரு ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றப்பட்ட சம்பவம் - அதற்கு முதல் நாள் ஆதரவு தெரிவித்து மறு நாள் பதவிக்கு வந்ததும் கோத்தாவைவிடவும் மோசமாக நடந்து அவர்கள் மீது அரசின் அடக்குமுறையை ஏவிவிட்டு ஒடுக்கிவிடலாம் என்று அரசியல் அனுபவசாலியான ரணில் விக்ரமசிங்க நினைப்பாராயின் அது கனவுலகின் வாழ்வதற்கு சமமாகும். அண்மையில் நடைபெற்ற மக்கள் எழுச்சி எப்போது வேண்டுமானாலும் மீண்டும் ஏற்படக் கூடும் அப்போது கோத்தாவிற்கு ஏற்பட்ட நிலை ரணிலுக்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது அவர் கையிலேயே அடங்கியுள்ளது.

தன்னை ஒரு முதிர்ந்தம் பன்னாட்டு மதிப்புப் பெற்ற அரசியல்வா (வியா) தியாக காட்டிக்கொள்ள விழையும் ரணில், நாட்டிற்கு எவ்விதமான பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லாத நிலையில், பாதுகாப்பு செலவினங்களுக்கு பட்ஜெட்டில் மூன்றில் ஒரு பங்கும், நாட்டை நிகழ்காலத்தில் காத்து எதிர்காலத்தில் தூக்கி நிறுத்தும் கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளுக்கு கூட்டாக பாதுகாப்பு துறையைவிடக் குறைவாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது சரியா, அது நியாயமானதா, நாட்டு நலனில் அக்கறையுள்ள விஷயமா, பசியில் தவிக்கும் மக்களிடம் இருக்கும் பானை அடித்துப் பிடுங்குவது சரியா போன்ற கேள்விகளை தனது மனசாட்சியிடம் கேட்க வேண்டும்.

நாளை அவரும் சாமானிய பொதுமக்களில் ஒருவராகும் நிலை ஏற்படலாம்-ஏற்படும்.

கட்டுரையின் தொடக்கத்தில் மேற்கோள் காட்டியுள்ள திருக்குறளில் கூறியபடி இலங்கை வாய்மை மற்றும் வல்லமையான நல்லலரசா என்று கேட்டால் அதற்கான பதில் எம்மிடம் இல்லை.

கட்டுரையாளர்கள் பற்றி:

கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி - பேராசிரியர் பொளுதாரதுறை - கொழும்பு பல்கலைக்கழகம்

சிவா பரமேஸ்வரன் - விருது பெற்ற மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்


ஈழமுரசு
ஈழமுரசும்
கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்
அவர்களின்
68
அகவை விழா
தலைவன்
பிறந்தநாள்
அதுவே
தமிழன்
நிமிர்ந்த நாள்!
வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்
இருப்பாய்
தமிழா
நெருப்பாய்!
மாபெரும் எழுச்சி விழா
2022
நவம்பர்
26
சனிக்கிழமை
மாலை
5 மணி
இடம்:
Metropolitan Centre
3840, Finch Ave East;
Scarborough ON., M1T 3T4
(Kennedy & Finch)
ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்
தொடர்புகளுக்கு: (647) 657 8566, (647) 783 3466



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள்

1023



## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் திருகோணமலை

"உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராக் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே."

திருகோணமலை அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயிலின் வளர்ச்சியில் தன்னலங் கருதாத பல சிவாச்சாரியார்கள் இன்று வரை பணியாற்றியுள்ளனர். ஆலயத்தில் மகோற்சவம் ஆரம்பித்த காலத்திலிருந்து பிரம்மஸ்ரீ ராஜாமணிக் குருக்களும், பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்களும் மாறி மாறிச் சில காலம் சேவை செய்து வந்துள்ளார்கள். இவர்களின் பின் பிரம்மஸ்ரீ எஸ். எஸ். சர்மாக் குருக்கள் பொறுப்பேற்று நடத்தி வந்துள்ளார். இவரின் பின் பிரம்மஸ்ரீ பூரண சண்முகரெத்தினக் குருக்கள் நெடுங்காலமாக இக்கோயிலில் சேவையாற்றியுள்ளார். இவரின் மறைவிற்குப் பின் பிரம்மஸ்ரீ ராஜாமணிக் குருக்களுடைய மகன் சிவஸ்ரீ இராஜேஸ்வரக் குருக்கள் சேவை செய்துள்ளார். இவரின் பின் ஆலயத்தின் பிரதம குருவாகச் சிவஸ்ரீ ராதாகிருஷ்ணக் குருக்கள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றார். திருகோணமலை அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோவிலில், சுவாமி உலாவருவதற்குரிய பல அழகிய வாகனங்கள் காணப்படுகின்றன. அத்தோடு 1994 ஆம் ஆண்டின் பின் கிளி, மூன்று மயில்கள், மூன்று கமலங்கள் மூன்று யானைகள், குதிரைகள் நான்கு, எலி, ஆட்டுக்கடா, மூன்று எருதுகள் ஆகியனவும், அழகிய சப்பரமும், தண்டிகையும் செய்யப்பட்டு வீதிஉலாவிற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இக்கோயிலில் நித்திய, நைமித்திய பூசைகள் காலந்தவறாமல் சிவன், முருகனுக்குரியனவாக நடைபெற்று வருகின்றது. வைகாசி விசாகத்தைத் தீர்த்தத் தினமாகக் கொண்டு பத்து நாட்களுக்கு வருடாந்தத் திருவிழாக்கள் மிக விமரிசையாக நடைபெறும். தேர்த் திருவிழா நிறைவுபெற்ற மறுநாள் ஆலயத் தீர்த்தக்கேணியான சரவணப் பொய்கையில் சுவாமி தீர்த்தமாடுவார். மாதந்தோறும் நடைபெறும் கார்த்திகைத் திருவிழா மிக விசேடமாக நடைபெறும். கந்தசஷ்டி நடைபெறும் ஆறுநாட்களும் உள்ளூர் வெளியூர் அடியார்கள் ஆலயத்தில் தங்கியிருந்து விரதம் அனுட்டிப்பர். இவற்றோடு திருக்கார்த்திகைவிழா, திருவெம்பாவை, தைப்பூசம், சிவராத்திரி போன்றவையும் இவ்வாலயத்திலே சிறப்பான முறையிலே கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனி உத்தரத்திலே ஆரம்பித்து ஆவணி மாதம் வரையும் கந்தப்புராணப் படிப்பும், கந்தசஷ்டி நாட்களில் மயூரகிரிப் புராணப் படிப்பும் நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்திற்குப் பழமையான ஊஞ்சற் பாட்டும், துதிப்பாடல்களும் இருக்கின்றன.


மக்கள் நலமே வாழ, பல்வேறு நெறிமுறைகளையும் கடைப்பிடிப்பது அவசியமாகின்றது. இந்த வகையில் உள்ளமும் உடலும் ஒருங்கே சிறப்பெய்தும் வகையில் வாழ்வுக்குகந்த நெறிகளைச்சமயத்தோடு ஒன்றிணைத்து வாழ வழிகாட்டும் மதமாகக் காணப்படுவது இந்துமதம். தற்காலத்தில் இந்துமதத்தின் ஆழமான கருத்துக்கள் மக்களிடையே பரவாது, வெறும் மேலோட்டமான கிரியைகள் மட்டுமே இந்துமதமெனக் கருதும் வழக்கம் காணப்படுகின்றது. விஞ்ஞான அறிவு மேலோங்கிய இக்காலத்தில் ஆலயங்களிலே நடைபெறும் அபிஷேகம், அர்ச்சனைகள், கிரியைகள் ஆகியவற்றின் அர்த்தங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பது, இந்துமதத்தின் அடிப்படை நோக்கத்தை அறிய உதவுவதாக அமையும்.

உயிர் வாழ்வதற்குப் பிராணவாயு அவசியமானது. ஈரப்பதமுள்ள காற்று மண்டலத்திலே பிராணவாயுவின் அழுத்தம் அதிகரிக்கின்றது. இதன் காரணமாகப் பிராணவாயுவின் மூலக்கூறுகள் அதிக அளவிலே கிடைக்கின்றன. ஒத்த அதிர்வுள்ள ஒலியலைகள் காற்று மண்டலத்திலே எதிர் மின்னோட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றது. இந்த மூலக்கூறுகள் உடல், உள வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. இவை விஞ்ஞானம் கூறும் உண்மைகள். நமது முன்னோர் உடலையும், உள்ளத்தையும் சீராக்கி உயிர்வளர்க்கும் பணியை ஆலயங்களின் மூலமே உருவாக்கினார்கள். தண்ணீர், எண்ணெய், பால், தயிர், தேன், நெய், விபூதி, போன்ற பொருட்களைக் கொண்டு அபிஷேகங்கள் செய்வதாலும், யாகங்களினாலும், கர்ப்பக்கிரகத்துள்ளும், ஆலயத்திலும் பிராணவாயுவின் மூலக்கூறுகளை அதிகரிகரிக்கச் செய்து, அவைகளைக் காற்று மண்டலத்தில் பரவச் செய்தார்கள். ஓம் என்ற பிரணவத்தையும், வேத மந்திரங்களையும், திருமுறைகளையும், அர்ச்சனையால் ஒலிக்ச் செய்து, அதனால் எழும் ஒத்ததிர்வு ஒலியலைகளைக் காற்றிலே பரவச் செய்தார்கள். இவைகளின் மூலம் நுண்ணிய பிராணக்கூறுகளும், நாதக்கூறுகளும், ஆலயத்தில் குழுமியுள்ள பக்தர்களை அடைய வகை செய்யப்படுகின்றது. மக்களுடைய உள்ளத்திற்கும், உடலுக்கும் இதனால் நன்மை விளையுமென்பது ஒன்றும் புதுமையல்ல. இது விஞ்ஞானம் கண்ட உண்மை.

ஆலயத்திலுள்ள கருவறை ஒத்ததிர்வுக் கலமாகவும், மூலவிக்கிரகம் ஒலியலைகளின் எதிரொலிப் பிம்பமாகவும், மூலவிக்கிரகத்தின் கீழேயுள்ள யந்திரத் தகடு ஆற்றலைச் சேமிக்கும் கலமாகவும், சந்நிதானத்திலுள்ள காற்று மண்டலம் ஆற்றலைக் கடத்தும் பாதையாகவும், விளங்குகின்றது. அங்கே வழிபடுவோர் ஆற்றலை ஏற்பவராக விளங்குகின்றனர். இது நம்முன்னோர் கண்டறிந்த விஞ்ஞான மெஞ்ஞானம். எனவே இந்துசமயத்தின் ஆலய வழிபாடு விஞ்ஞானப் பாதையில் மெஞ்ஞானத்தைப் படைக்கும் ஆற்றல் மிக்க சாதனம் என்பதைப் புரிந்து கொள்வது மிக அவசியம். இதன் அடிப்படையிலேயே நித்திய, நைமித்திக கருமங்களும், மகாகும்பாபிஷேகங்களும், யாகங்களும், ஆலயங்களிலே நடைபெற்று வருகின்றன.

ஆலயங்கள் சமுதாய மேம்பாட்டு நிலையங்களாகவும் விளங்கவேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் முன்றலில் 4200 சதுரஅடியுடைய திருமண மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இம் மண்டபத்தில் இலவச சங்கீத, நடன, மிருதங்க வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றது. அத்தோடு ஆலய சேவையாளர்கள் குடியிருக்கக் குடிமனைகள் மூன்றும், தனித்து வசிப்போருக்காக ஐந்து அறைகளும் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்திற்குத் தேயையான பால், தயிர். நெய் ஆகியவற்றைப் பெறுவதற்கு ஏற்றவகையில் மாட்டுத்தொழுவமும் அமைக்கப்பட்டு ஆனினம் பராமரிக்கப்படுகின்றது. ஆலயச் சுற்றாடலில் அமைந்துள்ள திருமுருகானந்த வாசிகசாலை மக்களின் அறிவுப் பசிக்கு விருந்திடுவதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாகத் திருகோணமலையில் அமைந்துள்ள அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் விளங்குகின்றது.

*வளரும்...*



# ரப்பர் தோட்ட தொழிலாளர்கள் போராட்டம்; அதிமுக செய்த துரோகத்தை திமுக அரசும் தொடர்வது கொடுங்கோன்மை: சீமான்



''ரப்பர் தோட்டங்கள் மூலம் ஒவ்வொரு நாளும் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு அரசுக்கு வருமானம் வரும் நிலையில், கூலி உயர்வு தரமறுத்து தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பினை உறிஞ்சும் தமிழ்நாடு அரசின் செயல் அப்பட்டமான உழைப்புச் சுரண்டலேயாகும்'' என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கடந்த 6 ஆண்டுகளாக உரிய ஊதிய உயர்வினை வழங்காமல் காலம் தாழ்த்தி வரும் தமிழ்நாடு அரசின் அலட்சியப்போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது.

ஊதிய உயர்வு வழங்குவதாகப் பல முறை பேச்சுவார்த்தைக்கு அழைத்து, உறுதியளித்துப் பின் மீண்டும் மீண்டும் ஏமாற்றி, ரப்பர் தோட்டத் தொழிலாளர்களை வீதியில் இறங்கிப் போராட வைத்திருப்பது மிகுந்த மனவேதனை அளிக்கிறது.கடந்த 1964 ஆம் ஆண்டு, பெருந்தலைவர் காமராசர் ஆட்சிக் காலத்தில், தொழிற்வாய்ப்புகள் குறைந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையோர கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கத்தோடு கீரிப்பாறை, காளிதேசம், பரளியாறு, மணலோடை, மருதம்பாறை உள்ளிட்ட 9 கோட்டங்களில் அரசு ரப்பர் தோட்டக் கழகம் தொடங்கப்பட்டது. ஏறத்தாழ 5000 ஹெக்டர் பரப்பளவில், 5000 தோட்டத் தொழிலாளர்களுடன் தொடக்கத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வந்த அரசு ரப்பர் கழகம் இரு திராவிடக் கட்சிகளின் ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையினால் தற்போது முற்று முழுதாகச் சீரழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஊதிய உயர்வு, பணி நிரந்தரம், விடுமுறை ஊதியம் உள்ளிட்ட எவ்வித உரிமையும் வழங்காத காரணங்களினால் தற்போது குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதிலும் தினக்கூலிகளாகப் பணிபுரிந்து வரும் 900 தொழிலாளர்களை வேலையில்லை என்று கூறி வாரத்தில் பல நாட்கள் அதிகாரிகள் திருப்பி அனுப்பும் கொடுமைகளும் அரங்கேறுகின்றது. அதுமட்டுமின்றி, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைமுறைப்படுத்த வேண்டிய ஊதிய உயர்வு ஒப்பந்தமும் கடந்த 2019 ஆண்டு முதல் நிறைவேற்றப்படவில்லை என்பதும் வேதனையின் உச்சமாகும்

.மேலும், ரப்பர் தோட்டங்களில் மறுநடவுப் பணிகளை உரிய காலங்களில் மேற்கொள்ளத் தவறுவதோடு, அவ்வப்போது செய்யவேண்டிய களையெடுப்புப் பணிகளையும் நிர்வாகம் முறையாகச் செய்வதில்லை. அது மட்டுமின்றி ரப்பர் கழகத்திற்குச் சொந்தமான நிலங்களை வனத்துறையிடம் ஒப்படைத்து தங்களின் வாழ்வாதாரத்தை அழிக்க நினைப்பதாகவும் ரப்பர் கழக அதிகாரிகள் மீது அங்குப் பணியாற்றும் தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வினை வழங்குவதாக, ஓராண்டுகாலத் தாமதத்திற்குப் பிறகு அன்றைய அதிமுக அரசு 31.12.2021 அன்று உறுதியளித்த நிலையில், ஆட்சி முடியும்வரை அதனை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டது. அதன்பின் ஆட்சிக்கு வந்த திமுக அரசுடனும் ரப்பர் தோட்டத் தொழிற்சங்க நிர்வாகிகள் பல முறை பேச்சுவார்த்தை நடத்தியும், இன்றுவரை ஊதிய உயர்வினை வழங்காமல், அதிமுக அரசு செய்த அதே துரோகத்தை திமுக அரசும் தொடர்வதென்பது கொடுங்கோன்மையாகும்.

இந்நிலையில், கடந்த 16.08.2022 அன்று சென்னையில், தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர், வனத்துறை அமைச்சர், தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற முத்தரப்புப் பேச்சுவார்த்தையில் நாளொன்றுக்கு ரூ.40 ஊதியம் உயர்த்தி வழங்க உறுதி அளிக்கப்பட்டது. ஆனால், அதையும் நாகர்கோயில் ரப்பர் கழக அதிகாரிகள் தர மறுப்பதால், தொழிலாளர்கள் தொடர்ப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திமுக அரசின் அமைச்சர்கள் அளித்த உறுதிமொழியை, அதிகாரிகள் நிராகரிப்பார்கள் எனில் இந்த அரசை நடத்துவது யார்? அரசிற்கு அதிகாரிகள் கட்டுப்பட மறுக்கிறார்களா என்ற கேள்விகளும் எழுகிறது .ரப்பர் தோட்டங்கள் மூலம் ஒவ்வொரு நாளும் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு அரசுக்கு வருமானம் வரும் நிலையில், கூலி உயர்வு தரமறுத்து தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பினை உறிஞ்சும் தமிழ்நாடு அரசின் செயல் அப்பட்டமான உழைப்புச் சுரண்டலேயாகும். தற்போதைய வேலை நிறுத்தத்தால் நாள்தோறும் அரசுக்கு வரவேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் நட்டம் ஏற்பட வழி வகுத்திருப்பது திமுக அரசின் நிர்வாகத் தோல்வியையே காட்டுகிறது. ஆகவே, 67 கட்ட பேச்சு வார்த்தைக்குப் பிறகும் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் திமுக அரசு, தனது பிடிவாதப்போக்கினை இனியாவது கைவிட்டு, ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வினை உடனடியாக வழங்குவதோடு புதிய ஊதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும், தினசரி கூலிகளாகப் பணியாற்றும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன்.

மேலும், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனமான அரசு ரப்பர் கழகத்தைத் தனியாருக்குத் தாரைவார்க்கும் நோக்குடன் செயல்படும் அதிகாரிகளை உடனடியாகப் பணியிடமாற்றம் செய்து, ரப்பர் கழகத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் லாபகரமாக இயங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் வெல்லும் வரை அவர்கள் முன்னெடுக்கும் அறப்போராட்டத்திற்கு நாம் தமிழர் கட்சி தோள் கொடுத்து துணை நிற்கும் என்றும் உறுதியளிக்கிறேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

## ராஜீவ் கொலை வழக்கில் நளினி உள்பட 6 பேரும் விடுதலை: உச்ச நீதிமன்றம்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக இருந்து வரும் நளினி, முருகன், ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த 7 பேரில் ஒருவரான பேரறிவாளனை கடந்த மே மாதம் 18ம் தேதி உச்ச நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்றம் தனது தனிப்பட்ட அதிகாரமான சட்டப்பிரிவு 142ஐ பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்தது. பேரறிவாளன் விடுதலையைத் தொடர்ந்து இந்த வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் மற்ற 6 பேரும் விடுதலை கோர சட்ட வழிவகை ஏற்பட்டது.இந்நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதம் நளினி மற்றும் ரவிச்சந்திரன் இருவரும் தனித்தனியே உச்ச நீதிமன்றத்தில் தங்களை விடுதலை



செய்யக் கோரி மனு தாக்கல் செய்தனர்.

அந்த மனுவில், பேரறிவாளனை விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பில், பேரறிவாளனின் நன்னடத்தை குறித்து, பரோலில் வெளிவந்தபோதும், சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொண்டதாக மேற்கோள் காட்டியுள்ளது. தாங்களும் அதேநிலையில் உள்ளதால், தங்களையும் இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும். மேலும்,இந்த வழக்கில் தங்களை விடுதலை செய்யும் வரை தங்களுக்கு இடைக்கால ஜாமீன் வழங்க வேண்டும் எனவும் மனுவில் கோரியிருந்தனர்.இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர் கவாய் தலைமையிலான அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கில் சிறையில் இருந்துவரும், 6 பேரின் நன்னடத்தை குறித்து தமிழக அரசும், மனுதாரர்கள் தரப்பிலும் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.சிறையில் இந்த 6 பேரின் நன்னடத்தையைக் கருத்தில் கொண்டு, நளினி, முருகன் உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். இந்த வழக்கில் இருந்து ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்ட பேரறிவாளனைப் போலவே இந்த 6 பேரும் நிவாரணங்களைப் பெற தகுதியானவர்கள் என்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.


## சென்னையில் பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ மூன்றுக்கும் ஒரே டிக்கெட்: சென்னையில் செயலியைக் காட்டி பயணிக்கும் புதிய திட்டம்

சென்னையில் பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் என்று அனைத்திலும் பயணம் செய்ய ஒரே டிக்கெட் முறையை கொண்டு வர சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்துக் குழுமம் முடிவு செய்துள்ளது.சென்னையில் பெருநகர ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமத்தின் முதல் கூட்டம் இன்று (நவ.17) முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சென்னை முழுவதும் பொதுப் போக்குவரத்து முறைகளில் பயணம் செய்ய ஒரே டிக்கெட் அறிமுகம் செய்யும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்த திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக ஆய்வு ஒன்றை நடத்த சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:சென்னையில் அரசு பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ என மூன்று வகையான போக்குவரத்து முறையை பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்துகின்றனர்.இதில் அரசு பேருந்துகளில் நேரடியாக டிக்கெட் பெற்றுக் கொள்ளும் முறைதான் உள்ளது. ரயில்களில் யூடிஎஸ் செயலி முறையிலும், நேரடியாகவும் டிக்கெட் பெறலாம்.

மெட்ரோ ரயில்களில் பயணம் செய்ய, பயண அட்டை, செயலி மற்றும் நேரடியாக டிக்கெட் பெறும் வசதி உள்ளது.பொதுமக்கள் ஒரே பயணத்தில் இந்த மூன்றிலும் பயணம் செய்ய வேண்டும் என்றால் தனித் தனியாக டிக்கெட் எடுக்க வேண்டி உள்ளது. இதற்கு தீர்வு காண ஒருங்கிணைந்த டிக்கெட் முறை அமல்படுத்தப்படவுள்ளது.இதற்கு தனியாக செயலி ஒன்று உருவாக்கப்படவுள்ளது.இந்த செயலியில் புறப்படும் இடம் மற்றும் சேரும் இடத்தை பதிவு செய்ய வேண்டும்.அதன்பிறகு எத்தனை போக்குவரத்து முறைகளில் பயணம் செய்ய போகிறீர்கள் என்பதை தேர்வு செய்ய வேண்டும்.நீங்கள் தேர்வு செய்த முறையின் அடிப்படையில் பயணத்தின் மொத்த தொகை எவ்வளவு என்பது தெரியவரும். அதற்கான தொகையை செலுத்தி டிக்கெட் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த டிக்கெட் மூலம் நீங்கள் தேர்வு செய்த பொது போக்குவரத்து முறைகளில் பயணம் செய்யலாம்.உதாரணமாக, நீங்கள் வேளச்சேரியில் இருந்து விமான நிலையம் செல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளலாம். இந்த பயணத்தில் வேளச்சேரியில் இருந்து மத்திய கைலாஷ் வரை பறக்கும் ரயில், மத்திய கைலாஷ் முதல் கிண்டி வரை பேருந்து, கிண்டியில் இருந்து விமான நிலையம் வரை மெட்ரோ என்று மூன்று வகையான பொதுப் போக்குவரத்துகளில் ஒரே டிக்கெட் கொண்டு பயணம் செய்யலாம்.


தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
மார்க்கம் ஃபெயார்கிறவுண்ட்ஸ்’இல்
மாவீரர் துயிலும் இல்லம்
நவம்பர் 27-2022 ஞாயிற்றுக்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
ரொறன்ரோ
MARKHAM FAIR
Markham Fairgrounds
10801 McCowan Road
Markham, ON L3P 3J3
(McCowan Road & Elgin Mills Road East)
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
27-11-2022 ஞாயிற்றுக்கிழமை
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2022
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
Tel: 514-660-5891
ஒட்டாவா
27-11-2022
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex
Hall - A
1701 Woodroffe Avenue
Ottawa, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.com/tamilremembrance

மலேசிய மடல்

# நளினி உள்ளிட்ட அறுவரின் விடுதலைக்கு எதிர்ப்பு: காங்கிரஸ் கட்சியின் தமிழ்த் துரோகம் தொடர்கிறது மூளை வறண்ட ஜெய்ராம் ரமேஷுக்கு நெஞ்சில் ஈரமும் இல்லை



நக்கீரன்

**கோ**லாலம்பூர், நவ.13:

இந்தியாவின் மேநாள் பிரதமர் இராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட நளினி உள்ளிட்ட 6 ஆறு பேரை, 31 ஆண்டுகள் கழித்து அண்மையில் நவம்பர் 11-ஆம் விடுதலை செய்ததற்கு காங்கிரஸ் கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர், இந்த அறுவரின் விடுதலையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் இந்தியாவின் ஆன்மாவிற்கு இது எதிரானது என்றும் தெரிவித்திருக்கிறார்.

இரட்டை ஆயுள் தண்டனைக் காலத்திற்கும் மேலாக சிறையில் கழித்துவிட்ட இவர்களை இன்னமும் என்னதான் செய்ய வேண்டும் என்று இந்த ஜெய்ராம் ரமேஷ் நினைக்கிறார் என்று தெரியவில்லை.

பொதுவாக தமிழ்த் துரோகத்தை தங்களின் ஆழ்மனதில் கொண்டிருக்கும் காங்கிரஸ் கூட்டத்தினரின் உள்ளத்தில் ஈர உணர்வும் இல்லை என்பதை இந்த ஜெய்ராம் ரமேஷ் நிரூபித்திருக்கிறார்.

காந்தியைக் கொன்றதும் அதற்கான சதியைத் தீட்டியதும் மராத்தியா சித்பவன பார்ப்பனர்கள். அவர்களில் நாதுராம் விநாய கோட்சே மட்டும் தூக்கில் இடப்பட்ட நிலையில் அவரின் சகோதரன் கோபால கோட்சே உட்பட மற்றவர்களை 16 ஆண்டுகளில் விடுதலை செய்த காங்கிரஸ் கட்சி, அதே பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்த ஆர். வெங்கட்ராமன், பி.வி. நரசிம்ம ராவ் போன்றவர்களை இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் பிரதமராகவும் நியமித்தது.

இந்திரா காந்தியைக் கொன்ற சீக்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மன் மோகன் சிங் 10 ஆண்டுகள் பிரதமராக இருந்திருக்கிறார். அதே சமூகத்தைச் சேர்ந்த ஜெயில் சிங் குடியரசுத தலைவராக இருந்திருக்கிறார்.



ஆனால், ஒரு தமிழர் குடியரசுத் தலைவராகவும் பிரதமராகவும் வராமல் பார்த்துக் கொண்டது காங்கிரஸ். அதன், தமிழ் விரோதப் போக்கு இன்றுவரை தொடர்கிறது.

ராஜீவ் காந்தி கொலையில் பன்னாட்டு சதி உள்ளது என்பது தெரிந்தும், ஈழத் தமிழர்களையும் தமிழகத் தமிழர் பேரறிவாளனையும் குறிவைத்து அவர்களை மடக்கியபின், அந்த அளவோடு ராஜீவ் காந்தி கொலை வழைக்கை நிறுத்திக் கொண்டது இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு.


பேரறிவாளனின் வாக்குப் பதிவை ஒட்டியும் வெட்டியும் மறைத்தும் தகிடுதத்த வேலையைச் செய்த அன்றைய கார்த்திகேயன் தலைமையிலான புலனாய்வுப் பிரிவினர், திட்டமிட்டு பேரறிவாளனின் இளமை வாழ்வை சூறையாடினர்.

அப்படி இருந்தும், 30 ஆண்டுகளுக்குப் பின் பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்த காங்கிரஸ், இப்பொழுது நளினி உள்ளிட்ட அறுவர் விடுதலை செய்யப்பட்டதையும் எதிர்க்கிறது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட இடைவார் வெடிகுண்டை அணிந்திருந்த தாணு, ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட 1991 மே 21-ஆம் நாளுக்கு முன்பு நான்கு ஐந்து நாட்களுக்கு ஒரு காங்கிரஸ் பிரமுகர் வீட்டில்தான் தங்கி இருந்தார். அவரை ஏன் விசாரிக்காமல் விட்டுவிட்டனர்?

றாஜீவ் காந்தி இறந்த திருப்பெருந்தூர் நாடாளுமன்றத் தொகுதியின் ஆஸ்தான மக்கள் பிரதிநிதியாக விளங்கியவர் மரகதம் சந்திர சேகர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவரின் மகளான லதா பிரியகுமார் வீட்டில்தான் தாணு தங்கி இருந்திருக்கிறார்.

அதைப்போல, கூட்டணிக் கட்சியின் தலைவர்களான ஜெய லலிதா, வாழப்பாடி இராமமூர்த்தி இருவரும் ராஜீவ் காந்தி கலந்து கொண்ட அன்றையக் கூட்டத்தை புறக்கணித்தது எதனால் என்பது குறித்து விசாரிக்கப்டவில்லை.



அப்போது ஹவாலா பண மோசடி தொடர்பான பன்னாட்டு குற்றவாளியான சந்திர சாமிக்கு ராஜீவ் காந்தி கொலையில் தொடர்புண்டு என்று பரவலாக பேசப்பட்ட நிலையில் அதைப்பற்றியும் விசாரிக்காமல் மூடி மறைத்தனர்.

தேர்தல் பரப்புரைக்காக ராஜீவ் காந்தி பயன்படுத்திய தனியார் விமானம் ஹைதராபாத்தில் 1991 மே 21 பிற்பகலில் பழுதான நிலையில், திருப்பெரும்புதூர் கூட்டத்தை அடுத்த நாளுக்கு ஒத்திவைத்துவிட்டு, பெங்களூருக்கு ஓய்வெடுக்க சென்ற ராஜீவ் காந்தி, அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த நிலையில், விமானம் அவசர அவசரமாக பழுதுபார்க்கப்பட்டு ராஜீவை வலுக்கட்டாயமாக எழுப்பி தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்த அன்றைய கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவி மார்கரெட் ஆல்வாவும் விசாரிக்கப்படவில்லை.

இவ்வளவு இருண்ட பக்கங்களைக் கொண்டிருக்கும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தமிழர்களை மட்டும் குறி வைத்த காங்கிரஸ், இப்பொழுது தண்டனைக் காலம் முடிந்து அதுவும் 30 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் விடுதலை செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது.

இந்தியாவின் ஆன்மா என்பது, தமிழர்கள் அழிக்கப்படுவதிலும் ஒழிக்கப்படுவதிலும்தான் அடங்கி இருக்கிறதா? பத்து ஆண்டுகளாக இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு வகிக்கக்கூட தகுதி இல்லாத காங்கிரஸ், தமிழர் விரோதப் போக்கை மட்டும் விடாமல் கடைப்பிடித்து வருகிறது.

அண்மையில், காங்கிரஸ் கட்சியில் தலைமை இடைவெளி ஏற்பட்ட நேரத்தில், தமிழகத்தைச் சேர்ந்த மூத்தத் தலைவர் ப.சிதம்பரம் காங்கிரஸ் தேசியத் தலைவராக வராமல் பார்த்துக் கொண்டது, அதன் தேசிய தலைமை.

தமிழ் நாட்டைச் சேர்ந்த அப்துல் கலாமை பாரதிய ஜனதாக் கட்சி குடியரசுத் தலைவர் ஆக்கியது. பாஜக, தமிழர்களை மதிக்க விரும்பி இதைச் செய்யவில்லை என்பது வேறு கதைத் பாஜக காலமெல்லாம் கையில் எடுக்கும் மத-சாதி அரசியலின் வெளிப்பாடு என்பது ஊரும் உலகும் அறிந்தது.

அதேவேளை, முதல் தவணை முடிந்து 2-ஆவது தவணைக்கும் அப்துல் கலாமை (அதே மத அரசியலுக்காக) குடியரசுத் தலைவர் ஆக்க முயன்ற பாஜக முயற்சிக்கு முட்டுக்கட்டைப் போட்டவர் சோனியா.

தற்பொழுது, தேசிய அரசியலில் பாதாளத்தில் விழுந்து கிடக்கும் நிலையிலும், தமிழர் விரோதப் போக்கை மட்டும் காங்கிரஸ் சளைக்காமல் உயர்த்திப் பிடிக்கிறது. காலமெல்லாம் இந்த நிலை நீடிக்காது. காரணம், காங்கிரஸ் கட்சி மரண வாயிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**




# இந்தியாவை ஆள்வது கோட்சே கும்பல்தான்

## ஓய்வுபெற்ற நீதிபதி அரி பரிந்தாமன்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், நவ.15:

இன்றைய இந்தியாவை ஆள்வது காந்தியைக் கொன்ற கோட்சே கும்பல்தான் என்று சென்னை உயர்நீதிமன்றத்தின் மேநாள் நீதியரசர் அரி பரந்தாமன் அதிரடியான அதேவேளை நூற்றுக்கு நூறு சரியான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கருத்தைக் கேட்டு அதிர்ந்த சத்தியம் தொலைக்காட்சியின் செய்தியாளர் ஏ. முக்தார் அகமது, "என்ன ஐயா இப்படி ஒரே போடாகப் போட்டுவிட்டீர்கள்" என்று வினவ, ஆமாம், நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன் என்று மறுமொழி கூறியிருக்கிறார் அரி பரந்தாமன்.



காந்தியை உயிரோடு கொன்று 70 ஆண்டுகளைக் கடந்தபின் இன்னமும் ஆத்திரம் தீராமல் அவரின் உருவ பொம்மையை சுட்டு ஆத்திரத்தை தணித்துக் கொள்கின்றனர் கோட்சே கூட்டத்தினர் கோட்சே இந்தியாவின் தியாகி என்கின்றனர். அவருக்கு சிலை வைக்க முற்படுகின்றனர் அவரின் பெயரில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் நூலகம் திறக்கின்றனர்.



இதை யெல்லாம் பார்த்தால், இந்தியாவை உயர்சாதி பார்ப்பனரான கோட்சே கும்பல்தான் நாட்டை ஆள்கிறது என்பது புரியவில்லையா என்றும் அந்த மேநாள் நீதி அரசர் கேள்வி எழுப்பி உள்ளார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தியின் அகிம்சை வழிக்கு எதிரான தீவிரவாதப் பிரிவிற்கு தலைமையெற்ற பால கங்காதர திலகர், மராட்டிய சித்பவன பார்ப்பன சாதியைச் சேர்ந்தவர். மாகவி பாரதியும் திலகரின் பின்னால் அணிவகுத்தவர் என்பது இன்னும் குறிப்பிடத்தக்கது; திலகரின் சாதியைச் சேர்ந்த பார்ப்பனர்கள் காந்தியைக் கொன்ற வழக்கில் கைது செய்யப்பட்டாலும் 16 ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 33 ஆண்டுகளாக 7 தமிழர்கள் சிறையில் வாடுகின்றனர் இவர்கள் மட்டுமல்ல் சந்தன வீரப்பனின் சகோதரரும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் 1992 டிசம்பர் 6-இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டபின் நடைபெற்ற கலவரம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட இஸ்லாமியர்களும் 30 ஆண்டுகளாக சிறையில் வாடுகின்றனர்.




ஆனால், நேரு இறந்ததும் காந்தி கொலைச் சதி சம்பந்தப்பட்ட விஷ்ணு கர்கரே, மதன்லால் பாகுவா, சங்கர் கிஸ்டியா, கோபால கோட்சே, தத்தா த்ரேயா பர்ச்சுரே ஆகியோர் 16 ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டனர்.

இதுதான் இன்றைய இந்தியா. அரசியல் சட்டத்தை மதிக்க வேண்டிய குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர்கள் அனைவரும் அரசியல் சட்டப்படி நடக்காமல் ஆளுங்கட்சிக்கு அனுசரனையாகவே நடந்து கொள்கின்றனர். பொதுமக்கள்தான் சட்டப்படி நடக்கவேண்டி உள்ளது என்றெல்லாம் சத்தியம் தொலைக்காட்சியில் "நேருக்கு நேர்" என்னும் அங்கத்தில் அரி பரந்தாமன் வெடித்திருக்கிறார்.

9 மாதங்களுக்கு முன் நடைபெற்ற இந்த நேர்காணல் குறித்து, இன்று நினைவுகூர வேண்டிய தேவை என்னவென்றால், காந்தியைக் கொன்ற பார்ப்பனனான நாதுராம் விநாயக கோட்சே தூக்கில் இடப்பட்ட நாள் இன்று (நவம்பர் 15) அதற்கேற்ப இந்தக் காணொளியும் இப்பொழுது சமூக வலைதளங்களில் மீண்டும் பகிரப்படுகிறது.

நாதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே இருவருக்கும் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்ட நிலையில், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட மற்ற அனைவரும் 1964 மே 27-இல் நேரு மறைந்ததும் விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. இதைப்பற்றி யெல்லாம் கேட்பார் ஒருவருமில்லை அப்போதும் சரி; இப்பொழுதும் சரி!

ராஷ்டிரிய சுயசேவை சங்கத்தில் (ஆர்.எஸ்.எஸ்.) இந்துத் தீவிரத்தன்மை அந்த அளவுக்கு இல்லை என்று சலித்துக் கொண்டு அதில் இருந்து விலகி இந்து மகா சபையில் சேர்ந்த நாதுராம் விநாய கோட்சே, தான் காந்தியை கொல்லப் போவதாக பல கூட்டங்களிலும் சந்தர்ப்பங்களிலும் பகிரங்கமாக சொல்லி வந்தது குறித்து, அன்றைய காவல் துறைக்கும் தெரிந்திருக்கிறது.

இது குறித்து, பம்பாய் மாகாண உள்துறை அமைச்சர் மொரார்ஜி தேசாய்க்கும் அப்போது தெரிவிக்கப்பட்டது; காங்கிரஸ் கட்சியிலேயே பயணித்து, இந்திரா காந்தியுடன் முரண்பட்டு, இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத ஆட்சியை முதன்முதலில் 1977 இல் அமைத்த அதே மொரார்ஜி தேசாய்தான் இவர்.

மேலும், அப்போதைய இந்திய உள்துறை அமைச்சரும் துணைப் பிரதமருமான வல்லபாய் பட்டேலுக்கும் இது தெரிந்திருக்கிறது. எல்லோரும் அமைதி காத்தனர். மொத்தத்தில் காவல்துறையே காந்தி கொல்லப்படுவதற்கு வழிவிட்டு விலகி நின்றது.

காங்கிரஸ் கட்சி, காவல் துறை என அனைத்து இடங்களிலும் ஆர்.எஸ்.எஸ். ஊடுறுவி இருக்கிறது என்பதற்கு இவையாவும் சான்றுகள்.

சாதிக்கொரு நீதி சொல்லும் கீதை, ஒரேக் குற்றம் இழைக்கும் பார்ப்பனர்களுக்கு ஒருவிதமாகவும் மற்றவர்களுக்கு வேறு விதமாகவும் தீர்ப்பு சொல்லும் மனு நீதி ஆகியவற்றின் அடிப்படையில்தான் இன்றைய மோடி ஆட்சி செயல்படுகிறது என்பதற்கு ஆயிரம் சாட்சிகள் உள்ளன.

சான்றுக்கு ஒன்று!

குஜராத்தில் இஸ்லாமிய கர்ப்பினிப் பெண்மீது பாலியல் வன்முறை புரிந்ததுடன் நில்லாமல் அவரையும் அவரின் 6 வயது மகளையும் கொன்ற பார்ப்பனர்கள், சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், "பொதுவாக பார்ப்பனர்கள் நல்லவர்கள் என்பதால் அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்" என்று குறிப்பிட்டு இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பரிந்துரையின் பெயரில் குஜராத் உள்துறை அமைச்சு அண்மையில் விடுதலை செய்தது;

மொத்தத்தில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே மண்ணின் மைந்தர்களான திராவிட இனத்திற்கும் வந்தேறிகளான பார்ப்பனர்களுக்கும் தொடங்கிவிட்ட பண்பாட்டு - ஆன்மிகப் போர் இன்னமும் தொடர்கிறது.

பார்ப்பனர்களுக்கும் சமஸ்கிருதத்திற்கும் எதிரான இந்த உரிமைப் போரில், தமிழும் சமஸ்கிருதமும் கலந்து உருவான கலப்பு மொழியினர் அனைவரும் ஒதுங்கி நிற்கின்றனர் ஓரோர் வேளையில் ஆரியத்திற்கு வெண்சாமரமும் வீசுகின்றனர் போகிற போக்கில் தமிழியத்திற்கு எதிராக காயும் நகர்த்துகின்றனர்.

செம்மொழியான தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமே இன்று ஆரியத்தையும் பார்ப்பன அதிகாரத்தையும் எதிர்த்து நிற்கின்றனர்.

இதில், பார்ப்பனர்கள் தொடர்ந்து வென்று வருவதற்குக் காரணம், திராவிட இனத்தில் சோரம்போன ஒரு தரப்பினர் இன்னமும் ஆரிய பார்ப்பனர்களின் அடிவருடிகளாக வீழ்ந்து கிடப்பதுதான். இப்படிப்பட்டவர்கள், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஊடுறுவி உள்ளனர்.

இதை யெல்லாம் நல்ல தமிழ் நெஞ்சத்தினர் உணரும் நாள் எந்நாள்!

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 282
***** ***** ***** *****

கவிஞர் தியாரு

உன்பாதை எதுவென்று
உன்னுள்ளம் சொல்லட்டும்!
உன்பயணம் எங்கெங்கும்
உன்னெண்ணம் வெல்லட்டும்!
உன்வியர்வைத் துளியெல்லாம்
வைரமாக மாறட்டும்!
உன்னுழைப்பின் கோடுகளாய்
வெற்றிரேகை சேரட்டும்!

வாழ்வதொரு முறைதானே;
வசந்தங்கள் கூடட்டும்!
வாழ்க்கையொரு கலைதானே;
விழிகளதைத் தேடட்டும்!
வாழ்க்கையிது சுவைதானே;
வாழையிலை போடட்டும்!
வாழ்த்துவது சுகம்தானே;
உள்ளங்கள் பாடட்டும்!



# இவ்வார ராசிபலன்

**18-11-2022 வெள்ளி தொடக்கம் 24-11-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** ஏற்றுமதி தொழிலால் லாபம் தரும் வாரம். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். வெளியூர் பயணம் வெற்றியைத் தரும். நல்லோர் நட்பு கிட்டும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். அதிருப்தி அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவம் போகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். கல்வியில் தடை ஏற்பட்டு விலகும். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். தாய், தந்தை உதவி உண்டு. வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி ஒழியம். வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். தீர்த்த யாத்திரை செல்லும் வாய்ப்பு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,9,4,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,C




**ரிஷபம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குதூகலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். பொறாமைகள் விலகும். வேலை பளு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். புதிய பொறுப்புக்கள் வரும். அரசியலில் பொறுமை தேவை. பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X




**மிதுனம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும் வாரம். மாற்று இன நட்பு பெருகும். வேற்று மதத்தினரால் உதவி உண்டு. தோற்றப்பொலிவு கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபக்காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். வெகுமதி தேடி வரும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் எண்ணம் ஈடேறும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டு கிட்டும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வியாபாரம் லாபம் தரும். வாழ்த்துச் செய்திகள் வந்து சேரும். சொத்துச் சேர்க்கையுண்டு. ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரண சேர்க்கையுண்டு. மன சந்தோ'ம் கூடும். அந்தஸ்து உயரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். முன்கோபத்தை குறைக்கவும். புதிய முயற்சியில் சற்று கவனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் குறையும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டம். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை குறையும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். தகுதிகள் உயரும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. காரியத்தடை விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் மேலோங்கும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடி வரும். ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப் போக்கு விலகும். பூமியால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் பெருகும். புத்திரர் வழியில் நன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர்,
அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,V



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** சோம்பல் அதிகரிக்கும் வாரம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புதமான வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மாற்று யோசனை பலன் தரும். வேலைவாய்ப்புக் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். நிம்மதியாக இருப்பீர்கள். உத்தியோக உயர்வு உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மைகள் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனைத் தீரும். வியாபாரம் சிறக்கும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். தொழில் போட்டிகள் உருவாகி மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். ஸ்திர சொத்து சேரும். முயற்சியில் வெற்றி உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதைகள் நீங்கும். நன்மைகள் பெருகும். பதவியில் பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். நிர்வாக அலைச்சல் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,T




**கன்னி:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். உடன்பிறப்பால் உதவி உண்டு. நண்பர்களால் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. பெண்கள் பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் முடிவிற்கு வரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மையுண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பழையக்கடன் வசூலாகும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**துலாம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பழையக்கடன் வசூலாகும். மாற்று இன நட்பு பெருகும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித்தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பாதிப்புக்கள் அகலும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் உண்டாகும். ஆன்மீகச் சிந்தனை அதிகமாகும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் பெருகும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். மேன்மைகள் தொடரும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சாதனை படைக்கும் வாரம். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். பொறாமைகள் அதிகரிக்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. ஏற்றங்கள் அமையும். கௌரவம் அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**விருச்சிகம்:** சுபசெய்தி வரும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களைகட்டும். யோகமான காலம். ஆடை, அணிகலன்கள் சேரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். திருப்புமுனை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். விரயங்கள் அதிகமாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். சாதனையான எண்ணம் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q

(தொடர்ச்சி 29 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** மாற்றங்கள் நிகழும் மகத்தான வாரம். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. மனோ பயம் அகலும். வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பாராட்டுக்கள் அதிகமாகும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். திருமண வாய்ப்பு வரும். பொறியியல் துறை லாபம் தரும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கனவுகள் பலிதமாகும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். பணவிரயம் ஏற்படும். தேகப்பலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**மகரம்:** நலம் விளையும் வாரம். நன்மைகள் அதிகமாகும். நட்புகள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் வெளிப்படும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கடன் பிரச்சனை உருவாகும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். உள்ளம் மகிழும். மனைவியால் அமைதி உண்டாகும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுப காரிய செய்தி வரும். வேலைபளு அதிகரிக்கும். தொழில் மாற்றம் ஏற்படும். சந்தோஷம் அலைமோதும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச்சலுகைகள் கிட்டும். தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். பணிமாற்றம் ஏற்படும். பெருமைகள் தேடி வரும். வெற்றிகள் குவியும். அரசு வகை ஆதாயம் கிட்டும். பழிச்சொல் தேடி வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். தீய எண்ணம் விலகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். வில்லங்கம் விலகும். செயல்திறமை வெளிப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,T




**கும்பம்:** எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய வாரம். எதிலும் நிதானம் தேவை. எடுத்தக் காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். காரியம் கைக்கூடும். தொழில் லாபம் கிட்டும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். வீண் வம்பு விலகும். நிதி நிலைமை சீராகும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் விலகும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தொலைதூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். சுபக்காரியம் கைகூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். வேற்று மதத்தினரால் உதவிகள் உண்டு. தோற்றப்பொலிவு கூடும். மாற்று எண்ணம் உதயமாகும். அளவான பேச்சு நன்மை தரும். பயணம் நன்மை தரும். மங்களகரமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,T




**மீனம்:** சாதனை படைக்கும் வாரம். சோதனைகள் நீங்கும். சகோதர உறவு பலப்படும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வீண் செலவு கூடும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய தொழிலமையும். தனவரவு பெருகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். திக்கற்ற நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைபளு கூடும். அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். பணியில் கவனம் தேவை. சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் ஏற்படும். படிப்பில் ஆர்வம் கூடும். ஆரோக்யம் சீராகும். தெய்வீகப் பற்று கூடும். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிதி நிலைமை சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மதுரை மீனாட்சி அம்மன்,
அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# அன்பின் தொனி - 671

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே -** Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு -** Worship your Creator

**5. மிருகங்களைப் பலியிட்டனர் -** Offering animal sacrifices

மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள், பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ, எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள், அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப் துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார். **- யாத்திராகமம் 32: 6-8**

அப்பொழுது எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்துகொண்டு அதை ஆயத்தம்பண்ணி, நெருப்புப்போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள் என்றான். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி, அதை ஆயத்தம்பண்ணி: பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள், ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். **- 1 ராஜாக்கள் 18: 25-26**

பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று லிக்க வோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி, பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனான படியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள். அல்லாமலும் பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டு வந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்.
**- அப்போஸ்தலர் 14: 11-13**

**6. பான (மது) பலி -** Libations

அப்பொழுது அவர்: அவர்கள் பலியிட்ட பலிகளின் கொழுப்பைத் தின்று, பானபலிகளின் திராட்சரசத்தைக் குடித்த அவர்களுடைய தெய்வங்களும் அவர்கள் நம்பின கன்மலையும் எங்கே? அவைகள் எழுந்து உங்களுக்குச் சகாயம் பண்ணி உங்களுக்கு மறைவிடமாயிருக்கட்டும்.
**- உபாகமம் 32: 37-38**

அந்நியதேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும், அவர்கள் செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தமாட்டேன், அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன்.
**- சங்கீதம் 16: 4**

நீங்கள் பச்சையான சகல மரத்தின்கீழும், விக்கிரக தேவர்களோடே மோகாக்கினியில் வெந்து, பள்ளத்தாக்குகளிலே கன்மலை வெடிப்புகளின் கீழ்ப் பிள்ளைகளைச் கொன்றுபோடுகிறவர்கள். பள்ளத்தாக்குகளிலுள்ள வழவழப்பான சிலைகளிடத்தில் உன் பங்கு இருக்கிறது, அவைகள், அவைகளே உன் வீதம், அவைகளுக்கு நீ பானபலியை வார்த்து, போஜனபலியையும் செலுத்துகிறாய், இவைகளின்மேல் பிரியப்படுவேனோ?
**- ஏசாயா 57: 5-6**

எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள், அவர்கள் வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள், பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள். அவர்கள் எனக்கா மனமடிவுண்டாக்குகிறார்கள்? தங்கள் முகங்கள் வெட்கத்துக்குட்படும்படி அவர்கள் தங்களுக்கே அல்லவோ மனமடிவுண்டாக்குகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
**- எரேமியா 7: 17-18**

எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்து, வானராக்கினிக்குத் தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளைவார்ப்போம், நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம், அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம். நாங்கள் வானராக்கினிக்குத் தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனதுமுதற்கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது, பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம். மேலும் நாங்கள் வானராக்கினிக்குத் தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்த்தபோது, நாங்கள் எங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் அவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகளை வார்த்து, அவளை நமஸ்கரித்தோமோ? என்றார்கள்.
**- எரேமியா 44: 17-19**

அவர்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்திலே நான் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணினபின்பு, அவர்கள் உயர்ந்த ஒரு மேட்டையும் தழைத்த ஒரு விருட்சத்தையும் எங்கெங்கே கண்டார்களோ, அங்கங்கே தங்கள் பலி களைச் செலுத்தி, அவ்விடங்களிலெல்லாம் எனக்கு எரிச்சல் உண்டாக்குகிற தங்கள் காணிக்கைகளைப் படைத்து, சுகந்த வாசனையான தங்கள் தூபங்களைக்காட்டி, தங்கள் பானபலிகளை வார்த்தார்கள்.
**- எசேக்கியேல் 20: 28**

**7. போஜனபலி -** Meal Offering

நான் உனக்குக் கொடுத்த என் அப்பத்தையும், நீ சாப்பிடும்படி உனக்குக்கொடுத்த மெல்லிய மாவையும் நெய்யையும் தேனையும் நீ அவைகளின்முன் சுகந்தவாசனையாகப் படைத்தாய், காரியம் இப்படி ஆயிற்றென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். நீ எனக்குப் பெற்ற உன் குமாரரையும் உன் குமாரத்திகளையும் எடுத்து, அவர்களை அவைகளுக்கு இரையாகப் பலியிட்டாய். **- எசேக்கியேல் 16: 19-20**

**தொடரும்...**



மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 21ஆவது வருடமாக நடத்தும் திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் திருமுறை விழா



## இடம்: சன்னிதி முருகன் ஆலயம்

1085 Bellamy Road, Unit 7-8, Scarborough, Ontario

**காலம்: நவம்பர் 19 சனிக்கிழமை (19-11-2022) மாலை 3:00 மணி - இரவு 9:00 மணி வரை**

தலைவர்: ஈஸ்வரம்பிள்ளை மகேந்திரநாதன் (பேரவைத் தலைவர்)(மின் பொறியியலார்)

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| இறை வணக்கம் : | சிவா இந்திரகுமார் (பேரவையின் பொருளாளர்) |
| தேசிய கீதம் : | |
| தலைமையுரை : | ஈ. மகேந்திரநாதன் (பேரவைத் தலைவர்)(மின் பொறியியலார்) |
| வரவேற்புரை : | ச. ஸ்ரீமுருகன் (உபதலைவர் இந்து சமயப் பேரவை)) |
| ஆசியுரை : | பொ. புவனேந்திரன் ஐயர் (ஆலய ஸ்தாபகர்) |
| வாழ்த்துரைகள் : | செ. சோமசுந்தரம் ( ஆசிரியர் - பேரவைக் காப்பாளர்) |
| | ம. செல்வகுமார் ( பேரவையின் நிர்வாக சபை உறுப்பினர்) |
| சிறப்புரைகள் : | சிவகுருநாதன் தனசக்தி (பேரவை உறுப்பினர்) |
| | பேசும் தலைப்பு - திருமுறையின் மகத்துவம் |
| | கந்தசாமி தவச்செல்வம் |
| | பேசும் தலைப்பு - அப்பர் சுவமிகள் |
| | ஆதித்யன் குணாளன் |
| | பேசும் தலைப்பு - சிவயோக சுவாமிகள்) |
| சொற்பொழிவுகள் : | வைத்தியகலாநிதி இ. லம்போதரன் |
| | பேசும் தலைப்பு - தேவாரம் ஏதுக்கடி |
| | ஆசிரியை கோதை அமுதன் |
| | பேசும் தலைப்பு - திருமுறை காட்டும் வாழ்க்கை நெறி |
| | மீரா இராசையா |
| | பேசும் தலைப்பு - ஞானசம்பந்தரின் திருக்கடைக் காப்பு |
| பண்ணிசை : | பண்ணிசை ஆசிரியை -ஸ்ரீஜனா தயபரன் (வாணி அக்கடமி) |
| நடனம் : | |
| நன்றியுரை : | சிவா இந்திரகுமார் |
| இறை வணக்கம் : | திருமதி சண்முகம் இரத்தினம் |

### திருமுறை மனனப் போட்டி முடிவுகள்

**பாலர்பிரிவு**

முதலாம் இடம்: தியானா தர்சிகன்
இரண்டாம் இடம்: ஆதனன் அனுரா
மூன்றாம் இடம்: சுயந்தன் பிரநித்தா

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்: சுயந்தன் சுயநித்தா
இரண்டாம் இடம்: ஆதிரன் அனுரா
மூன்றாம் இடம்: சாமந்தி தினேஷ்

**மத்தியபிரிவு**

முதலாம் இடம்: ஆக்ஷ்மனன் சயந்தன் சாயி சர்மா
இரண்டாம் இடம்: ஆயுஷ்மனன் சயந்தன் சாயி சர்மர்
மூன்றாம் இடம்: அகரன் சாந்தநாதன்
மூன்றாம் இடம்: ஓவியன் கேதீஸ்வரன்

**மேற்பிரிவு**

முதலாம் இடம்: திவ்வியன் கேதீஸ்வரன்
முதலாம் இடம்: லக்ஷன் வாமதேவன்
இரண்டாம் இடம்: ஆதித்தியன் குணாளன்
இரண்டாம் இடம்: சாம்பவி குணாளன்

### பேச்சுப் போட்டி முடிவுகள்

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்: தணிகா மயூரன்
இரண்டாம் இடம்: சுயந்தன் சுயநித்தர்
மூன்றாம் இடம்: சுகந்தன் எழில்விழி

**மத்தியபிரிவு**

முதலாம் இடம்: ஆக்ஷ்மனன் சயந்தன் சாயி சர்மா
இரண்டாம் இடம்: ஆயுஷ்மனன் சயந்தன் சாயி சர்மா
மூன்றாம் இடம்: சுகந்தன் பூவிழி

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகலமாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## தொடர்புகளுக்கு: 416-724-6240, 416-278-7445

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker
Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca


26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உதயம் 1389 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 18, 2022

# ‘ரணிலை எதிர் கொள்வது?’

## யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை ஒரு பொதுக் கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என்ற கருத்து இந்தியா உட்பட எல்லா மேற்கு நாடுகளிடமும் உண்டு. குடிமக்கள் சமூகங்களை சந்திக்கும் தூதுவர்கள் அதை வலியுறுத்திக் கூறுவது உண்டு. தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை ஒரே குரலில் முன்வைப்பது பலமானது என்று அவர்கள் எப்பொழுதும் கூறுவார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஆண்டுக்குள் ஒரு தீர்வை கொண்டு வரப்போவதாகக் கூறிய பின் அவருடைய அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வாவும் அவ்வாறான ஒரு கருத்தை தெரிவித்து இருந்தார். தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு இடையே முதலில் ஒற்றுமைப்பட வேண்டும் என்று... (தொடர்ச்சி 10ம் பக்கத்தில்)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம்: — பொது மன்னிப்பில் பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா விடுதலை



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 22 வருடங்கள் புதிய மெகசின் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்துவந்த பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி தலையீட்டில் எதுவித நிபந்தனைகளுமின்றி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
(தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)

# கனடிய தமிழ்ச் சமூக சேவையாளர்கள் இருவருக்கு இங்கிலாந்து மகாராணி ஞாபகார்த்த சேவைப் பதக்கங்கள் வழங்கப்பெற்றன





கனடா வாழ் சமூக சேவையாளரும் “கனடா உதவும் பொற்சரங்கள்“ அமைப்பின் நிறுவனருமான திரு விசு கணபதிப்பிள்ளை மற்றும் ஈற்றொபிக்கோ பிராந்திய முது தமிழ் மன்றத்தில் முக்கிய பதவிகளை வகித்து சேவையாற்றிவரும் திரு நவரட்ணம் கருணாரட்ணராஜா ஆகிய இருவருக்கும் அண்மையில் இங்கிலாந்து மகாராணி ஞாபகார்த்த சேவைப் பதக்கம் வழங்கப்பெற்றது.

இந்த சேவையாளர்கள் இருவரதும் கடந்த கால பொதுச் சேவைகளைக் கௌரவித்தே இந்த கௌரவத்தை கனடிய அரசாங்கம் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் **Hon Kirsty Duncan** அவர்கள் அண்மையில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றில் வழங்கினார்கள்.

கனடா உதயன் நண்பர்களான திரு விசு கணபதிப்பிள்ளை மற்றும் திரு நவரட்ணம் கருணாரட்ணராஜா ஆகிய இருவருக்கும் கனடா உதயன் பத்திரிகை ஆசிரிய பீடத்தின் வாழ்த்துக்கள்-

# கனடாவில் முக்கிய துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு 16 தொழில் துறைகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம்

Canada

கடுகதி குடிவரவு நுழைவு முறையின் கீழ் கனடாவில் முக்கிய துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு 16 புதிய தொழில் தறைகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம் என கனடிய குடிவரவு மற்றும் அகதிகள் விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது. கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு கிடைக்கப்பெற்ற இந்த அறிக்கையில் வெளிநாடுகளில் வாழும் தகுதியான விண்ணப்பதாரிகள் நேரடியாக விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

கனடாவில் சுகாதாரப் பாதுகாப்பு, கட்டுமானம் மற்றும் போக்குவரத்து போன்ற முக்கிய துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்ப்பது: 16 புதிய தொழில்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் நிரந்தர வதிவிடத்திற்கு இப்போது தகுதியுடையவர்களாக கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது
(தொடர்ச்சி 5ம் பக்கத்தில்)

# "ஏற்கெனவே எம்மால் சமர்ப்பிக்கப்பெற்ற 10 அம்சக் கோரிக்கைகளின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும்"

## இலங்கை அரசை மீண்டும் வலியுறுத்தும் கனடிய தமிழர் பேரவை

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

2022 ஆகஸ்ட் மாதத்தில் கனடிய தமிழர் பேரவை உட்படப் பல புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியதைத் தொடர்ந்து காத்திரமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென கனடிய தமிழர் பேரவை இலங்கை அரசைக் கேட்டிருந்தது. இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் எதுவும் காணப்படாமையால் இலங்கை அரச தலைவர்கள், அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் கனடிய தமிழர் பேரவை மீண்டுமொரு தடவை தனது கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறது.
(தொடர்ச்சி 8ம் பக்கத்தில்)

# If it Fails Now, it Will Fail Forever: The recent resolution on Sri Lanka and a few genuine concerns of an Eelam Tamil

*- Nimal Vinayagamoorthy - Toronto, Canada*



**In the recently concluded UNHRC, another resolution on Sri Lanka A/HRC/51/5 was passed in October. Over the last 10 years, since 2012, five resolutions have been passed but none have brought respite to the sufferings of the Tamils in the North and East of Sri Lanka.**

**The different governments in Sri Lanka over the past ten years have categorically stated that they would never act against the armed forces; this makes the any number of resolutions passed useless and impotent. The need to fulfill the political aspiration of the aggrieved Tamils in Sri Lanka is nowhere to be seen in the recent resolutions. Democratic elections to the provincial councils are due since a long time.** (தொடர்ச்சி 12ம் பக்கத்தில்)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136